

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

669

கானகத்தீவில் காதல்



550
36

ரா. தணலன்
எழுதியது

தி.க.

ஜனக்குரல் காரியாலயம்
துறையூர், ★ திருச்சி மாவட்டம்.

முதல்பதிப்பு பிப்ரவரி 1951
வீனஸ் பிரசுர வெளியீடு

467
467

விலை ரூ. 1—12—0

அன்பளிப்பு
தி.க. சண்முகசுந்தரம்

ஸ்டார் பிரஸ், துறையூர்,
திருச்சி மாவட்டம்.

கதையைப்பற்றி!

★

திரைக்கதை வரிசையிலே நான்காவது நூலாக கானகத்திலே காதல் வெளிவருகிறது. (அழகு நிலா, செல்வகுமாரி, அந்த இரவு முதலியவை மற்ற நூல்கள்) இவற்றிலே 'அழகு நிலா', இரு நண்பர்கள் என்ற பெயரில் படமாகிக்கொண்டிருக்கிறது என்ற நற்செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கலை என்ற பெருங்கடலிலே எத்தனையோ பெரு நதிகள் கலக்கின்றன. அவை இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் வழியாக எத்தனையோ சிறு கிளைகளாக நூலிலும், அரங்கிலும் எத்தனையோ உருவங்களில் விரிந்துகிடக்கின்றன. இதில் எந்தத்துறைக்குச் செய்யும் உண்மைத்தொண்டும் கலைத் தொண்டே ஆகும்.

வானம்பாடி, ராணி, நரக வாசலில் போன்ற சிறந்த இலக்கியங்களைப் படைத்தபின் இந்தத் திரைக்கதைகளை நூல் வடிவில் அமைக்கும்போது எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. உள்ளூற நினைத்து நினைத்து வருந்தவேண்டியவனாக இருந்தேன் வெறும் கதைகளை இலக்கியங்கள் என்று மக்களின் முன்னால் தள்ளி விடுவதா என்று நெஞ்சு துணுக்குற்றது. ஆனால், அழகு நிலா வெளிவரும் முன்பே பட முதலாளிகளின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது என்பது ஓரளவு ஆறுதல் அளித்தது. கானகத்திலே காதலை அச்சுப் பிரதியாக நானே ஒருமுறை படித்துப்பார்க்க நேரிட்ட போது உண்மையிலேயே எனக்கு மனமகிழ்ச்சி உண்டாகிவிட்டது.

எவ்வளவு அழகான, கட்டுக்கோப்பான கதை . ! பட உலகிற்கு இன்னும் ஒரு நல்ல காணிக்கை ! படிக்கும் ஆர்வம் உள்ளவர்களுக்கு எவ்வளவு அருமையான ஒரு நல்விருந்து...! எத்தனையோ அருமையான கருத்துக்களைத் தத்துவங்களைத் தாங்கி வருகிறது கானகத் திலே காதல் !

பதவிப்பித்தன் ஒருவன் கையிலே உலகம் அறியாத ஒரு சிறுமி அகப்பட்டுக்கொண்டு துடிக்கிறாள். அவள் எவனுக்கு மரண தண்டனை விதித்தாளோ அவனுடனேயே விடுவிக்கப்படுகிறாள். மண்ணாசைப் பித்தர்கள் மடிவது திண்ணம், மக்களின் கடசியின் வெற்றி நிச்சயம் என்ற அடிப்படையான தத்துவத் தின்மேல், ஒரு சாம்ராஜ்ய மன்னனும் அதைக் கவிழ்க்கத் திட்டமிடும் ஒரு சர்வாதிகாரியும் இறுதியிலே சர்வ நாசம் அடைவதாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது இந்தக் கதையிலே ஒரு வெற்றிகரமான புதுமை !

இந்தக் கதையின் மூலம் நான் புதிதாகப் புரிந்து கொண்டது தத்துவங்களுக்காக மாத்திரம் பாத்திரங்களை அமைத்துக்கொண்டு கதைகளைச் சித்தரித்துக் கொண்டுபோவதைவிட நல்ல கதையின் நடுவிலே தத்துவங்களைக் கூறிக்கொண்டு போவது படிப்பவர் மனதிலே ஆழமாகத்தைக்கிறது என்பதுதான், இந்தப் புதிய அனுபவத்தின் பெருமிதத்தோடு இந்த அழகிய கதையைத் தமிழ் மக்களின் முன்னால் வைக்கிறேன். இதன் தமிழ் பிரசுர உரிமை துறையூர் வீனஸ் பிரசுரத் தாருக்குரியது. மற்ற விதங்களில் இந்தக் கதையையோ கதையின் பகுதிகளையோ கையாள விரும்புவோர் கண்டிப்பாக ஆசிரியரின் முன் அனுமதி பெற வேண்டும்,

ரா. தண்டலன்

கானகத்திலே காதல்!

முதல் பாகம்

1. தொலைதூரத்திற்கு.....!

கரடு முரடான் வழியிலே கட்டைவண்டி ஆடி அசைந்துகொண்டு சென்றது அந்த வண்டியிலே பாரம் ஏறறப்பட்டிருந்தது அதன்மேல் அவள் உட்கார்ந்துகொண்டிருந்தாள் கடக்கா முடகா என்று வண்டி ஆடிக்கொண்டிருந்ததற்கேற்ப அவளும் குறுக்கும் மறுக்கும் ஆடிக்கொண்டிருந்தாள் அவள் உள்ளம் சொல்லிக்கொண்டிருந்தது வாழ்க்கை என்பது சமவெளிப் பாதையில் செய்யும் யாத்திரை அல்ல என்று.

அவள் நடந்துதான் வந்துகொண்டிருந்தாள். தன்னந்தனியாளாக; யாதொரு துணையும் இன்றி.. நிராசையின் பிரதிபிம்பம்போல். கண்ணீர் வழிந்து வழிந்து தாரைபடிந்துபோன கன்னங்களுடன் நிலைகுலைந்து காற்றிலாடிக்கொண்டிருந்த சிகையுடன். அலங்கோலமான உடையுடன். சோர்ந்துவிட்ட கைகால்களை உறுதியுடன் எடுத்து வைத்து அவள் வேகம் வேகமாக நடக்க முயன்றுகொண்டிருந்தாள்.

அவள் உள்ளத்தில் துக்கத்தின் பாக்கி இருக்கவில்லை. நிராதரவின் நடுக்கம் இருக்கவில்லை. ஐயோ கொடுமை நிறைந்த உலகிலே இனி எப்படி வாழப் போகிறோம் என்ற அச்சம் இருக்க

வில்லை. ஒரே ஒரு வெறிமாத்திரம் எஞ்சி நின்றது ஒரே ஒரு ஆத்திரம் மாத்திரம் பாக்கி இருந்தது பழிக்குப்பழி.....! பழிக்குப்பழி..! என்று குமுறும் உள்ளத்துடனே அவள் விறுவிறுவென்று நடக்க முயன்றுகொண்டிருந்தாள்.

எங்கோ இருந்து வந்து அந்தச் சாலையிலே சேர்ந்துகொண்டிருந்த வேறொரு பாதையுடன் வந்தான் அந்த வண்டிக்காரன். நல்ல காலேஜ் ஜோடிகள். அவ்வளவு பாரத்துடனும் கொஞ்சம் மிடுக்காகவே நடந்து வந்தன. சிறிது தூரம் வரை வண்டியின் அருகிலேயே எட்டி எட்டி வைத்தவளாய் நடந்து வந்துகொண்டிருந்த அவளைப்பார்த்தான். சின்னஞ்சிறு பெண். பொழுது சாய்ந்துகொண்டிருக்கிறது. அவன் மனதில் என்ன தோன்றியதோ.....? "அம்மா எங்கே போகிறீர்கள்.....?" என்று கேட்டான்.

அவள் ஒருகணம் தலையை உயர்த்திப்பார்த்தான். அவன் முகத்திலே தூரோக மின்மையின் பாவம் நன்கு பிரதிபலித்தது. கபடற்றவன், ஏழை, கிழவன், அவனிடம் அவள் கூறினாள், "எங்கே போகிறேன்...? எங்கோ...தொலைதூரத்திற்கு...!" கிழவன் மருட்சியுடன் அவளைப் பார்த்தான். அந்த வார்த்தைகளின் ஆழம் அவன் இதயத்தைத்தொட்டிருக்கவேண்டும். "அம்மா இந்த வண்டி இந்தச் சாலையில்தான் ரொம்ப தூரம் போகிறது. நீங்கள் வருவதாயிருந்தால்....."

அவள் சிறிது யோசித்தாள். சரி என்பது போல் தலையை அசைத்தாள். வண்டிக்காரன்

வண்டியை நிறுத்தினன். அவள் ஏறிக்கொண்டாள் வண்டி கிளம்பியது எங்கே.....? தொலைதூரத்திற் காக இருக்கலாம். வண்டி போய்க்கொண்டிருந்தது. அவள் நிச்சிந்தையாக உட்கார்ந்துகொண்டிருந் தாள்.

நெடிய மரங்கள் வானத்தை மூடி மறைத்துக் கொண்டிருந்தன. சாலையின் இருமருங்கிலும் கம்பீ ரமாக, வரிசையாக, அணிவகுத்து அவை நின்று கொண்டிருந்தன. ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை ஆகாயத்தை ஊடுறுவிக்கொண்டு அந்தச் சாலை கிடந்தது. இந்த எல்லையில் வானம் அந்த எல்லையில் வானம் இருமருங்கிலும் மரங்கள் மாடு கள் ஜில் ஜில் என்று மணியை அசைத்துக்கொண்டு நடந்தன ஏற்கெனவே இருள் சூழ்ந்தது போலிருக் கும் அந்தச் சாலையில் மேக மூட்டங்களாலோ என்னவோ இன்னும் கருக்கல் அதிகமாயிற்று.

வேகமாக ஓடிக்கொண்டிருந்த வண்டி 'டக்' என்று பிரேக் போடப்பட்டது போல் நின்றது வண்டிக்காரன் "நாசமாய்ப்போக... இது கண்டிப் பாகப் பிசாசின் வேலைதான்..." என்றான். அவள் திடுக்கிட்டாள். எதிரே வழியின்மேல் பெரிய மரம் ஒன்று குறுக்காகக் கிடந்தது, அவள் ஒருகணம் திகைப்படைத்தவள் போல் அதைப் பார்த்தாள். பின் நிதானமாக "யாராவது திருடர்களின் வேலை யாக இருந்தால்.....?" என்று கேட்டாள். கிழவ னின் முகம் கவலையால் சுருங்கியது. "இருந்தாலும் இருக்கலாம்..." என்றான். அவள் உடல் நடுங்கியது.

அவள் பேசி வாய்மூடவில்லை உண்மையாகவே பிசாசுகள் போன்ற இரண்டு உருவங்கள் அவர்களை

வழிமறித்தன. அவர்களுடைய உடல்கள் கருப்பு உடைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முகமூடிகள் அணிந்திருந்தார்கள். கைகளிலே லாவகமாகக் கையாளக் கூடிய ஈட்டிகள் இருந்தன. ஒருவன் உரத்த குரலில் கூவினான் "இறங்கு கீழே....."

கிழவன் நடுநடுங்கிக்கொண்டு ஏதோ சொல்ல ஆரம்பித்தான். "பேசாதே..." என்று இன்னொரு குரல் அதட்டியது. அச்சத்தில் கிழவன் ஏதாவது உளர ஆரம்பித்திருப்பான். அந்த இரண்டாமவன் அவன் கழுத்துக்கு நேராக நீட்டிய ஈட்டிமுனை அவனை என்ன செய்வதென்று தெரியாத உணர்வு நிலைக்குக்கொண்டு போய்விட்டது. பேசவும் முடியாதவனாய் ஏதாவது செய்யவும் சக்தியற்றவனாகிவிட்டான். "இறங்கு..."

வண்டியிலிருந்து கீழே விழுந்தான் கிழவன். மறுபடியும் எழுந்திருக்க முடியாதபடி அவன் உடல் அவ்வளவு கேவலமாக நடுங்கியது. அவன் ஒன்றும் பேசவில்லை. பேசக் கூடிய நிலையில் இல்லை. மேலே உட்கார்ந்துகொண்டிருந்த பெண்ணை மற்றவன் பார்த்தான். "உம்...இறங்கு...!" அவள் அமைதியாக கீழே இறங்கினாள். துணிவு நிறைந்த குரலில் "உங்களுக்கு என்ன வேண்டும்...?" என்று கேட்டாள். "பே...சா...தே..." என்று எழுத்தெழுத்தாகப் பிரித்துக்கூறினான். ஒருவன் 'நட' என்றான் மற்றவன். கிழவன் மெதுவாக எழுந்து நின்றுகொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு உயிரே இருக்கவில்லை. "தாத்தா..... பயப்படாதீர்கள்.....நான் இருக்கிறேன்..." என்றாள்.

அவள் அச்சப்படுவதற்கு நியாயம் இல்லை. அவள் தனியாகக் கிளம்பியவள்...தொலைதூரத்திற்கு...?

2. பழிக்குப் பழி!

காட்டின் நடுவே நீண்ட குறுகலான வழிகளில் அவர்கள் நடந்தனர். எங்கெங்கோ எப்படி எப்படியோ நெடுத்தூரம் சுற்றி அலைந்தபின் ஒரு ஏரிக் கரைக்கு வந்து சேர்ந்தனர். அந்த ஏரி மலைகளை அடுத்திருந்தது. அதற்கு அருகே நீண்ட சமவெளி ஒன்றும் இருந்தது. அங்கே இரண்டு மரங்கள் மொட்டையாக வெட்டிவிடப்பட்டிருந்தன. அந்த மரங்களின் அருகே பாராக் காவலர்கள்போல் வீரர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இந்தக் கைதிகளையும் அவர்களுடன் வந்த வீரர்களையும் பேசாமல் உள்ளே செல்லவிட்டனர். பின்னும் சிறிது தூரம் புதர்களும் மரங்களும் அடர்ந்த வழிகளில் சென்றபின் அவர்கள் ஒரு சிறிய சமவெளியை அடைந்தனர். அங்கே நல்ல வழிவான உடல்கட்டு உடைய ஐந்தாறு வீரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு நடுவே அவர்களுடைய தலைவன் அலட்சியமாக ஒரு மரத்தின் மேல் சாய்ந்தவனாக உட்கார்ந்து கொண்டிருந்தான்

வீரர்களில் ஒருவன் உரத்த குரலில் கட்டளையிட்டான் "வணங்கு....."

கிழவன் சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்துவிட்டான். ஆனால் அவள் பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். அமைதியாகத் தன் எதிரே இருந்த ஆட்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். மீண்டும் அந்த ஆள் உரத்த குரலில் கூறினான் "தலைவரை வணங்கு....."

அவள் நிதானமான குரலில் கேட்டாள் "தலை வரா...? யாருக்கு..? எதற்காக..."

அங்கே கூடியிருந்த அந்த வீரர்கள் திகைத்துவிட்டனர். ஒரு பெண்ணிடமிருந்து அத்தகைய வீரத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை அவள் மௌனமாக அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றாள் அந்த வீரன் பற்களை நறநற்வென்று கடித்துக்கொண்டு, "அதை எல்லாம் கேட்காதே...உயிர் மேல் ஆசை இருந்தால் தலைவரை வணங்கு....." என்று கூவினான். சுட்டிமூனை அவளுடைய இடுப்பைத் தொட்டுக்கொண்டு நின்றது. அவள் பேசவே இல்லை. சும்மா நின்றுகொண்டிருந்தாள்.

அந்தத் தலைவன் குதித்தெழுந்து அவளை நோக்கி வந்தான். இடுப்பின் மேல் கைகளை வைத்துக்கொண்டு ஒருதடவை மேலும் கீழும் பார்த்தபின் அவள் மேவாயைப்பிடித்து உயர்த்தியவனாய், "ஆ...நீ கண்ணம்மா அல்லவா..?" என்று கேட்டான். அவள் திகைப்புடன் தலையை அசைத்தாள் அவனுக்கு எப்படித் தன்னைத் தெரிந்தது என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவனை எங்கும் பார்த்ததாகவும் நினைவில்லை.

"கண்ணம்மா நீ எப்படி இவர்கள் கையில் அகப்பட்டாய்...? உன் தந்தை எங்கே...? இந்தக் கிழவன் யார்...?" என்று அடுக்கடுக்காகக் கேட்டுக்கொண்டு வந்தான் அவன்.

அவள் அமைதியான குரலில் கூறினாள். "தந்தை கொல்லப்பட்டார். இல்லை உயிருடன் எரிக்கப்பட்டார். நேற்று மூன் தினம் இரவு. அவருடன் நெற்களஞ்சியங்களும் ஏராளமான செல்வமும் எரிந்தது. கன்றுகாலிகளும் சில வேலைக்காரர்களும வேலைக்காரிகளும் கூட

எரிந்துபோயினர். நான் மாத்திரம் தப்ப முடிந்தது...'' என்றாள்.

அவன் கையை நறுநறுவென்று கடித்துக்கொண்டான். ''தந்தை எரிக்கப்பட்டார்...'' கண்ணம்மா... இது எப்படி நடந்தது? நான் உயிருடன் இருக்கும் போது அவர் என் தன்னுடைய விரோதிகளைப் பற்றி எனக்குத் தெரிவிக்கவில்லை? கண்ணம்மா..... இந்தச் சதியைச் செய்த துரோகிகள் யார்.....?

''உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது வீட்டின் நான்கு பக்கங்களிலும் கதவுகளைப் பூட்டிவிட்டுத் தீ வைத்துவிட்டனர் ஜமீந்தாரின் ஆட்கள்...''

''ஜமீந்தார்.....''

அவன் கூச்சலிட்டான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு .....''அக்கிரமத்திற்கு ஆட்சி...'' அதற்கொரு எல்லையே இல்லைபோல் இருக்கிறது...கண்ணம்மா...உன் விரோதி என் விரோதி... அவன் நாட்டின் துரோகி ...இதற்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்கின்ற எண்ணம் உன் மனதில் தோன்றவில்லையா.....?

அவள் கூவி அழுதுவிட்டாள். இந்நேரம் அமைதியாகப் பதில் கூறிக்கொண்டிருந்த அவளால் மேற்கொண்டு அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொண்டிருக்க முடியவில்லை. தேற்றுவாரினறித்தானே மறைந்து போயிருந்த துக்கம் ஓய்ந்திருந்த எரிமலைப்போல் தீகக்க ஆரம்பித்தது. ''பழி...பழிக்குப் பழி...! ஆனால் அதற்கு வழி ..?'' என்று தேம்பினாள்.

அவன் குழந்தைபோல் அவளைத் தன் மார்மேல் சாய்த்துகொண்டு, ''கண்ணம்மா...கவலைப்படாதே... நான் பார்த்துக்கொள்கிறேன்...'' என்றான்.

3. போய்வருகிறேன்

அவள் சிறிது நேரம் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கண்களின் முன்னே அந்த பயங்கர இரவு நிழலிட்டது. அன்றிரவு நிலவு அழுத ஒளியைப் பொழிந்துகொண்டிருந்தது. நெடுநேரம் வரை அவளும் அவளுடைய தந்தையும் வெளியே உலாவிக்கொண்டிருந்தனர். எதிரே கண்ணுக் கெட்டிய தூரம்வரை அவர்களுடைய வயல்கள் பரந்து கிடந்தன. அவற்றில் பொன்னிற நெற் கதிர்கள் தலைசாய்த்துக் கிடந்தன. காற்றின் அசைப்பிலே அவற்றிலிருந்து எழும் சரசரசர என்ற ஓசை மெல்லிய விரலின் கவனமற்ற வருடலில் வீணையில் எழும் நாதம்போல் அவள் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று. அவள் உள்ளம் நிறைந்திருந்தது. தன்னுடைய தந்தையுடன் எதை எதையோ பற்றிப் பேசிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தாள்

அவர் கவலையில் ஆழ்ந்திருக்கவேண்டும். அவளுடைய கேள்விகளுக்கெல்லாம் சம்பந்தா சம்பந்தமில்லாமல் எதை எதையோ சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் அவளிடம் கடிந்து ஒருவார்த்தை கூடக் கூறவில்லை. தாயற்ற பெண் சின்னஞ்சிறு அளவு கூட அவள் மனம் நோயடையச் செய்யக்கூடாது என்பது அவர் எண்ணம். கடைசியாக, "நேரமாகிறது அம்மா நீ போய்த்தூங்கு" என்றார். அப்போதுதான் அவர் குரலில் ஒலித்த கலக்கம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அவள் திரும்பி அவர் முகத்தையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்

தாள். "அப்பா ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள்" என்று கேட்டாள். அவர் மெல்லச் சிரித்தவாறு அவள் முதுகை அன்புடன் தட்டி, "கவலை துன்பம் எல்லாம் பெரியவர்களுக்குச் சர்வசாதாரணமாக இருக்கும். நீ சிறுமி. அதைப் பற்றி எல்லாம் நினைக்கக்கூடாது போய்த் தூங்கு போ" என்றார். அவள் மனம் சமாதானமடையவில்லை. "அப்பா நீங்கள் எப்போதுமே இப்படி இருந்ததில்லையே" என்றாள். "மனிதன் எப்போதும் ஒரே மாதிரியே இருக்க முடியாது.." என்றார் அவர். அவள் பின்னுள் திரும்பிப்பார்த்தாள். சிறியவையும் பெரியவையுமாகிய வீடுகள் பல அவர்களுடைய மாளிகைக்குப் பின்னுல் அணிவகுத்து நின்றன, அவ்வளவு பேரும் அவர்களுடைய நிலத்திலே உழுது பயிரிட்டு வாழ்பவர்கள். "ஏன் அப்பா...இத்தனை ஆளும் அம்பும் உள்ள போது நமக்கு என்ன துன்பம் வந்துவிடுமப்பா...? ஏன் வீணுக்கு கவலைப்படுகிறீர்கள்...?" என்றாள். அவர் மீண்டும் சிரித்துக்கொண்டே, "நான் கவலைப் பட்டால் நீயும் கவலைப்படுவாய் அவர்களும் கவலைப் படுவார்கள். அதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்...ஆனல் நமக்கு துன்பம் ஒன்றும் வந்து விடாது நீ கவலைப்பட வேண்டியதில்லை. எனக்குச் சிந்திப்பதற்குக் கொஞ்சம் ஓய்வுவேண்டும். நீ போய்த் தூங்கு அம்மா...அமைதியாக..." என்றார்.

அவள் பேசாமல் போய்ப் படுக்கவேண்டியவளானுள். சிறிது நேரம் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள் தூங்கிவிட்டாள்.

கூச்சலும் கூப்பாடும் அவளைத் துள்ளி எழ வைத்தன. அலறி அடித்துக்கொண்டு அவள் எழுந்து

உட்கார்ந்தபோது அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கன்றுகளின் கதறல்கள் பயங்கரமாக இருந்தன. சாவின் பிடியிலே கடைசி மூசசைவிட்டுக்கொண்டிருந்த மனிதர்களின் பயங்கரமான கூச்சல்கள் அவள் இதயத்தைப் பிளந்தன தீயும் புகையும் மாளிகையில் சூழ்ந்துகொண்டிருந்தது நானகு பக்கங்களிலும் தீயின் அனல் நாக்குகளைத்தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. யோசிக்க நேரமே இருக்கவில்லை கண்ணை மூடிக் கொண்டு என்ன செய்வதெனறே தெரியாத நிலையில் ஒரே ஓட்டமாக ஓட ஆரமபித்தாள், அடுத்தகணம் அவள் மூர்ச்சை அடைந்துவிட்டாள்.

மறுபடி அவள் கண் விழித்துப் பார்த்தபோது ஜனக்கூட்டத்தின் மத்தியிலே அவள் கிடந்தாள். அவளுடைய உடைகள் தெப்பமாக நனைந்திருந்தன அவை சில இடங்களிலே எரிந்து கருகி இருந்தன. அவளைச் சுற்றிலும் ஆத்திரத்துடன் கச்சுமூச்சென்று மனிதர்கள் பேசிக்கொண்டது விசித்திரமாகத் தெரிந்தது. மறுபடியும் அவள் கண்களை மூடிக்கொண்டாள். "கிணற்றுக் குள்ளே விழுந்ததனால்தான் அம்மணி பிழைத்தது. இல்லையானால் அதுவும் இந்நேரத்துக்கு சாம்பலாப் போயிருக்கும்," என்று யாரோ கூறிக்கொண்டிருந்தனர் அவள் துள்ளி எழுந்திருக்கவேண்டும் என்று நினைத்தாள் முடியவில்லை. கூச்சலிடவேண்டும் என்று நினைத்தாள். "அப்பா எங்கே.....அப்பா எங்கே....." என்று கீச்சுக் குரலில் கேட்டுத்தான் அவளால் முடிந்தது. யாரும் பதில் கூறவில்லை.

அவள் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். "அம்மணி உடம்பை அலட்டிக்காதே சாமீ...இந்தத் துணியை

மாத்திக்கிட்டுப்படுத்துக்க கண்ணு..." என்று பரிவு டன் ஒரு அம்மாள் கூறிக்கொண்டிருந்தாள். அவள் கேள்விக் கண்களுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். ஆண் களும் பெண்களும் குழந்தைகளும் கிழங்களும் அவளைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்தனர். அத்தனை பேரும் அவர்களுடைய நிலங்களை நம்பி வாழ்பவர்கள். அத்தனை பேரும் அவளுக்குத் தெரிந்தவர்கள். 'அப்பா எங்கே.. அப்பா எங்கே..." என்று அவள் அவர்களிடம் கேட் டாள். யாரும் அவளிடம் பதில்தான் கூறவில்லை. அத் தனை பேரும் பேசாமல் நின்றுக்கொண்டுதான் இருந்த னர். ஊமைகளாய் நின்றனர்.

உடம்பின் பலத்தை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு அவள் வெடுக்கென்று எழுந்திருந்தாள். அந்த கூட்டத்தில் மஞ்சு நின்றுகொண்டிருந்தான் அவன் அவர்களுடைய விஸ்வாசமுள்ள ஊழியன். அவர் களிடம் அவனுக்கு அளவற்ற பக்தியும் மரியாதையும் இருந்தன. அவள் தெளிவடைந்து எழுந்ததைக்கண் டதும் அவனையறியாமல் தேம்பித் தேம்பி அழுக ஆரம் பித்துவிட்டான். அவன் உள்ளத்திலே துயரம் பொங் கிக்கொண்டிருந்தது. அவள் அவனை நோக்கி நடந் தாள். அவன் தோளைப்பிடித்து ஆட்டியவளாய் "மஞ்சு.. என்...அழுகிறாய்...? அப்பா எங்கே...நீயா வது சொல்லு....." என்று கேட்டாள்.

சும்மா தேம்பிக்கொண்டிருந்தவன் ஊளையிட்டு அழுக ஆரம்பித்துவிட்டான் அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவள் இன்னதென்று புரியாத தத்தளிப் பிலே குழந்தைபோல சுற்றுமுற்றும் பார்த்தாள். படப் படபட வென்ற சப்தத்துடன் உத்திரம் ஒன்று முறிந்து விழுந்தது. திடீர் என்று மாடிச்சுவர் ஒன்று சரிந்தது.

அவள் ஒருகணம் திகைப்புடன் நின்று பார்த்தாள். ஐயோ அவளுடைய மாளிகை எங்கே.....? சற்று நேரத்திற்குள் அது எங்குதான் போயிற்று.....?

அப்போது தான் முதலிரவு தீயிலிருந்து தப்ப வேண்டிதான் நினைவின்றி ஓடியது அவள் நினைவுக்கு வந்தது ஆமாம். யாவும் போய்விட்டன. எரிந்து சாம்பலாய் மண்ணோடு மண் ஆகிப்போய்விட்டன. அவளுடைய மாளிகை இருந்த இடத்தில் குட்டிச் சுவர்கள் நின்றன. அதைச் சுற்றிலும் நாலாபக்கங் களிலும் தீக்கட்டைகள் குண்டப் போட்டு வைத்திருந் தன, அந்தப் பக்கத்திலே இன்னும் அனல் வாடை வீசிக்கொண்டிருந்தது. அவள் பைத்தியம் பிடித்தவள்போல் "அப்பா" என்று கூவிக்கொண்டு அதை நோக்கி ஓடினாள். கூட்டத்திலிருந்தவர்கள் அவளைப் பிடித்துக்கொண்டனர். அவள் மீண்டும் மூர்ச்சை அடைந்துவிட்டாள்.

பலமான பேச்சுக் குரல் கேட்டு அவள் திடுக் கிட்டு எழுந்திருந்தாள் அப்போதுதான் தான் ஏதோ ஒரு அறைக்குள் தாழ்வான கட்டில் ஒன்றின் மேல் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். வாயில் படியை மறித்துக்கொண்டு நின்ற கிழவி ஒருத்தியைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் மஞ்சு. எங்கோ நீண்ட யாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டவன் போல் இருந்தது அவன் தோற்றம். அவன் கையிலே நீண்ட குச்சி ஒன்று இருந்தது அதன் முனையிலே ஒரு சிறிய மூட்டை கட்டப்பட்டிருந்தது. அவனை அவள் மேலும் கீழும் பார்த்தாள். கூச்சலிட்டுச் சபித்துக்கொண்டு அவனைத் தொடர்ந்து வந்த கிழவி

அவள் விழித்துக்கொண்டதைப் பார்த்துப் பேசாமல் நின்றாள்.

அவன் அவள் அருகே மண்டியிட்டு நின்றுத் தலையைக் குனிந்து வணக்கம் தெரிவித்தவனாய்..... "அம்மா...நான் போய் வருகிறேன். எனக்கு அனுமதி கொடுங்கள்..." என்று கேட்டான். அவன் எங்கே போகிறான் அவனுக்கு அவள் எதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்? அவளுக்குப் புரியவில்லை. அவன் கூறினான்,

"அம்மா.....இத்தனை காலமும் எஜமானரின் உப்பைத்தின்று இந்த உடலை வளர்த்தாயிற்று. அவர் இந்த கிராமங்களின் மக்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து காப்பாற்றிவந்தார் அவரை அந்தத் துரோகி ஜமீந்தார் வேரோடு வெட்டிச் சாய்த்துவிட்டான். அடிமோடு நாசம் செய்துவிட்டான் அம்மா இந்த நெஞ்சு கொதிக்கிறது தாயீ... பற்றி எரிகிறது...வேகாமல் வேகிறது. இந்த கிராமத்து மக்கள் இதுவரை அவருக்கு ஊழியம் செய்ததைப்போல் இனிமேல் ஜமீந்தாருக்கும் ஊழியம் செய்யத்தவறமாட்டார்கள். இவர்கள் மூட்டாள்கள். வல்லவன் வகுத்ததே வாய்க்கால் வகுத்தவன் செய்வதே நியாயம் என்று நினைப்பார்கள். அம்மா ...என்னால் அப்படி இருக்கமுடியாது. நான் அவருக்கு. அவருடைய சந்ததிகளுக்குத் துரோகம் செய்யமாட்டேன். அவருக்கு இழைக்கப்பட்ட துரோகத்திற்குப் பழிக்குப் பழி வாங்குவேன்."

"அம்மா...என்றும் நான் உங்கள் அடிமை உங்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைக்கும் பழிக்குப்

பழி வாங்குவதற்காக நான் புறப்படுகிறேன். எனக்கு நீங்கள் விடை கொடுங்கள் மறுபடியும் எப்போதாவது சந்திக்கமுடிந்தால்...சந்திப்போம்.....

அவன் கண்களில் நீர்துளிர்த்துக்கொண்டிருந்தது. அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டிருந்தாள். அவன் சிறிது நேரம் பேசாமல் நின்றுகொண்டிருந்தான். அவளைத் தேற்ற முயறசிப்பதில் பயனில்லை என்று கண்டுகொண்டான். அதே சமயத்தில் மேலும் அங்கே தாமதிப்பது ஆபத்து எனறு கருதி மௌனமாக நடக்க ஆரம்பித்தான். போகும் முன் ஒரு முறை அவளைத் திரும்பிப்பார்த்தான். பார்த்துக்கொண்டே நடந்தான்.

4. அதன் பிறகு

அவள் துயர வெள்ளத்திலே தேம்பிக்கொண்டு கிடந்தாள். அந்தக் கிழவி சிறிது நேரம் அவளைத் தேற்றிக்கொண்டு நின்றாள். வெளியே யாரோ வந்து அழைத்தனர். அவள் ஓடினாள். சிறிது நேரம் அவர்கள் கசமுச என்று பேசிகொண்டிருந்தனர். தனக்கிருந்த துக்கத்தில் அவள் அந்த பேச்சைக் கவனிக்கவில்லை. அவர்கள் மிகுந்த கலவரத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது மாத்திரம் அவளுக்குத் தெரிந்தது

புதிதாக வந்த ஆள் போனபின் கிழவி உள்ளே வந்தாள். அவள் கைகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. அவளுடைய கண்களிலே சொல்ல முடியாத பயம் குடிகொண்டிருந்தது. ஒருகணம் துவண்டுபோய்க் கட்டிலில்கிடக்கும் அவளைப்பார்த்த பின் கிழவி நடுங்கிக்

கொண்டே வெளியே போனாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை கிழவிக்குப் புதியதாக இந்தப் பயம் எப்படி வந்திருக்கக்கூடும் என்பதைப் பற்றி அவளால் யோசிக்க முடியவில்லை. துயரம் பொத்துக்கொண்டு வர அவள் விம்மிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குள் கிழவி மீண்டும் வந்தாள் அவள் கையிலே ஒரு கொத்து வேப்பிலை இருந்தது. பரக்கப்பரக்க அதை அவள் தலை மாட்டிலும் கால் மாட்டிலும் கொஞ்சம் கொஞ்சம் சொருகி வைத்துவிட்டு ஒரு போர்வையை எடுத்துக்கொண்டு வந்தாள். அவள் மிரளமிரள விழித்துக்கொண்டிருந்தாள். கிழவி அவளை நெருங்கி "அம்மா...நான் சாகப்போற கெழவி என் மகன் பட்டாளத்திலே இருக்கிறான்.....உசிரு போறத்துக்கு முன்னாலே அவனை ஒரே ஒருதடவை பார்க்கவேணும் கறதுதான் ஆசை. அம்மா தயவுசெஞ்சு காட்டிக் கொடுத்துடாதே. ஜமீந்தாரு ஆளுக வீடுவீடாப் பூந்து தேடறான்களாமா ..... கண்டு புடிச்சுட்டானுகன்னா என்னைக்கொண்ணு தொலைச்சுப்போடுவானுக. பேசாமெப் படுத்துக்க ராசாத்தி ..... என்னைக்காப்பாத்து தாயே..." என்று கூறினாள். அவள் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுக்கு என்ன சொல்லவேண்டு மென்று தெரியவில்லை. கவலையுடன் கிழவியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கிழவி தன் கையிலிருந்த போர்வையால் காலோடு தலை பூராவும் அவளை மூடி மறைத்துவிட்டு ஒருகொத்து வேப்பிலையைக் கையில் வைத்துக்கொண்டு வாசற்படியில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

புரிந்துகொள்ளும்படியான சக்தி அவளுக்கு இருக்க வில்லை குழப்பத்துடன், கலவரத்துடன் என்ன நடக்கப்

போகிறதோ என்ற அச்சத்துடன் கண்களில் அவ்வப்போது கண்ணீர் துளிர்க்கப் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தாள். என்னதான் நடக்கிறது என்று பார்க்கவேண்டும் என்ற ஆசை அவள் உள்ளத்தைத் தூண்டத்தது. ஆனால் வெளியிலோ நள்ளிரவின் அமைதி பரவிக்கிடந்தது. நெடுநேரம் அப்படி மௌன நிலையில் கழிந்தது அவள் தவிதவிப்பில் கிடந்தாள்.

திடீரென்று அந்த அமைதியை விரட்டிக் கொண்டு டப்டப்டப் என்று 'பூட்சுகள்' அணிந்த காலடி ஓசைகள் வந்தன. அமைதியைக் குலைத்துக் கொண்டு இளம்பிய அந்த ஓசை பெரிய பட்டறையிலே ஏழெட்டுக்கொல்லர்கள் ஏககாலத்தில் சம்மட்டிகள் போட்டத் தொடங்கிவிட்டதைப் போலிருந்தது. அவள் உள்ளத்திலே சொல்ல முடியாத அச்சம் எழுந்தது. நாடி ஒடுங்கப் படுத்துக்கொண்டிருந்தாள். இரண்டு மூன்று அடவை வெவ்வேறு இடங்களில் அந்தக் காலடி ஓசைகள் நின்றன கடைசியாக அவை அந்த வீட்டிற்கே வந்துவிட்டன.

கிழவி நடுங்கிக்கொண்டு ஏதோ சொல்வது அவள் காதுகளில் விழுந்தது "ஏழை சாமி.. என் ஒரே மக....சின்னக் குழந்தை...ஆத்தா வந்து படுத்திருக்குது.....

"வேறே யாரும் இல்லையா.....?" அந்தக் குரல் அதட்டியது.

'இல்லவே இல்லை சாமி...எனக்கு வேறே நிக்குத்திராணியே இல்லை..'

கிழவி நடுங்கினாள், சிறு மௌனம். வீட்டிற்குள் யாரோ எட்டிப்பார்ப்பது தெரிந்தது. அதன் பிறகு காலடி ஓசைகள் இளம்பிவிட்டன.

ஒன்றும் செய்யச் சக்தி அற்றவளாய்க் கிழவி வாயிற்படி மேலேயே உட்கார்ந்துவிட்டாள்.

அவள் உள்ளத்திலே என்னென்னவோ சிந்தைகள் எழுந்து கூத்தாடின...? என்னென்ன கேள்விகளோ குதித்துக்கொண்டு எழுந்தன. அவளுக்கு அழுகவும் சக்தி இல்லை பெருமூச்சுவிட்டுக்கொண்டு படுத்திருந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மறுபடியும் யாரோ வருவதுபோல் தெரிந்தது. இந்த ஆசாமி பதுங்கிப் பதுங்கி வந்திருக்கவேண்டும் கிழவியும் அந்த ஆளும் மெதுவாக வீட்டிற்குள் வந்த பிறகுதான் பேச ஆரம்பித்தனர். மெல்லிய குரலில். அந்தக் குரல் சொல்லிற்று..... "சின்னம்மா தப்பிச்சுக்கிட்டது அவனுக்குத் தெரிஞ்சுபோச்சு. யாரோ பாவிப் பசங்கதான் அவங்களுக்குச் சொல்லி இருக்கணும் அதுதான் அவங்க வீடுவீடாப் பூந்துதேடறானுக. ஆளுக அகப்பட்டுக்கிட்டா சொல்லுடா சொல்லுன்னு உதை உதைன்னு உதைக்கறாங்க. அந்தம்மா எங்கேயோ ஓடிப்போச்சுன்னு சொன்னா அவங்க நம்பறதில்லை, இனியும் இங்கே வெச்சிருந்தா ஆபத்துத்தான்....." என்று. கிழவிக்கு ஒன்றுமே தோன்றவில்லை அவள் கைகளைப் பிசைந்து கொண்டு, "ஐயோ நான் என்ன செய்யட்டும் ஐயோ நான் என்ன செய்யட்டும்..." என்று பரிதாபகரமாகப் பிதற்ற ஆரம்பித்துவிட்டாள். "என்னமோ தலையிலெழுத்துப்போல் ஆகட்டும். நான் இங்கே இருந்தா ஆபத்து" என்று சொல்லிவிட்டு அந்த ஆசாமி மீண்டும் நடையைக் கட்டிவிட்டது. கிழவி இடிந்துபோய் ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டாள்.

அவள் யோசித்தாள். தன்னை இந்த நிலையில் எப்படி வீட்டைவிட்டுப் போகச்சொல்வது என்று புரியாமலேயே அவள் அப்படித் தவித்துக்கொண்டிருக்கிறாள் என்பது அவளுக்கு தெரிந்தது. தான் இருப்பது தெரிந்துவிட்டால் தனக்குமாத்திரமல்ல கிழவிக்கும் பேராபத்து வந்துவிடும் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது. தன்னால், பாவம் அந்த ஏழைக் கிழவிக்கும் துன்பம் வந்துவிடும் என்பதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை ஐயோ அவள் இனி என்ன செய்வாள்...?

ஊரெல்லாம் உத்தமர், நல்லவர் என்று போற்றிப் புகழ்ந்த தனது தந்தையை வேரோடு நாசம் செய்து விட்டதும் அல்லாமல் இனியும் அவருக்கு வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடித்திரிகின்றனர் ஜமீந்தாரின் ஆட்கள். பாபிகள்.....! அந்த ஜமீந்தார் மகாகொடியவன். அவன் ஜனங்களைப் பல விதங்களிலும் இம்சித்து வந்தான் என்பவை அவளுக்குத் தெரியும். அவளுடைய தகப்பனார் பலபேருடன் இதைப் பற்றிப் பேசி இருக்கிறார். அந்த ஜமீன் ஒரு பெரிய சமஸ்தானத்திற்குள்ளே இருந்தது. சமஸ்தானத்தின் சிற்றரசரை ஜமீந்தார் கைக்குள் போட்டு வைத்துக்கொண்டிருந்தான். சமஸ்தானாதிபதி பெயரளவுக்கு ராஜாவாக இருந்தாலும் அதன் நிலபுலங்கள் யாவும் தனக்கே இருக்கவேண்டும் என்று நினைத்தான் ஜமீந்தார். அவனுடைய கொடுமைகளைத் தாளாத குடிகள் எதிர்த்துக் கிளர்ச்சிசெய்தனர் இதர மிராஸ்தார்களும் அவனைக்கண்டு பயந்தனர். அவர்கள் யாவரும் அவளுடைய தந்தையின் தலைமையிலே மகாராஜாவைக் காணச்சென்றிருந்தனர் இவை யாவும் அவளுக்குத் தெரியும். அதன விளைவு.....?

அதைப் பற்றி எல்லாம் மேலும் சிந்தித்துக்கொண்டிருக்க அவளுக்கு நேரம் இருக்கவில்லை. அவள் இனியும் மிராஸ்தாரின் புதல்வி அல்ல. அவளைப் பாதுகாக்க ஆள் அம்புகளும் கோட்டை கொத்தளங்களும் இனியும் இல்லை. அவள் ஒரு அனுதைக் கிழவியிடம் அடைக்கலம் புகுந்தாள். அவள் காரணமாக கிழவியின் நிலையும் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அவள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டாள்...?

அந்தப் பாபியின் ஆட்கள் அவளை என்னென்ன சித்ரவதை செய்வார்களோ? அவளுக்கு வருகிற தொல்லைகள் இருக்கட்டும். பாவம் அந்தக் கிழவி... பட்டாளத்தில் இருக்கும் தன் ஒரே மகனைப்பார்ப்பதற்காக உயிரை வைத்துகொண்டிருப்பவள்...அவளை அவர்கள் நாயை அடித்துக்கொல்வதைப்போல் கொன்று விடுவார்கள் உடலும் உயிரும் சுருங்கிக் காலன் வரவை எதிர்பார்த்துக் கண்கள் குழியாகத் காத்துநிற்கும் அந்த அனுதைக கிழவி அகால மரணமடைய நேரும் அந்தக் கொடுமையை அவளால் சகிக்கமுடியாது. அந்த பாபத்திற்கு அவள் ஆளாகமாட்டாள். இனி ஒருகணமும் அங்கே தாமதிப்பதில்லை எனறு அவள் நீர்மானித்தாள்

நன்றாக இருட்டும் வரையிலும் அவள் காத்துக் கொண்டிருந்தாள். வளர் பிறை நிலவு முன்னிரவை அழைத்துச் சென்று மறையும் வரையிலும் விழித்த கண் மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கிழவி அவளுக்காகக் கொஞ்சம் சாதம் கொண்டு வந்தாள். அதை உண்ணுவதற்கு அவளுக்கு மனம் கூடக்

கொள்ளவில்லை கிழவி சாப்பிட்டாளோ இல்லையோ...? பயம் அவளை உண்ண விட்டிருக்காது. முடங்கிச் சுருண்டு ஒரு மூலையில் படுத்துக்கொண்டாள். சிறிய குத்து விளக்கு ஒன்று முனுக்கு முனுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அவள் வானத்தைப் பார்த்தாள். எல்லையற்ற ஒரு கருமை விரித்துவைத்தாற்போல் அங்கே படர்ந்துகிடந்தது. எங்கோ மூலைக்கு மூலை ஒவ்வொரு சிறிய நட்சத்திரம் மினுமினுத்தது. மெல்லிய காற்று ஊதிச் சென்றது. அந்தக்குத்து விளக்கு அதில் நடுங்கிற்று. அவள் உள்ளமும்தான் அதில் நடுங்கியது. ஆனால் இனி அவள் தாமதிப்பதில் பயன் இல்லை. அவளுக்கு அங்கே யாரும் இல்லை ஏன்? உலகத்திலேயே யாரும் இல்லை. அவளுடைய தந்தையுடன் அவளுக் கிருந்த எல்லாமே மாண்டுமடிந்து மண்ணுகி போய் விட்டன. இனியாருக்காகவும் அவள் வாழவேண்டிய தில்லை. அவள் தனியாள்...தனியாள்...தனியாள்தான் அவள்...!

அந்த நள்ளிரவிலே எங்கோ இருந்து அலறிய ஆந்தையின் கூக்குரல்போல் அவள் உள்ளமும் வெறி கொண்டு கூச்சலிட்டது அவள் எல்லாவற்றையும் இழந்துவிட்டாள், உயிரைத் தவிர இனிவேறொன்றும் இல்லை இழப்பதற்கு. அந்த உயிரை அவள் பாதுகாப் பாள் யார் காரணமாக அவள் தன்னுடைய உயிருக் குயிரான தந்தையையும் மற்ற எல்லாவற்றையும் இழந் தாளோ...அந்த மகா கொடிய பாதகனை மண்ணில் சாய்த்து வெற்றி கொள்வதற்காக அவள் வாழ்வாள். எவனால் தன்னுடைய வாழ்வும் வளமும் வேருடன் வெட்டிச் சாய்க்கப்பட்டதோ அவன் குடியை முழு யுடன், தூறு துப்பு கூடாவிடாமல் கூறு நூறுக்கிக்

கொன்று தீர்ப்பதற்காக வாழ்வாள். பழிக்குப் பழி...! இரத்தத்திற்கு இரத்தம்...! கொலைக்குக் கொலை...! குத்துக்குக் குத்து...

அவள் ஆவேசம் கொண்டவள்போல் புறப்பட்டு விட்டாள்.

5. கன்னி ராணி!

நகராக்களின் முழக்கத்தைக்கேட்டு அவள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். மலைகளைக் குடைந்து உண்டாக்கப்பட்டிருந்த அந்த அறையின் சுவர்கள் அவள் கண்களை உறுத்தின. அப்போதுதான் முதல் நாள் மாலை தான் கள்வர்களிடம் அகப்பட்டுக்கொண்டதும் அவர்களுடைய தலைவனின் தோள்மேல்சாய்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுததும் அவளை எப்படியோ அடையாளம் கண்டுகொண்ட அவன் நெடு நேரம் ஆறுதல் கூறி அந்த அறையில் கொண்டுவந்து விட்டுச்சென்றது அவள் நினைவுக்கு வந்தன. அவள் உள்ளத்திலே கொதித்துக்கொண்டிருந்த அந்த பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியை அவன் தூண்டிவிட்டிருந்தான். அதைத்தான் பார்த்துக்கொள்வதாய்க் கூறினான். ஆனல் கானகத்தில் கற்குகைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினரால் நாட்டிலே கோட்டை கொத்தளங்களுக்கு நடுவிலே படையும் பட்டாளமும் வைத்திருக்கும் ஜமீந்தாரை எதிர்த்து என்னதான் செய்யமுடியும் என்பது அவளுக்கு விளங்கவில்லை. ஒன்றும் புரியாதவளாய் அவள் படுக்கையிலே உட்கார்ந்து கொண்டிருந்தாள், மிதியடியணிந்த காலடியோசை அவளைத் திடுக்கிடச்செய்தன.

"பயந்துவிட்டாயா..." என்று புன்னகையுடன் கேட்டுக்கொண்டே அவன் உள்ளேவந்தான்.

அவள் அவன் முகத்தைப் பார்த்துக்கூறினாள், "இல்லை. நான் பயப்படவில்லை. பயப்படுவதற்கு இனி என்னதான் இருக்கிறது. ஒன்றுமே இல்லை..."

அவன் முகம் ஒருகணம் கவலையில் ஆழ்ந்தவனுடையதைபோல் இருந்தது. பிறகு, "கண்ணம்மா, சீக்கிரம் போய்க்குளித்துவிட்டு வா. இங்கே பெண்கள் யாரும் இல்லை. இருந்தாலும் உனக்காகச் சிரமப்பட்டுச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் பிறகு நீ இன்று உன்னுடைய பரிவாரங்களைப் பார்க்கவேண்டும்" என்றான்.

"என்னுடைய பரிவாரங்களா...?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள். "ஆமாம். அதைப்பற்றி எல்லாம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. நீ சீக்கிரம் வந்து சேரவேண்டும்," என்றான்.

அவள் குளித்துவிட்டுத் திரும்பிவந்தபோதும் அவன் அதே இடத்தில் நின்றுகொண்டிருந்தான். ஆனால் அந்த அறையில் வேறு பொருள்களும் நிரம்பி இருந்தன. ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த சிவப்பு நிற உடைகளைக்காட்டி "கண்ணம்மா இவற்றை நீ உடுத்திக்கொள்..." என்று சொல்லிவிட்டு ஒருகணத்தில் மின்னல்போல் மறைந்தான். அவள் அவற்றை எடுத்துப்பார்த்தாள். நல்ல உயர்ந்த ரகப்பட்டு உடைகள். அவற்றில் ஜரிகை வேலைகள் செய்யப்பட்டிருந்தன. அணிந்துகொண்டபோது அவை அவளுக்குச் சரியாக இருந்தன. உடைகளை அணிந்து முடியவும் அவன் உள்ளே வரவும் சரியாக இருந்தது. எங்காவது

மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தானே என்ற சந்தேகம் அவளுக்கு வந்துவிட்டது. வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. அவன் கூறினான், "பெண்களை அலங்காரம் செய்துகொள்ளவிட்டுவிட்டால் வருஷக் கணக்கில் செய்துகொண்டே இருப்பார்கள் ஆனால் இனித்தாமதிக்க முடியாது. நடபோகலாம்..." என்றான்.

இருவரும் விசாலமான அறை ஒன்றில் நுழைந்தனர். அதில் நல்ல சிற்றுண்டிகளும் பழ வகைகளும் தட்டுகளில் பரிமாறி வைக்கப்பட்டிருந்தன. அவன் பேசாமலேயே ஒருதட்டின் அருகில் அமர்ந்தான். தான் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்துக் கொண்டவள்போல் அவளும் ஒருதட்டில் அமர்ந்தாள் அவற்றைப் போன்ற இனிமையான உணவுகளை அவள் பெரிய பிரபுகளின் விருந்துகளில் கூடச் சாப்பிட்டதில்லை. சாப்பாட்டின் இடையே அவள் அவற்றை எப்படி ரசித்து சாப்பிடுகிறாள் என்பதை அவன் கவனித்தான். உணவை ரசிப்பதிலும் அவள் உள்ளம் உண்மையில் நடுங்கிக்கொண்டிருந்தது. அச்சுறுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் அடிமை ஆண்டையினிடத்தில் நடந்துகொள்வதைபோலவே அவள் நடந்துகொண்டாள். அவளுக்குச் சிறிதளவாவது சுதந்திரமாய் பேசுவதற்கு சுதந்திரம் இருந்திருந்தால் அவள் அவனிடம் ஒன்றுமே கேட்காமல் இருந்திருக்கமாட்டாள்.

சாப்பிட்ட பிறகு இருவரும் எழுந்திருந்தனர். ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் அவர்கள் இருவரும் நின்றனர். அவள் பார்த்தாள். அங்கிருந்து வரிசையாக இரண்டு பக்கங்களிலும் ஆயுதம் தரித்த வீரர்

கள் நின்றுகொண்டிருந்தனர். வீரன் ஒருவன் பெரிய முரசு ஒன்றை அடித்தான். அதைத் தொடர்ந்து எதையோ அறிவிப்பதுபோல் வாத்தியங்கள் முழங்கின. அவன் அவளை தன் அருகில் வரும்படி ஜாடையாகக் குறிப்பிட்டான். எஜமானன் சைகைக்குப் பணியும் குட்டி நாயைப்போல் அவள் அவன் அருகில்வந்து நின்றாள். அதன் பிறகு இருவரும் மெதுவாக நடந்து சென்றனர். வழி நெடுக நின்ற வீரர்கள் வணக்கம் செலுத்தினர். அவளுக்கு அரசன் ஒருவன் தர்பாருக்குச்செல்லும் காட்சி நினைவுவந்தது. இந்தக் காட்டரசன் தன் காட்டுக் குடிகளைக் காணச் செல்வானுக இருக்கலாம். யார் கண்டார்?

அந்த வழி செதுக்கப்பட்ட ஒரு பாறைக்குப் பின்னால் சென்று நின்றது. அந்தப் பாறையின் இரண்டு பக்கங்களிலும் படிகள்செதுக்கப்பட்டிருந்தன. அதன் அருகே தயாராய் நின்றுகொண்டிருந்த இரண்டு வீரர்கள் பணிவுடன் ஒரு வழியில் அவளையும் மற்றொரு வழியில் அவனையும் அழைத்துச்சென்றனர். அவள் தயங்கினாள். ஜாடையாக அவன் தலையை அசைத்தும் பேசாமல் நடந்தாள்.

அந்தக் கற்பாறையாலான மேடை மிக அழகாகச் செதுக்கப்பட்டிருந்தது. அதன் நடுவில் ஒரு பெரிய ஆசனம் இடப்பட்டிருந்தது. அதன் அருகில் வேறு ஆசனங்கள் கிடந்தன. அவர்கள் இருவரும் அந்த ஆசனங்களுக்கு இரண்டு பக்கங்களில் வந்து சேர்ந்தனர். அவள் அங்கே கற்பனையிலும் கண்டிராத காட்சி ஒன்றைக் கண்டாள். தன்னுடைய வாழ்க்கையில் இப்படி ஏதாவது வரக்கூடும் என்று அவள் கனவிலும் கருதியிருக்கமாட்டாள். அவள் ஆச்சரியத்தில் நிலைத்

துப்போய்விட்டாள். அவள் எதிரே அலை அலையாக வீரர்கள் நின்றனர். பளபளக்கும் ஆயுதங்களுடன் ஒரே மாதிரியான உடைகள் அணிந்து அவர்கள் வரிசை வரிசையாக நின்றனர். அவர்களைக் கண்டதும் ஆயுதங்களை உயர்த்திச் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். எங்கள் ராணி வாழ்க.....! கன்னி ராணி வாழ்க! என்று அவர்கள் முழங்கினர்.

அவர்களுடைய ராணியா.....?

கன்னி ராணியா.....?

அவள் ஆச்சரியத்தில் தன்னை மறந்துவிட்டாள். குழந்தைபோல் சுற்றும் முற்றும் பார்க்க ஆரம்பித்து விட்டாள். அவன் முகத்தில் இலேசான புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது.

6. சபதம்

அவன் தன் இரண்டு கைகளையும் உயர்த்திக் கையமர்த்தினான். ஆரவாரம் நின்றது. அவர்கள் அமைதியாக நின்றனர். அவன் பேச ஆரம்பித்தான்.

"வீர நண்பர்களே....."

"நமது ராணி நமக்குக் கிடைத்துவிட்டாள். நெடு நாளாக நாம் யாருடைய தலைமையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தோமோ, அவள் இன்று நம் மிடையே வந்துவிட்டாள். அவள் வருகையை அறிந்த வுடன் நாட்டின் பல மூலைகளிலிருந்து ஓடி வந்திருக்கும் உங்களுக்கு அவள் சார்பாக நன்றி செலுத்துகிறேன்." ஆனால்.....

"அவள் நாம் எதிர்பார்த்ததுபோல் மகிழ்ச்சியுடன் நம்மைவந்து சேரவில்லை. அடங்காத துயரத்

துடன் வந்து சேர்ந்திருக்கிறுள். கொதிக்கிற ஆத்திரத் துடன் வந்திருக்கிறுள்.''

''சதிகாரர்கள் அவள் இருந்த மாளிகைக்குத் தீ வைத்துவிட்டனர். அவளுடைய தந்தையும், ஆட் களும், வெந்து சாம்பலாகிவிட்டனர். நமக்கு ராணி யாவதற்காக அவள் மாத்திரமே தப்பமுடிந்திருக் கிறது. வீரர்களே சிந்தித்துப் பாருங்கள்.....! நமது மதிப்பிற்குரிய அரசிக்கு இந்தக் கொடிய துரோகம் இழைத்த பாபிகளை நாம் இன்னும் விட்டு வைத் திருக்கலாமா...? ஏழைகளையும் திக்கற்றவர்களையும் கசக்கிப் பிழிந்து வாழ்ந்துவரும் அந்தக் கோழைகளை இன்னும் விட்டுவைத்திருக்கலாமா.....?

அவன் ஒருகணம் நிறுத்தினன். அந்த வீரர்கள் ஆயுதங்களை உயர்த்திக்கொண்டு ''முடியாது, முடி யவே முடியாது...'' என்று கூச்சலிட்டார்கள். அவன் மீண்டும் தொடர்ந்தான்...

''அவர்கள் எவ்வளவு கொடியவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் ஒவ்வொருவருடைய குடும்பங்களும் அவர்களால் நாசப்படுத்தப்பட்டு வரு கிறது. அதற்குப் பழிக்குப் பழி வாங்க நீங்கள் துடி துடிக்கிறீர்கள் என்பதை நான் உணர்கிறேன். எல்லா வற்றுக்கும் மேலாக நமது ராணிக்கு அவர்கள் செய்த துரோகத்தையும் நினைத்துக்கொள்கிறபோது உங்கள் உள்ளம் ஆத்திரத்தில் பற்றி எரிகிறது என்பது எனக் குத்தெரியும். என் அன்பிற்குரிய வீரர்களே...ஆனால் நீங்கள் இன்னும் பொறுக்கத்தான் வேண்டும் அவர் கள் திருந்துவதற்கு வாய்ப்புக்கொடுக்க அல்ல. நமது படை பலத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகத்தான்.

வளர்ந்துவரும் புரட்சி சேனைகளை நல்ல முறையில் தயார்ப்படுத்திக்கொள்வதற்காகத்தான்."

"என் வீரர்களே, இதற்கிடையிலே நமது ராணியின் சார்பாக உங்களுக்கிடும் கட்டளை என்னவென்றால்...நமது ராணியை குலத்தோடு வேரறுக்க எவன் சதி செய்தானோ...அவர்கள் குடியிருந்த மாளிகைக்கு எவன் நள்ளிரவில் தீ வைத்தானோ...! அவன் அந்தக் கொடிய ஜமீந்தார்.....! அவனைக் குலத்தோடு நாம் வேரறுக்கவேண்டும். நம் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் அவனே கொடிய விரோதி. அவனை அவன் குடும்பத்தைச் சேர்ந்த வேறு எவனோ...எவனையாலும் சரி...நம்மிடையே அகப்பட்டுக்கொண்டால் அவர்களை உயிருடனே அல்லது செத்த பிணமாகவோ இங்கே கொண்டுவந்து சேர்க்கவேண்டும்...எக்காரணத்தைக் கொண்டும் தப்பிச்செல்ல விடக்கூடாது. இதைக்கண்டிப்பாக நீங்கள் நினைவு வைத்துக்கொள்ளவேண்டும். நமது ராணியின் பெயரால் சபதம் செய்துகொள்ள வேண்டும். இதை முதலில் செய்துமுடிக்கும் கூட்டத்திற்குத் தனி வெகுமதியும் பதவியும் உண்டு.

அவன் மீண்டும் தன் பேச்சை நிறுத்தினான். அந்தப்படை வீரர்கள் அமைதியாக நின்றனர். பிறகு "சரி...நீங்கள் இனிக் கலைந்து செல்லலாம்..." என்று அவன் விடைகொடுத்தான்.

அவர்கள் கடைசியாக மீண்டும் ஒருமுறை முழங்கினர். "எங்கள் ராணி வாழ்க...!"

"கன்னி ராணி வாழ்க...!"

அதன் பிறகு வரிசை வரிசையாகக் கலைந்து சென்றனர். அந்த வேடிக்கையை விளையாட்டுக் குழந்தை

போல் நின்று பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் அவனுடைய கண்கள் அவளை நோக்கித் "திரும்பு" என்று கட்டளை யிட்டன. அவள் பேசாமல் வந்த வழியே திரும்ப வேண்டியவளானாள்.

7. எப்படி நடக்கும்?

அவர்கள் இருவரும் நேரே தங்கள் அறைகளுக்குச் சென்றுவிடவில்லை. இடையிலே அவன் வேறு பக்க மாகத்திரும்பி உயர்ந்து சென்ற ஒரு குன்றின் மேல் ஏறத்தொடங்கினான். அவள் தயக்கத்துடன் நின்று பார்த்தாள். அவனுடைய பார்வை அவளைப் பின் தொடரும்படித் தூண்டிற்று. அவள் பேசாமல் அவ னுடன் நடந்தாள். அவள் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி அவன் ஒரு வார்த்தைகூடக் கூற வில்லை. ஆனால் எப்படியோ அவள் அவன் விருப்படியே நடந்தாள். ஆட்டும்படி ஆடும் பொம்மையைப்போல் அவளை அறியாமலேயே அவன் விருப்படி நடந்தாள். அது அவளுக்கே வியப்பாக இருந்தது.

அவனுடைய கண்களுக்கு ஒருமகத்தான சக்தி இருந்தது. அந்தக் கண்களின் பார்வை சாதாரண மனிதனின் பார்வை அல்ல. அதில் பிறரை ஆட்டி வைக்கக்கூடிய ஏதோ ஒரு சக்தி மறைந்திருந்தது. அந்தப் பார்வைக்கும் பிறரைப் பணிய வைத்துவிடும் வல்லமை இருந்தது. அவனுடைய தலை சிலையில் செதுக்கிவைத்ததைப்போல் சற்றும் வளையாது எடுப் பாக நின்றது. அதன் அவயவங்கள் கடைசல் பிடித்த வற்றைப்போல் அதிகாரத்தையும் உறுதியையும்

காட்டுவனவாக இருந்தன. அவை எல்லாவற்றிலும் மிகவும் வல்லமை வாய்ந்தவை அந்தக் கண்கள்தான்.

அவளுக்கு முன்னால் அவன் நடந்து சென்றான். இரண்டு பக்கங்களிலும் மரங்களும் செடிகளும் புதர்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அந்தப் பெரிய மரங்களிலே மஞ்சளும், இள நீலமும், வெளுப்பும் ஆன பூக்களைத் தாங்கிய கொடிகள் ஆடிக்கொண்டிருந்தன. சின்னஞ்சிறிய அழகிய பறவைகள் கீச்சிட்டு நாலாபுறங்களிலும் பறந்துகொண்டிருந்தன. அவள் அந்த இயற்கை அழகை அனுபவிக்கவில்லை. முன்னால் நடந்துசெல்லும் அவனுடைய உருவைக் கண்களால் அளந்துகொண்டிருந்தாள்.

ஆறு ஆறரை அடி உயரத்திற்கு கம்பீரமாக வளர்ந்த உடல். உறுதியான பெரிய பெரிய கைகள் கால்கள். வெண்கலச் சிலையினுடையதைப் போன்ற விசாலமான மார்பு. அவள் கதைகளிலே படித்த மகாவீரர்களினுடைய உருவங்கள் இப்படித்தான் இருந்திருக்கவேண்டும். அவன் இடையிலே அவளை நோக்கித் திரும்பாமலிருந்திருந்தால் அவள் உள்ளம் கற்பனையிலே மூழ்கிப்போயிருக்கும்.

"மகாராணி என்ன யோசிக்கிறீர்கள்...?" என்று அவன் கேட்டான்.

அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவன் விளையாட்டாகப் பேசுகிறானே என்று நினைத்தாள், ஆனால் அந்தக் குரல் உண்மையாகப் பேசும் தன்மையைத்தான் காட்டியது, அவன் திரும்பி அவளைப் பார்த்தான். அவனுடைய கண்கள் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல் என்றன. அவள் காரணம்

இல்லாமல் நடுங்க ஆரம்பித்துவிட்டாள். "ஒன்றும் இல்லை...ஒன்றும் இல்லை" என்று உளறினாள்.

அவனுக்குச் சிரிப்புவந்துவிட்டது. 'மகாராணிக்கு என்னைப்பார்த்தால் பயமாக இருக்கும்போலிருக்கிறது ஆனால் இனிமேல் பயப்படவேண்டிய அவசியமே இல்லை, நான் மகாராணியின் கட்டளைக்கு அடங்கியவன்தான். மகாராணிக்கு இங்கே நடைபெறுபவைகளை எல்லாம் பார்த்துச் சந்தேகம் உண்டாகியிருக்கும் அவற்றிற்கு விளக்கம் தேவைப்பட்டால் கூறுகிறேன். அதற்காகவே அழைத்து வந்தேன்.' என்றான்.

அவள் ஒருகணம் யோசித்தாள். பிறகு "நீங்கள் யார்...என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்.....?" என்று கேட்டாள்.

அவன் திடுக்கிட்டவன்போல் திரும்பி, "மகாராணி...நான் இப்போது புரட்சி வீரர்களின் சர்வாதிகாரி. அதைவிட அதிகம் ஒன்றும் தயவுசெய்து கேட்கவேண்டாம். நான் உங்களைப் பார்த்திருக்கிறேன் தங்கள் மாளிகையில்...சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்....."

"ஆனால் நான் உங்களைப் பார்த்ததில்லையே?"

"ஆம். நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது. நான் உங்கள் மாளிகையில் ஒளிந்துகொண்டிருந்தேன். என்னை அரண்மனை வீரர்கள் நாடு முழுவதும் தேடிக் கொண்டிருந்தனர். மஹாராஜா எனக்கு மரண தண்டனை விதித்திருந்தார். நான் சிறைக்கூடத்திலிருந்து தப்பிவிட்டேன்..."

"மரண தண்டனை பெறும்படியாக என்ன குற்றம் செய்தீர்கள்..."

"மகாராணி...அதைப்பற்றி கேட்கவேண்டாம்... ஆனால் நான் குற்றமற்றவனாக இருந்து தப்பியதால் தான் தங்கள் தந்தை எனக்குப் புகல் அளித்தார். அவருடைய நேர்மையைத் தாங்கள் சந்தேகிக்கமாட்டீர்கள்..."

"என்னை எதற்காக மகாராணி என்று அழைக்கிறீர்கள்...?"

அவன் பதில் சொல்லவில்லை. இலேசான சிறு நகையுடன் அவளைத் திரும்பிப்பார்த்தான். அவன் பார்வையிலிருந்து அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். "ஆமாம். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உங்களுக்கு ஒரு ராணி வருவாள் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்கள். அதற்கான முன்னேற்பாடெல்லாம் செய்து வைத்திருக்கிறீர்கள்.....அவளுடைய தலைமையில் பிரபுக்களின் கொடுங்கோலாட்சியிலிருந்து ஜனங்களை விடுவிக்கப்போவதாகக் கூறி வந்திருக்கிறீர்கள். ஆனால் அந்த ராணி நான்தானா...? நான்தான் உங்களுக்கு ராணியாக வருவேன் என்று உங்களுக்கு எப்படித்தெரியும்...என்னக்காக, என் பெயரால்தான் இந்த ஏற்பாடுகளெல்லாம் நடந்தனவா...? எனக்கு ஒன்றுமே புரியவில்லை..." என்றாள்.

"கண்ணம்மா இவை எல்லாம் உன் பெயரால் நடைபெறவில்லை. என்பது உண்மை. ஜனங்களுக்கு ஏதாவது ஒரு நம்பிக்கை தேவை. அந்த நம்பிக்கை இருந்தால்தான் அவர்கள் எந்த லட்சியத்திற்காகவும் ஒன்று திரள்வார்கள். அந்த நம்பிக்கை வெறும் பெயரளவில் இருந்தாலும்போதாது. இதைப்போல ஒரு புரட்சிகரமான காரியத்திற்கு மக்களை ஒரு நம்பிக்கை

யின் கீழ்த்திரட்டுவது என்றால் அது அவர்களை இயற்கையை மீறிய ஒருவெறிகொள்ளும்படிச்செய்யக் கூடியதாக இருக்கவேண்டும். அதற்காகவே இந்த ராணி சிருஷ்டிக்கப்பட்டாள். உன்னுடைய சிவந்த உடையை நீ இதுவரை கவனித்துப் பார்க்கவில்லை. அந்த உடையில் உன்னுடைய உருவம் இந்த ஜனங்களின் மனதில் எவ்வளவு ஆழமாகப் பதிந்துவிடும் என்பது உனக்குத்தெரிந்திருக்காது. உண்மையிலேயே நீ அவர்களுக்கு ஒரு நடமாடும் தேவதையாகிவிட்டாய் நீயும் மற்றவர்களைப்போல் மனிதப் பிராணிதான் என்று இனி யார் எவ்வளவு சொன்னாலும் நம்பமாட்டார்கள். உனக்காக, உன் பெயரால் இனி அவர்கள் எவ்வளவு தியாகம் வேண்டுமானாலும் செய்வார்கள். உயிரைக் கூட இழப்பார்கள்.''

''ஆனால் இதெல்லாம் எப்படி நடைபெறும்..... நாம் ஜமீந்தாரை ஒழித்துவிடுவோமா.....? அதைப் பார்த்துக்கொண்டு மஹாராஜா சும்மா இருப்பாரா...? மஹாராஜாவை எதிர்த்துப் போராட நமக்குப் படை பலம் இருக்கிறதா...இதெல்லாம் எப்படித்தான் நடைபெறப்போகிறது.....? என்று குழந்தையைப்போல் திருப்பித்திருப்பி கேட்டாள்.''

8. சர்வாதிகாரியின் திட்டம்!

அவன் ஒருகண நேரம் மௌனமாக இருந்தான். பிறகு நிதானமாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு மிக நிதானமான குரலில் பேச ஆரம்பித்தான் ''கண்ணம்மா...அதை எல்லாம்இப்போது உனக்கு விளக்கிச் சொல்லிவிட முடியாது. அவ்வளவு சாதாரணமான

திட்டங்கள் அல்ல இவை. ஆனால்...இதை நீ புரிந்து கொண்டிருக்கலாம்...நீ உறங்கிக்கொண்டிருந்த சிறிது நேரத்திலேயே உனக்காக இவ்வளவு அழகான உடைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை உனக்கு எவ்வளவு சரியாக இருக்கின்றன. அந்தக்கண நேரத்திலே மூலைக்கு மூலை பலகாதங்களுக்கு அப்பால் இருந்தெல்லாம் பல நூற்றுக்கணக்கான மக்கள் இங்கே வந்து திரண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கைகளிலே மிகச் சிறந்த ஆயுதங்கள் இருந்தன...இவை எல்லாம் உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா? இவ்வளவு ஆச்சரியகரமாக ஒருகாரியத்தை இந்த அரசாங்கத்தினால் கூடச்செய்துவிட்டிருக்க முடியாது.....''

''கண்ணம்மா.....கட்டுப்பாடாக ஒரு இயந்திரத்தைப்போல் இயங்கும் ஒரு பெரும் படை என் கீழ் இருக்கிறது. அதில் இருப்பவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. இந்த அரசாங்கத்தின் பெரும் தூண்களில் சிலரும் அதில் இருக்கிறார்கள் என்றால் நீ புரிந்துகொள்வாய் என்று நினைக்கிறேன்.''

''அதுமாத்திரமும் அல்ல...நான் யார் என்பதைக் கண்டுபிடித்துவிட உன்னால் மாத்திரம் அல்ல...யாராலுமே முடியவில்லை. என்னை அடையாளம் கண்டு கொள்ளக்கூடியவர்கள் யாருமே இல்லை. அதில் ஒரு பெரிய இரகசியம் அடங்கியிருக்கிறது.''

''கண்ணம்மா...இன்றைக்கு இந்த நிமிஷத்தில் நான் உன்னை விடுதலைசெய்கிறேன்...ஆனால், திரும்பவும் நீ எந்த இடத்திலிருந்து வந்தாயோ அந்த இடத்திற்கு உன்னால் போய்விட முடியுமா...? யோசித்துப் பார்த்துச்சொல்...''

அவள் யோசித்துப்பார்த்தாள், அவர்கள் எப்படி எப்படியோ தாறுமாறுன் வழிகளில் அழைத்து வந்தார்கள். அதிலே சிறிய அடையாளம்கூட அவள் நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக இருக்கவில்லை. ஆனல் அவள் கேட்டாள்..." நீங்கள் என்னை விடுதலை செய்வதா.....? நான் உங்கள் அரசி அல்லவா.....?" என்று.

அவன் சிரித்தான். " அரசிதான், ஆனல் எந்த அரசியாலும் சுயமாக இயங்கமுடியாது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அவள் எவ்வளவோ கட்டுப்பட்டவளாக இருக்கவேண்டும்..."

அவள் திகைத்தாள், " அப்படி என்றல்...? "

" அப்படி என்றல்.....மந்திரிகளும் ஆலோசகர்களும் ஆகிய எத்தனையோ பேர்களின் அபிப்பிராயப்படியே அவள் நடக்கவேண்டியவளாக இருப்பாள். ஆனல் இந்த அரசி இந்த சர்வாதிகாரியின் கைப்பொம்மையாகமாத்திரம் இருப்பாள்..."

அவளுக்கு அவன்மேல் ஆத்திரம் வந்தது. ஜனங்களை ஏமாற்றுவதற்காகத் தனக்கு இந்த வேஷம் போட்டுத் தன்னை ஒரு கைக் கருவியாக மாத்திரம் உபயோகித்துக்கொள்ள விரும்புகிறுன் இந்தத் துரோகி, என்று நினைத்தாள் அவன் சிரித்துக் கொண்டே " கண்ணம்மா...நீ நினைப்பது சரி அல்ல. காரியங்கள் இப்போதைக்கு அப்படி நடைபெறும். ஆனல் உண்மையாகவே இந்த நாட்டின் அரசியாக இருந்து நீ ஆளும் காலமும் வரும். உன் தந்தை எனக்குச் செய்த உதவிக்கு, அவருக்கு இந்தப் பழிகார ஜமீந்தார் செய்த துரோகத்திற்கு.....இதைச்செய்து

முடித்த அன்றுதான் நான் மனிதனுவேன்.....கண்ணம்மா உன்னிடம் மனம் திறந்து சொல்கிறேன். என்உள்ளத்தில் சிறிதளவேனும் துரோக சிந்தனையோ ...கெட்ட எண்ணமோ கிடையாது. இந்த உலகத்தில் வாழும் எண்ணற்ற ஏழை மக்களுக்காகத்தான் நான் வாழ்கிறேன். அவர்களுக்காகத்தான் நான் இவற்றை எல்லாம் செய்கிறேன். இவற்றைச் செய்துமுடிக்க வேண்டியது என் கடமை என்று நினைக்கிறேன். ஏன் என்றால் எனக்குத்தான் அந்த வல்லமை இருக்கிறது. எத்தனையோ பலஹீனமானவர்களை...கோழைகளைப் படைத்த இயற்கை அவர்களின் சார்பாகத்தான் என்னையும் படைத்துவிட்டிருக்கிறது. அது என்னால் இந்தக் காரியம் நடைபெறவேண்டும் என்பதற்காகத் தான்.....'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவளுக்கு எதிலுமே நம்பிக்கை உண்டாகவில்லை. அவனிடம் படை வீரர்கள் இருக்கின்றனர். அவர்களைக் கட்டுப் பாடாக நிர்வகிக்கும் திறமையும் அவனுக்கிருக்கிறது. இன்னும் என்னென்னவோ வல்லமைகள் அவனுக் கிருக்கலாம். ஆனால் அவற்றால்..... அவற்றால்.....? அவற்றால் என்ன செய்துவிட முடியும் என்பதை அவ ளால் திட்டமாக உணரமுடியவில்லை. அவள் உள்ளம் 'வெறிச்' என்று கிடந்தது. ஆனால் அந்தச் சமயத் திலும் அவள் உள்ளூர அவனுக்கு அஞ்சினாள். அந்த அச்சத்தின் காரணமாகவே அவள் ஒன்றும் பேசவும் இல்லை.

அவன் அதைப்புரிந்துகொண்டிருக்க வேண்டும். தன் கால்களை ஊன்றி நின்று கைகளைப்பின்னால் கட்டிக்கொண்டு...'' கண்ணம்மா.....ஒரு நாள் இந்த

ஜமீந்தாரின் குடிபடைகள் அத்தனை பேரும் ஜமீந்தாரை எதிர்த்துக்கலகம் செய்வார்கள். அதே சமயத்தில் அரசாங்கம் முழுவதிலும் அதைப் போன்ற கலகங்கள் நடைபெறும். அரசாங்கத்தின் ராணுவமே நமக்கு ஒத்தாசையாக வரவும் கூடும். அந்தச் சமயத்தில் அரசர் வேறு வழி இன்றி எனது காலடியில் வந்து விழுவார். சந்தர்ப்பங்கள் அப்படி நிகழும். அரசர் அரசராகவே இருக்கலாம். ஆனால் நான் சர்வாதிகாரியாக இருப்பேன். இதுதான் என் திட்டம்....." என்றான்.

9. கைதி.....!

சர்வாதிகாரி அவளுக்கென்று தனி அறை ஒன்று கொடுத்தான். ஒரு சிறிய குன்றின் உச்சியில் மிக அழகாக அமைந்திருந்தது அந்த அறை. விசாலமாகவும் உயர்ந்த ஆசனங்கள் இடப்பட்டும் இருந்தது. அதற்குக் கீழே வேறு அறைகள் இருந்தன. அவை அவளுடைய சிப்பந்திகளுக்காக விடப்பட்டிருந்தன.

அந்த அறையில் சாளரத்தின் அருகில் நின்று கொண்டு வெட்ட வெளியைப்பார்த்தவளாய் சும்மா நின்றுகொண்டிருந்தாள். அவள் கண் எதிரே அடர்ந்து வளர்ந்த செடி கொடிகளும் உயர்ந்த மரங்களும் நிறைந்த பள்ளத்தாக்கும் அதை அடுத்து மீண்டும் உயர்ந்த மலைகளும் இருந்தன. அமைதி நிறைந்ததாய்க் காணப்பட்ட அந்தப் பள்ளத்தாக்கிலே இந்த அடவியில் எத்தனையோ கொடிய விலங்குகள் வசிக்கின்றன. அந்த மலைச் சிகரத்தைத் தாண்டி இறங்கியவர்கள் யாருமே பிழைத்ததில்லை. சர்வாதிகாரி அப்படிச் சொல்லியிருந்தான்.

ஒருபுறம் அகாதமான கானகமும் கொடும் விலங்குகளும், மறுபுறம் ஆயுதமணிந்த வீரர்களும், பாதுகாவலரும்...இவற்றிக்கு மத்தியிலே தான் ஒரு கைதி...ஆஹல் பெயர் அரசி...! இதை நினைத்துக் கொள்ளும் போது அவளுக்குச் சிரிப்பாக வந்தது. சின்னஞ்சிறுமியான அவளுடைய வாழ்க்கையிலே வந்து மோதிய விசித்திரமான அனுபவங்கள் ஒன்றுக் கொன்று மாறுன நிலைமையில் அவளை வைத்தன. அவளால் எதுவுமே புரிந்துகொள்ளமுடியவில்லை. எதிரே இருந்த கானகத்தை அவள் பார்த்தாள். அது அந்தப் பெரிய பள்ளத்தாக்கில் இருந்தது. அதில் இருந்த பெரிய மரங்கள் எல்லாம் சின்னஞ் சிறியவையாகத் தோன்றின. செடிகளும் கொடிகளும் கண்களுக்குப் புலப்படவே இல்லை. அங்கங்கே ஏதோ பறவைகள் பறந்துகொண்டிருந்தன. 'வெறிச்' என்ற உணர்ச்சி யற்ற நிலையோடு அவள் அவற்றைப் பார்த்துக்கொண் டிருந்தாள். அந்தக் கொடும் கானகத்திலே தான் ஒரு கைதி.....தான் ஒரு கைதி.....அந்த நினைவுதான் அவள் உள்ளத்திலே அலைமோதிக்கொண்டிருந்தது.

காலடி ஓசைகள் கேட்டு அவள் திரும்பினாள். அவள் எதிரே இரண்டு பெண்கள் வந்துநின்று வணங் கினர். அவளுக்கு அதிசயமாக இருந்தது. அவள் அதுவரை அங்கே பெண்களைப் பார்த்ததே இல்லை. அவர்கள் இள நீலநிற ஆடைகள் அணிந்திருந்தனர். தோள் பட்டையிலே சிவப்புத் துணியால் செய்யப் பட்ட பூச்சின்னங்கள் தரித்திருந்தனர். அவள் கேள்வி கண்களுடன் அவர்களைப் பார்த்தாள்..." மகா ராணி சபைக்கு எழுந்தருளவேண்டும்..." என்றாள் ஒருத்தி. அவளுக்கு வேடிக்கையாக இருந்தது 'மகா

ராணி சபைக்கு எழுந்தருளவேண்டும்...' நல்ல மகாராணி...நல்ல சபை...நல்ல எழுந்தருளல். குழந்தை போல் 'நான் வல்லேப்போ...' என்று சொல்லவேண்டும் என்று அவளுக்குத்தோன்றியது. ஆனல் சர்வாதிகாரியின் முகம் அவள் கண் எதிரே வந்ததும் அவள் நடுங்கினுள். அவள் நினைவிலே நின்று 'நட' என்று கட்டளையிட்டன அவனுடைய கண்கள். அவள் நடந்தாள்.

அந்த பெண்கள் அவளே வழி நடத்திச்சென்றனர் ஆயுதம்தரித்த வேறு பெண்கள் அவளுக்குக் காவலாக வந்தனர். அவள் வியப்புடன் அவர்களேப்பார்த்தாள் அவர்கள் கருப்பு உடைகளும் சிவப்புப் பூச் சின்னங்களும் அணிந்திருந்தனர்.

அவளுடைய அறைக்குப் பக்கத்திலேயே இப்போது சபை கூட்டப்பட்டிருக்கிறது. அவள் ஒரு உயர்ந்த மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். ஒரு பக்கத்தில் சர்வாதிகாரியும், இன்னெரு பக்கத்தில் வேறு அதிகாரிகளும் நின்றனர், எதிரே கண்கள் கட்டப்பட்ட ஒரு இளைஞன் நின்றுகொண்டிருந்தான். அவனுடைய கைகள் பின்னல் கட்டப்பட்டிருந்தன. கால்களும் பிணிக்கப்பட்டிருந்தன. அவள் அவனேப் பார்த்தாள். 'இளைஞன்...பாவம்...! அவனும் ஒரு கைதிபோலும்' என்று நினைத்தாள்.

"மகாராணி...நம் வீரர்களின் முதல் காணிக்கை. இளைய ஜமீந்தார்..." என்று கூவினர் அதிகாரி ஒருவர்

'ஜமீந்தார்...!'

அந்த வார்த்தை மெழுகுபோல் உருகிய அவள் உள்ளத்தை உருக்கைப்போல் இருகச்செய்தது. அவள்

கண்களின் முன்னால் வானளாவிய அவளுடைய மாளிகைகள் தீக்கரங்களிலே சிக்கி எரிந்து பொடி சாம்பலாகி விழுந்து மறைவதைப்போன்ற தோற்றம் எழுந்தது. அலறி அடித்துக்கொண்டு வேலைக்காரர் களும், கன்று காலிகளும் அனலில் விழுந்து சாவதை அவள் கண்டாள். அவளுடைய தந்தை அந்தத் தீயிலே தவிதவித்து வெந்து சாவதை அவள் கண்டாள். அவள் உள்ளம் விம்மியது. உடல் துடித்தது. அவள் கண்கள் சிவந்துபோயின. அவனை ஏறிட்டுப் பார்த் தாள். இப்போது அவள், 'பாவம் இளைஞன்' என்று நினைக்கவில்லை. தன் ஜன்ம வைரியைக் கொடிய விரோதியைக் காண்பதாகவே நினைத்தாள்.

அவள் முகத்திலே அந்த உணர்ச்சிகளைப் படித் தான் சர்வாதிகாரி. அந்த அதிகாரிக்குக் கண்களால் கட்டளையிட்டான். அவன் கூறத்தொடங்கினான், "மகாராணி.....ஏழைகளின் உழைப்பை, உயிரை, மானத்தைத்திருடி உயிர் வாழும் கயவர் கூட்டத்தின் தலைமையிலே நிற்பவர்களில் ஒருவன் இந்த துரோகி, இவன் ஜமீந்தாரின் மகன்...இளைய ஜமீந்தார்....." என்று.

அவள் உள்ளம் மீண்டும் புகைந்தது.

அந்த இளைஞன் மண்டியிட்டுக் கீழே விழுந்து மன்றாடி உயிர்ப்பிச்சை கேட்பான், அழுவான், தொழு வான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் அப்படி எல்லாம் செய்யவில்லை மிக நிதானமான குர லில்..." ஜமீந்தாரின் மகனாகப் பிறந்துவிட்டது என் குற்றமா...?" என்று கேட்டான்.

"பேசாதே..." என்று அதட்டினான் அதிகாரி. அவனை முதன் முதலில் சிறைபிடித்த கள்வர்களும் அப்படித்தான் கூறினார்கள். அது அவள் நினைவுக்கு வந்தது, அவள் உடல் நடுங்கிற்று. இப்போது அவள் அவர்களுக்கு ராணி. ஆனால் அடிமையைப்போல் பேசாமல் தான் நின்றுகொண்டிருந்தாள். ஆனால் அவன் பேசாமலிருக்கவில்லை. மிக உறுதியான குரலில் அவன் கூறினான். "நீங்கள் எனக்கு விதிக்கப்போகும் தண்டனையைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. என்னைச் சித்திரவதை செய்வதாக இருந்தால் கூட எனக்குப் பயம் இல்லை. ஆனால் என்னைப் பேசாமல் இருக்க வைக்க உங்களால் முடியாது. நான் எங்கே இருக்கிறேன். யார் முன்னால் இருக்கிறேன். நீங்கள் மகாராணி என்றழைக்கும் அவர் எப்படி இருக்கிறார்.....? அவற்றை நான் பார்க்க விரும்புகிறேன். நான் செய்த குற்றம் என்ன...? உங்களுக்கு நான் என்ன தீங்கிழைத்தேன்...? என்னை நீங்கள் எதற்காக விசாரிக்கிறீர்கள்...? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என்மேல் எந்தச்சிறிய குற்றம் இருப்பினும் அதற்கு எவ்வளவு பெரிய தண்டனை விதித்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். அப்படி இல்லை என்றால்... என்னை அநியாயமாக, அகாரணமாகத் துன்புறுத்துவதோ, கொன்றுவிடுவதோ உங்கள் எண்ணமானால்... அதைத்தடுக்க நான் சக்தியற்றவனாகச் செய்யப்பட்டிருக்கும் இந்த நிலைமையில்.....மனிதர்களில் கேடு கெட்ட மிருகங்கள், காட்டுமிராண்டிகள், என்று நான் உங்களைப்பற்றி எண்ணுவேன். உங்கள் கையால் மடிய நேர்வதைப்பற்றி நான் வெட்கிறேன். ஆனால் அஞ்சவில்லை.....என்றான்,

சர்வாதிகாரி தான் நின்ற இடத்திலிருந்து ஆத்திரத்துடன் முன்னுக்கு வந்தான், 'குற்றமா...மகாராணி .....இவனைப்போன்ற கொடியவர்களை விசாரிப்பதும் அவசியமா?...'

" எவ்விதத்தில் கொடியவன் என்பதைக் கூறுங்கள்...நிம்மதியாக நீங்கள் விதிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன்..."

" நீயும் உன் மனைவி மக்களும், தாய் தந்தையர்களும் உன்னுடைய அரண்மனையில் நிச்சிந்தையாக உறங்கிக்கொண்டிருக்கிறீர்கள்...அந்த அரண்மனைக்கு ஒரு கொடியவன் அனல் மூட்டிவிடுகிறான்...அவனுக்கு என்ன தண்டனை விதிக்கவிரும்புகிறாய்...நீயேகூறு..."

" என் குடி அடியோடு கெட விரும்புபவன் யாராயிருப்பினும் அவனுடைய குடி, தாய் தந்தை மனைவி மக்கள் அனைவரும் அடியோடு தொலையவேண்டும் என்றுதான் விரும்புவேன். ஆனால் நான் அத்தகைய குற்றம் செய்தேனா...என்பதுதான் எனக்குத் தெரிய வேண்டும்..."

" நீ...நீ அல்ல...! உன்னுடைய தந்தை...! "

அவனால் பேசமுடியவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

" ஏன் பேசாமல் இருக்கிறாய்...? ஆணவத்துடன் அகம்பாவத்துடன்...நான் என்ன குற்றம் செய்தேன் என்று கேட்டாயே ஏன் பேசாமல் இருக்கிறாய்...? ஊருக்கு உத்தமர் என்று பெயர் பெற்ற ஒருவர்.....

நாட்டிற்கு நல்லவராக வாழ்ந்த ஒருவர்.....தன் பேராசைத் திட்டங்களுக்கு உதவவில்லை, எதிராளியாக வந்தார் என்பதனால்.....அவர், தன் உயிரினுமினிய அனைவருடனும் உயிருடன் வெந்து சாம்பலாகச் செய்தான் உன் தந்தை...! அதற்குப் பழிதீர்க்கும் படலத்தில் முதல் பலி...நீ...தெரிகிறதா...?''

சர்வாதிகாரி கர்ஜித்தான். அவன் பேசவில்லை. சர்வாதிகாரியினுடைய பேச்சு அவள் உள்ளத்தில் கொதித்துக்கொண்டிருந்த ஆத்திரத்திற்கு அனல் மூட்டிக்கொண்டிருந்தது. அவள் கனல்கிற உள்ளத்துடன் கூறினாள். ''அவன் கண்களை அவிழ்த்துவிடுங்கள்...அவன் பேசவேண்டியதேதாவது இருந்தால் பேசட்டும்...'' என்றாள்.

வீரர்கள் அவனுடைய கண்களை அவிழ்த்துவிட்டனர். அவன் அவளைப்பார்த்தான். கண்கள் ஒளிமழுங்க மீண்டும் பார்த்தான். பார்த்துக்கொண்டே இருந்தான். அவள்தான் முகத்தைத் திருப்பிக்கொள்ள வேண்டியதாயிற்று. ''மகாராணி, உங்களுக்கு மிகவும் நன்றி...உங்களிடம் நான் என் உயிரை யாசிக்கவில்லை ...மரண தண்டனையே ஆனாலும் மனத்திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளத் தயார்...'' என்று கூறிக்கொண்டு சட்டென்று குனிந்து தரையில் முழந்தாளிட்டு யாரும் எதிர்பார்ப்பதற்கு முன்னால் அவள் காலை முத்தமிட்டான்.

அவள் உடல் புல்லரித்தது. தன்னை அறியாமல் ''இவனை இழுத்துச் செல்லுங்கள்...'' என்று கூச்சலிட்டாள்.

10. விடுதலை

வானத்திலே நிலவு பாலொளி பூசிக்கொண்டிருந்தது. பூமியிலே காடுகளும், மலைகளும் எத்தனை விசித்திரமான பயங்கரமான சூழ்நிலைகளை உண்டாக்கி வைத்திருந்தாலும்கூட வானம் மட்டும் எங்கும் எல்லா இடத்திலும் ஒரேமாதிரி அழகியதாய், இள நீலப்பட்டினிலே மின்னுகின்ற நட்சத்திரங்களும், ஒளி பூசும் நிலவும் உடையதாகவே இருக்கிறது. அதை அவள் கண் குளிரப்பார்த்தாள். அந்தக் கடைசி இரவு தான் தந்தையைப்பிரிந்து சென்றதும் உறங்கப் போவதன் முன் உப்பரிகை மேல் நிலவும் நட்சத்திரங்களும் நிறைந்த வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றதை நினைத்துக்கொண்டாள். அவள் உள்ளத்திலே சொல்லவொண்ணாத ஏக்கமும் துக்கமும் விம்மி எழுந்தன. இன்றும் அவள் நிலவும் நட்சத்திரங்களும் நிறைந்த வானத்தைப் பார்க்கிறாள். எவ்வளவு மாறுபட்ட சூழ்நிலையில். அன்று அவளுக்கு எல்லாம் இருந்தன. இன்று...?...

இன்று.....?

அவள் உள்ளத்தில் ஏனோ வெறுமை உணர்ச்சி தோன்றியது. என்ன இருந்தாலும்...எவ்வளவு அழகிய பெயர் அவளுக்கு சூட்டப்பட்டிருந்தாலும், அவள் ...அவள் ஒரு கைதி! சர்வாதிகாரியால் ஆட்டிவைக்கப் படும் பாவை.....! அவளால் அப்படித்தான் நினைக்க முடிந்தது. அப்போது அன்று காலை அவளால் மரண தண்டனை விதிக்கப்பட்ட அந்த இன்னொரு கைதியின் ஞாபகம் வந்தது. அவன் துணிவாக பேசினான். அவனுடைய முகம் கள்ளமற்ற குழந்தையினுடை

யதைப்போல் இருந்தது, ஆனால் அவன் ஜமீந்தாரின் மகன்...! கொடிய ஜமீந்தாரின் மகன்...!!

ஏனோ அவனைப் பார்க்கவேண்டும் என்பதைப் போன்ற உணர்ச்சி அவள் உள்ளத்தில் உண்டாயிற்று. மறுநாள் காலை மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் அந்த இளைஞன் என்ன நினைப்பான்...என்ன தான் செய்துகொண்டிருப்பான்.....என்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவள் மனத்தை அலைக்கழித்தது. உடனே யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற குறுகுறுப்பும் தோன்றியது. அவள் சிறிது நேரம் இதையும் அதையும் யோசித்துக்கொண்டிருந்தாள். அவளுக்குத் திடீரென்று நினைவு வந்தது. ஏதோ ஒரு முக்கிய காரியமாகச் செல்வதாய்க்கூறிச் சர்வாதிகாரி தன் வீரர்கள் அனைவரையும் திரட்டிக் கொண்டு போயிருந்தான். மறுநாள் உதயத்திற்குள் திரும்பிவிடுவதாய்க்கூறி இருந்தான். எனவே யாராவது காவலர்களைவிட வேறு யாரும் அங்கே இருப்பது சாத்தியமல்ல. அதனால்...

அவள் துணிவு கொண்டுவிட்டாள். கையில் மெழுகுவத்தியை எடுத்துக் கொண்டு மெதுவாக நடந்து கைதிகளை அடைத்துவைக்கும் கொட்டகைக்கு அவள் புறப்பட்டாள். வழியில் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று திரும்பித் திரும்பிப்பார்த்துக் கொண்டாள். நல்லவேளை...தோழிகள் எல்லோரும் உறங்கிப்போயிருக்கவேண்டும். யாரையுமே காணோம்...!

விளக்கைத் தன் மேலாடையால் மறைத்துப் பிடித்துக்கொண்டு அவள் மெல்ல மெல்ல நடந்தாள்.

கைதிக் கொட்டடி சந்தடியில்லாமல் இருந்தது. அவன் தன் அன்புக்குரியவர்களை நினைத்து மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பான் என்று நினைத்தாள். அந்த நிலையில் அவன் எப்படி இருக்கிறான் என்று பார்ப்பதற்காகச் சந்தடிசெய்யாமல் சாளரத்தின் வழியாக எட்டிப்பார்த்தாள். அவள் திடுக்கிட்டாள். அங்கே அவனைக்காணோம். இரத்த வெள்ளத்தில் மூழ்கிப்போய் ஒரு மனிதன் கிடந்தான். அவன் உடலிருந்து இன்னும் ரத்தம் பொங்கிக்கொண்டிருந்தது. அவன் அவனல்ல. காவலுக இருக்கவேண்டும். மிக வேகமாக அவள் கொட்டடியை நோக்கி நடந்தாள், கதவுகள் திறந்துகிடந்தன. வாயில் அருகே இன்னொரு மனிதனும் பிணமாகிக்கிடந்தான். அந்த நள்ளிரவிலே மரணப்பேய் அந்தப்பாழும் கானக மலைக் குகையில் கூத்தாடிக் கொண்டிருப்பதைப்போல் அவள் உணர்ந்தாள் கிடுகிடென்று அவள் உடல் நடுங்கியது. மெழுகுவத்தியைத் தூக்கிக்கொண்டு தன் அறையை நோக்கி ஓடினாள்.

வழியிலே எதன் மேலோ மோதிக்கொண்டு அவள் உருண்டு விழப்போனாள். ஆனால் வலிவான இரண்டு கைகள் அவளைப் பிடித்துக்கொண்டன. அவள் நிமிர்ந்து பார்த்தாள், அவன்...! அவள் உடல் நடுங்கிற்று. ஆனால் தன் தந்தையும் அவருடன் அவரைச்சேர்ந்த அனைவரையும்கொன்றழித்த மாபாதகனின் மகனிடத்தில் அச்சங்கொண்டு அலறி நிற்க அவள் விரும்பவில்லை. இழந்துபோன துணிவைத் திரும்பிப்பெற முயன்றவளாய்க் கால்களை ஊன்றி நின்றாள்.

"தேவி...மன்னிக்கவேண்டும். தங்கள் உத்தி ரவை மீறி என்னை நானே விடுவித்துக்கொண்டேன். என்னை இப்படிச் செய்யத் தூண்டியது வேறு யாரும் அல்ல...தாங்களேதான்..." என்றான்.

"நான்...இல்லை. ஒருக்காலும் இல்லை...!"

"ஆமாம்...நீங்களேதான்...! கண்களை கட்டப் பட்டு நிறுத்தப்பட்டிருந்த என்னை அப்படியே என்ன செய்திருந்தாலும் செய்திருக்கலாம். அல்லது தங்கள் எதிரில் அல்லாமல் வேறு எங்காவது அந்தப்படக்கமாகக் கொண்டுபோய்க் கண்களை அவிழ்த்துவிட்டிருந்தாலும் நான் மீண்டும் உயிர் வாழவேண்டும் என்று ஆசைப் பட்டிருக்கமாட்டேன். ஆனால்...! மறுபடியும் உயிர் வாழவேண்டும் என்ற ஆசையை என் மனத்திலே தூண்டிவிட்டது...அதன் காரணமாய் என்னசெய்தும் விடுதலை அடைந்துவிடவேண்டும் என்ற தவிதவிப்பை என் உள்ளத்திலே உண்டாக்கியது...அது வேறொன்று மல்ல தங்களைக்காணும்படி என்னை அனுமதித்தது தான்....."

அவள் அவனை ஏறிட்டுப்பார்த்தாள். "நீ என் ஜென்ம வைரி...! என்னிடம் அன்போ இரக்கமோ எதிர்பார்க்கவேண்டாம்.....உன்னை எதிர்த்து நிற்க எனக்கு வலிமை இல்லை. உயிர்மேல் ஆசை இருந்தால் இப்போதே ஓடிவிடு..." என்றாள்.

"தேவி...நான் உயிர்மேல் ஆசைப்பட்டுவிட்டேன் அதைக் காப்பாற்றிக்கொள்ளும் துணிவு எனக்கு இருக் கிறது. உங்கள் மேலும் ஆசைகொண்டுவிட்டேன். ஆசிக்கும் பொருளை அடையும் வழி எனக்குத் தெரி யும்..."

அவன் திமிராகப் பேசினான் அவள் சினத்துடன் சீறினாள்: "பாதுகாவலின்றி நிற்கும் பெண்ணிடம் தகாத வார்த்தைகள் பேசுவது மனிதத்தன்மை அல்ல ...சென்று விடு..."

அவன் சடக்கென்று அவள் காலடியில் அமர்ந்தான், 'நான் பேசியது குற்றமானால் என்னை மன்னித்துவிடு.....! மன்னிக்க விருப்பமில்லையானால் என்னைக்கொன்றுவிடு...! இப்போது நான் கொலைகாரன். உன் பிரஜைகளில் இரண்டு பேரைக்கொன்ற கத்தி இன்னும் என்னிடம்தான் இருக்கிறது...' என்று சொல்லிக்கொண்டே அவன் தன் இடுப்பில் சொருகியிருந்த கத்தியை உருவி அவள் காலடியில் வைத்தான்

அவனுடைய வீரம் அவளை மெய்நடுங்கச் செய்தது. உயிரை மதியாத அந்த இளைஞனின் போக்கு அவளுக்கு வியப்பைத்தந்தது. தன் தந்தையையும் பிறரையும் நள்ளிரவில் கொள்ளிவைத்துக் கொன்றவனுடைய மகன் என்ற எண்ணம் மட்டும் இல்லாமல் இருந்தால் அவள் அந்தச் சமயத்தில் அவன் மேல் பாய்ந்து தழுவிக்கொண்டிருப்பாள். என்ன செய்வதென்று புரியாமல் அவள் மௌனமாக நின்றாள்.

"தேவீ...உங்களுடைய மாளிகைக்கு ஜமீந்தாரின் ஏவலர்கள் தீ மூட்டிவிட்டார்கள். உங்கள் தந்தை ஏவலர்களுடன் வந்து சாம்பலாக நேரிட்டது என்பவற்றைக்கேட்ட என் உள்ளம் துடிதுடிக்கிறது. அதை நினைக்க நினைக்க என் நெஞ்சு நடுங்குகிறது. தேவீ... என் தந்தை என்று சொல்லிக்கொள்ள வெட்கமாக இருக்கிறது. அந்தச் சதிகாரனுக்கு முதல் விரோதி நான்தான், நேற்றிரவு என்னை ஆத்திரம்கொண்ட

கள்வர்கள் கொல்வதால் அவன் பேராசை தீரட்டும் என்று எண்ணினேன். அந்த எண்ணம் மாறிவிட்டது. நான் மடிவதால் ஒருவேளை ஜமீந்தாரின் மனம் மாறலாம். ஆனால் இந்தக் கொடுங்கோலன் சர்வாதிகாரியிடமிருந்து நீங்கள் மீள்வது எப்படி...? உங்களை மீட்பதற்காகவே நான் உயிர் வாழத்துணிந்தேன்.

அவள் கூச்சலிட்டாள்..." அது நடைபெறாது..."

அவன் சிரித்தான், " என்னால் முடியும்...!" தேவீ மறுப்பதற்கு முன்னால் நான் உரைப்பதை கேளுங்கள்.

" நீங்கள் எனக்கு மரண தண்டனை விதித்தீர்கள். ஆனால் சர்வாதிகாரி என்னை மன்னிப்பதாய்க் கூறினான் நீங்கள் என்னை ஜென்ம வைரி என்கிறீர்கள். அவன் என்னை உயிர் நண்பனாய்க்கொள்ள முன்வந்தான். மகாராணீ...உங்கள் நிர்வாகம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். நான் உங்களுக்கு வைரியானால் உங்கள் முன்னால் என்னைத் தூஷித்துப் பின்னால் என்னோடு உறவுகொண்டாட வரும் அவன் உங்களுக்கு என்னைவிடக் கொடிய விரோதியாக அல்லவா இருக்க வேண்டும்...? "

" சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டேன் ஜமீந்தாரைப் பிடிப்பதற்கு உபாயங்கள் கூறுவதாய்ச் சில பொய்யான தகவல்கள் கொடுத்தேன். அவற்றை மெய் என்று நம்பிச் சர்வாதிகாரி தன் படைகளுடன் சென்றுவிட்டான். நான் தப்பிவிட்டேன்..."

" சர்வாதிகாரி சூழ்ச்சியாக என்னையும் என் தந்தையையும் ஒரே அடியாகப்பிடித்துக்கொள்ள இந்தத் தந்திரத்தைக் கையாண்டிருக்கலாம், ஆனால் நான் அவனை ஏமாற்றிவிட்டேன்."

"தேவீ...ஒன்றைமாத்திரம் நம்புங்கள் சர்வாதி காரியைவிட நான்தான் உங்களின் உத்தம நண்பன்... ஆம்...அதை மாத்திரம் மறந்துவிடவேண்டாம்..."

வெளியே பாய்ந்து வரும் குதிரைகளின் காலடி ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன, இப்போது அவை நெருங்கிவிட்டதை அவர்கள் நன்றாகக்கேட்க முடிந் தது. அவன் பதற்றத்துடன் கூறினான். "தேவீ... அவர்கள் திரும்பிவிட்டார்கள். என்மேல் அளவுகடந்த ஆத்திரத்துடன் வந்திருப்பார்கள். நான் தங்கள் அறையில் அடைக்கலம் புகுகிறேன். விருப்பமிருந் தால் என்னைக்காப்பாற்றுங்கள்..." என்று கூறிவிட்டு ஒரே பாய்ச்சலில் மேலே ஓடிச்சென்று அவளுடைய அறைக்குள் புகுந்துகொண்டான்,

அவள் மனம் அடியோடு குழம்பிவிட்டது. சர் வாதிகாரி அவனோடு மறைவில் உறவுகொண்டாட முனைந்தது உண்மைதானா...அது சரிதானா என்பதைப் பற்றியே அவள் யோசித்துக்கொண்டு நின்றாள். தன் அறையை நோக்கி நடந்தாள். வாயில்படிவரை வந்த பின் அதற்குமேல் செல்ல அவளுக்குத் துணிவு வர வில்லை. கீழே பரபரப்புடன் அங்கும் இங்கும் ஆட்கள் அந்தப் புதிய கைதியைத் தேடி ஓடும் குழப்பமும் பரபரப்பும் கேட்டன, தோழிகளின் அறைகள் கூடச் சோதிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. அவளுடைய அறையை நோக்கி யாரோ வரும் காலடி ஓசைகள் கேட்டன, அவள் உடல் நடுங்கியது. அறைக்குள் துள்ளி ஓடினாள்.

11. குழப்பம்...!

சர்வாதிகாரி அறைக்குள் நுழைந்தபோது அவள் கன்னத்தின்மேல் கைவைத்து உட்கார்ந்துகொண்டிருந்தாள், அவள் உடலில் ஏற்பட்ட இலேசான நடுக்கத்தை அவள் சமாளித்துக்கொண்டாள். தன்னை மறந்து தன் அறையை சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துக்கொண்டாள். அவன் எங்குதான் சென்று மறைந்தானோ...? எங்குமே காணப்படவில்லை.

"மகாராணி உறங்கவே இல்லைபோல் இருக்கிறது..." என்றான் சர்வாதிகாரி. "ஆமாம்..." என்றாள் அவளை அறியாமல். உடனே தான் தடுமாறி விடக்கூடாதென்று மனதை உறுதியாக நிலை நிறுத்திக் கொண்டான். தன் முகத்தில் கலவரச் சாயை பரவுவதை மறைப்பதற்காகக் கண்களைக் கசக்குவதுபோல் பாசாங்கு செய்தாள்.

"ஏன்...?" சர்வாதிகாரி நிதானமாகக் கேட்டான்.

அவ்வளவு பரபரப்புக்கிடையிலும் அவன் நிதானமாகப் பேசியதுதான் அவளையும் நிதானமாகப் பதில் கூறும் நிலையில் வைத்தது.

"அநியாயமாக ஒரு உயிரைக் கொல்ல நாம் யார்... என்ற சிந்தனை என் மூளையைக் குழப்பிவிட்டது..."

"அநியாயமாக அல்ல.....நியாயமாகத்தான்..... எத்தனையோ ஏழைகளை அவர்கள் நித்தநித்தம் கொன்று கொண்டிருக்கிறார்கள். ஏன் உன் தந்தையையே....."

'வேண்டாம் அதைச் சொல்லிக்காட்டவேண்டாம் என் மனம் வேதனை அடைகிறது."

சிறிது நேரம் அவள் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவனும் பேசவில்லை. பிறகு. "கண்ணம்மா...அந்தக் கைதி அநியாயமாக மரண தண்டனை அடைவதைப்பற்றி இனி நீ கவலைப்பட வேண்டாம். அவன் தப்பி ஓடிவிட்டான்..." என்றான்.

"ஓடிவிட்டானா...?"

அவள் குரலில் பரபரப்பு ஏதும் இல்லை. அவன் அதைக் கவனித்தான். "ஏன்.....நீ அதைக்குறித்து மகிழ்ச்சி அடைவாய் போலிருக்கிறதே..."

"இல்லை...எனக்கு அதைக்குறித்து மகிழ்ச்சியோ துக்கமோ எதுவும் இல்லை...ஆனால் அவனால் எப்படித் தப்பிச்செல்ல முடிந்தது என்பதைத்தான் கேட்கிறேன்..."

"அவன் என்னை ஏமாற்றிவிட்டான். நல்லவன் போல் நடித்தான் நயவஞ்சகன்...! உள்ளதைக்கூறுவதாய் உறுதி கூறினான் உலுத்தன். அவன் வார்த்தைகளை மெய் என்று நம்பினேன், பொய்யாக்கிவிட்டான்..."

"எதிரியை நம்பி ஏமாறுவதா...? ஒரு சர்வாதிகாரியிடம் முதன்முதலாக இந்த வார்த்தைகளைக் கேட்கிறேன்..."

"கண்ணம்மா...அவன் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்னிடமிருந்து தப்பமுடியாது. அவன் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எனக்கு வேலை இருக்கிறது நான் வருகிறேன்."

பேசிக்கொண்டிருந்த சமயத்தில் அவனுடைய கண்கள் அந்த அறை முழுவதையும் துருவித் துருவிப்

பார்த்துக்கொண்டிருந்ததையும் அவள் கவனித்தாள். அதுமாத்திரம் அல்ல, அவன் அவளையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். அவளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது புரியவில்லை. அவளுடைய ஜென்ம வைரியாகக் கருதிய அந்த இளைஞன் அவளுடைய அறையில் பதுங்கி இருக்கிறான், காட்டிக்கொடுத்து விட்டால் ஒருகணத்தில் அவனைச் சித்திரவதை செய்து சின்னபின்னமாகக் கிழித்துவிடுவார்கள். ஆனால் அவள் அப்போது அதை விரும்பவில்லை. ஆனால் அவன் இருக்கும் அந்த அறையில் இருக்கவும் அவளுக்கு விருப்பம் இல்லை. அவள் வெளியே வந்து அதிகாலையில் மலர்ந்து கொண்டிருக்கும் வானத்தைப் பார்த்தாள். சில்லென்ற காற்று வீச ஆரம்பித்திருந்தது, காற்றில் ஏதோ ஒருவித மணம் கலந்திருந்தது, வானத்தின் கருநீல விளம்பின்மேல் இளம் கதிர்கள் ஒளி பூச ஆரம்பித்துக்கொண்டிருந்தன. அவள் கண்களிலே கண்ணீர் துளிர்த்தது. பெருமூச்சுடன் அந்த அழகுக் காட்சியைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள்.

நெடுநேரம் அவள் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். பொழுது நன்றாக விடிந்துவிட்டது. காட்டுப் பறவைகளின் ஆரவாரம் கானகமெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. தோழிகள் அவளைத்தேடிக் கொண்டு வந்தனர். அவள் விருப்பமில்லாமலேயே அவர்கள் பின்னால் நடந்தாள்...அவள் மனதில் கொந்தளித்துக்கொண்டிருந்த குழப்பத்திலிருந்து விடுபட அவளுக்கு வழி தோன்றவில்லை.

12. வைரிக்கு விருந்து ..!

அன்று பகல் முழுவதும் அவள் அவனைக்காணவே முடியவில்லை. யாரும் இல்லாதபோது அவளே தன் அறையைச் சோதனை செய்து பார்த்தாள். அவன் எங்குதான் எப்படித்தான் சென்று மறைந்தானோ... எங்குமே காணவில்லை.

பொழுது மறைந்தது. தோழிகள் மெழுகுவத்தி களைக்கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றனர். அவள் வெட்ட வெளியைப் பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள். களைத்துப்போய்ப் படுக்கையின் மேல்வந்து அமர்ந்தாள். ஒரு தரல்மெதுவாக "தேவீ... எனக்கு உணவுவேண்டும்..." என்று கூறியது. அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். படுக்கையை உதறி னாள் கட்டிலின் கீழே மூலை முடுக்குகளில் எல்லாம் தேடினாள். எங்குமே அவன் காணப்படவில்லை.

அவன் துரோகி. அவளுடைய ஜென்ம வைரி...! அவள் உடல் நடுங்கியது. ஆனால் தோழிகள் அவ ளுக்கு உணவு கொண்டு வந்தபோது அவள் தயங்கி னாள். ஆனால் எப்போதும் தனக்காக வைக்கப்படும் அளவிற்குமேல் வைக்கும்டடி அவள் கூறவில்லை. அகாரணமாக சந்தேகத்திற்குஇடம் கொடுக்க அவள் விரும்பவில்லை. அவள் உண்ணவும் இல்லை. அந்த அறையில் இருக்க அவளுக்குப் பிடிக்கவும் இல்லை. வாயில் அருகிலேயே வந்து நின்றுக்கொண்டிருந்தாள்.

மெல்ல மெல்ல இரவு நகர்ந்துக்கொண்டிருந்தது. சர்வாதிகாரி அதன் பிறகு வரவில்லை. வேறு ஆட்க ளும் யாரும் அவள் அறைக்கு வரவில்லை, கீழே தோழி கள் படுக்கைக்கு செல்வதை அவள் கவனித்தாள்.

அவளுக்குமட்டும் உறக்கம் வரவில்லை. பேசாமல் நின்று கொண்டேயிருந்தாள்.

நள்ளிரவை நெருங்கும் சமயம் அவள் அறைக்குள் நடமாட்டம் தெரிந்தது, அவள் திரும்பிப் பார்த்தாள். அவன்...! இந்நேரம் அவன் ஆவி உருவில் தான் இருந்திருக்கவேண்டும். அவள் உடல் நடுங்கியது. அவன் மெதுவாக அவள் அருகில் வந்தான். "தேவீ...! என்னால் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் நேரிடாது, தயவுசெய்து உள்ளே வாருங்கள்" என்றான். அவள் குழந்தைப் போல் அவன் பின்னால் நடந்தாள். கதவை அடைத்துவிட்டு...ஒரு கணம் அவள் முகத்தைப் பார்த்தபின்... "தாங்கள் உண்ணவில்லை போலிருக்கிறதே" என்றான்.

"எனக்குப் பசிக்கவில்லை..."

"அப்படியானால் எனக்கும் பசிக்கவில்லை..."

சிறு மௌனத்திற்குப் பின் அவன் மீண்டும் கூறினான். "தேவீ...உங்கள் தந்தையை உயிருடன் எரித்துக் கொன்ற கொடும்பாவியின் மகன் நான். நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். சர்வாதிகாரியிடம் ஒரு வார்த்தை கூறியிருந்தீர்களானால் போதும் என்னை அவன் அணு அணுவாகச் சித்ரவதை செய்திருப்பான்.

"தேவி...நான் ஒரு கொடியவனின் மகன் தான். ஆனால் நானும் கொடியவன் அல்ல. நான் ஒரு துரோகியின் மகன் தான். ஆனால் துரோகி அல்ல. ஆனால் தேவீ... இந்த சர்வாதிகாரி ஒரு கொடும் துரோகி. ஏன் நீங்கள் என் கண் கட்டை அவிழ்க்கும்படி கட்டளை யிட்டவுடன் இவன் திடுக்கிட்டான். நான்

அப்போதே சந்தேகித்தேன், ஆனால் இன்று காலை இவன் தங்கள் அறையில் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தவுடன் என் சந்தேகம் பறந்து விட்டது.

"ஏழைகளுக்காக மனம் கனிந்து அவர்கள் துயரத்தைத்தீர்ப்பதற்காக என்னென்னமோ செய்யப் போவதாய் கூறினான் அல்லவா...? ஆனால் உண்மையில் ஏழைகளின் பரம வைரி இவன் தான். ஜனங்களை ஏமாற்றுவதும், கொள்ளையடிப்பதும், கொலை செய்வதுமே இவன் தொழில். நல்லவனைப் போல் நடிக்கும் இவன் ஒரு பரம சண்டாளன். உங்களுக்கு இவற்றை நான் நேரிலேயே நிரூபித்து வைக்கிறேன்..." என்றான்.

"சர்வாதிகாரி இங்கே வந்தபோது. நீங்கள் எங்கே இருந்தீர்கள்...?"

"உங்கள் கட்டிலுக்கு கீழேதான் இருந்தேன். ஆனால் அதன் கட்டைகளைப் பிடித்துக்கொண்டு படுக்கைக்குச் சமமாகத் தொங்கிக் கொண்டிருந்ததனால் தான் நான் யார் கண்ணிலும் படவில்லை."

"இன்று பூராவுமா...?"

"இல்லை. தங்கள் கட்டிலுக்குக் கீழே ஒரு ரகசிய வழி இருப்பதை நான் கண்டுபிடித்தேன். பகல் பொழுதில் இந்த அறைக்குள் இருக்க முடியாதென்பதனால் அதை உபயோகித்துக்கொள்ள நினைத்தேன். ஆனால் அது கானகத்திற்கு வெளியே சபரி நதி எல்லையில் உள்ள ஒரு கோட்டைக்குக் கொண்டுபோய்விட்டது. அங்கே சர்வாதிகாரியின் ஆட்கள் காவல் புரிகின்றனர். சிறிது ஏமாந்திருந்தால் அவர்கள கையில் அகப்பட்டுக் கொண்டிருப்பேன். ஆனால் நான் தப்

பித்துக்கொண்டேன். அதனுலேயே மீண்டும் இங்கு வர நேர்ந்தது.

"இன்று பகல் முழுவதும் நீங்கள் ஒன்றுமே உண்ணவில்லையா...?"

"இல்லை..."

"அப்படியானுல் சாப்பிடுங்கள்..."

'நீங்கள் சாப்பிட்டால் நானும் சாப்பிடுகிறேன்...'

அவள் தனக்காக வந்திருந்த உணவை இரண்டு இலைகளில் பரிமாறினுள். அவன் அவளே முதலில் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். ஒரு கவள உணவை அவள் தன் மெல்லிய விரல்களால் வாயில் இடுவதைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே "தேவீ...நான் கூறுவதை எல்லாம் நீங்கள் நம்புகிறீர்கள். அது எனக்கு அளவு கடந்த மனவேதனையை அளிக்கிறது. நான் எப்போர் பட்ட கொடும் துரோகிக்கு மகனுய்ப் பிறந்திருக்கிறேன் என்பதை நினைத்துக்கொண்டால் என் உள்ளமே துடிதுடிக்கிறது. தேவீ...இந்த சர்வாதிகாரியார் என்பதை நான் தங்களுக்கு நிரூபிக்கவேண்டும். அவனும் என் தந்தையைப்போல் ஒரு கொடியவன் தான் என்பதையும் மெய்ப்பிக்கவேண்டும். உண்மையாகவும் நேர்மையாகவும் உலகத்திற்காக உயிர் வாழும் தன்மையை அடைய நாம் எவ்வளவோ தியாகம் செய்யவேண்டும். நம்முடைய சொத்துக்களையும் மாத்திரம் இழக்கத் தயாராகிவிட்டாலும் போதாது. நம்முடைய சொந்த விருப்பு வெறுப்புக்களையும், மான அவமானங்களையும் கூடத் தியாகம் செய்துவிட வேண்டும். நான் மனிதனுக வாழவேண்டும் என்று விரும்புகிறேன். அதனுல் உங்களுக்கு இவற்றை விளங்க வைக்கிறேன்" என்ருன்.

13. எல்லைகளில்...!

சாப்பிட்டவுடன் அவன் புறப்பட்டுவிட்டான். அந்த இரவில்தான் சபரிக்கோட்டை வீரர்களிடமிருந்து தப்பமுடியும் என்று கூறினான். உண்மையாகவே அவளுக்கு அவனிடம் அளவுகடந்த இரக்கம் உண்டாகியிருந்தது. நச்சரவை வெறுப்பதைவிடக் கொடுமையாக வெறுக்கப்பட்ட ஒருவனிடம் தனக்கு எப்படி இவ்வளவு பரிவுவந்தது என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. நடுக்கத்துடன், "நீங்கள் எப்படி அவர்களிடமிருந்து தப்புவீர்கள்....." என்றுகேட்டாள்.

"தேவீ...அதைப்பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம்...அது என்னால் முடியும் என்று கூறிக் கொண்டே அவன் கட்டிலின் அடியில் சென்று ஒரு கடப்பைக் கல்லைப் பிடித்து உயர்த்தினான். அதை அவள் கவனித்தாள். தளம் முழுவதும் கடப்பைக் கற்களால் பாவப்பட்டிருந்ததால் மற்ற கற்களிலிருந்து அது பிரித்துணரப்பட முடியாததாக இருந்தது. அதன் கீழே அவன் மெதுவாக இறங்கினான். படிப் படியாக இறங்கிக்கீழே சென்று மறையும்வரை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். மறுபடியும் கடப்பைக் கல் தளத்தில் பதிந்து சமதரையாகிவிட்டது. அவள் சிறிது நேரம் அதைப் பார்த்துக்கொண்டே நின்றாள். பிறகு என்ன செய்வதென்று தெரியாமல் கட்டிலின் மேல் உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கிவிட்டாள்.

அவள் நன்றாக உணர்ந்தாள், இந்தச்சிறிது நேரத்தில் அவன் அவளுடைய உள்ளத்தைக்கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டான். அவனுக்காக

இப்போது அவள் அஞ்சினாள், நடுங்கினாள், அழுகாத துயரத்திலே ஆழ்ந்தாள். ஆபத்து ஏதுமின்றி அவன் போய்ச்சேரவேண்டுமே என்று அவள் உள்ளம் தவி தவித்துக்கொண்டிருந்தது. ஆனால் ஒரு நாளைக்கு முன்னால் அவள் அவனுக்கு மரண தண்டனை விதித் தாள். அவனுடைய அழகிய தலை, அழகிய உடலி லிருந்து வாளால் நறுக்கப்படவேண்டும் என்று தீர்ப் பளித்தாள். அவன் அவளுடைய தந்தையை உயி ருடன் எரித்துக்கொன்றவனின் மகன்...!

உணர்ச்சிகள் அவளை அலைக்கழித்தன. நட்சத் திரங்கள் நிறைந்த வானத்தையும் நறுமணம் நிறைந்த காற்றையும் அவள் அனுபவித்துக்கொண்டிருந்தும் அவள் உள்ளம் வெறிச்சென்று கிடந்தது. ஆனால் இடை இடையே அவள் மனக் கண் எதிரே தோன்றிய ஒரு முகத்தின் சாயை அவளைத் திடுக்கிட்டுத்திடுக் கிட்டு நடு நடுங்கச் செய்துகொண்டே இருந்தது. அது சர்வாதிகாரியினுடைய முகம்.

முதல் பாகம் முற்றிற்று.



இரண்டாம் பாகம்

1. சதிகாரர்கள்

உல்லாச வனத்திலே ஜமீந்தார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் அருகே அடியார் சிவப்பழமும் அமர்ந்திருந்தார். ஜமீந்தார் முகத்தில் கோபம் கொதித்துக்கொண்டிருந்தது. சிவப்பழம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். ஜமீந்தாரின் அந்தரங்க ஆலோசனையாளர்கள் சிலர் நின்றுகொண்டிருந்தனர்.

அடர்ந்து வளர்ந்த செடிகளின் பசுமையும், அவற்றின் இளம் இலைகளின் தலையை வருடி, மலர்ந்த மலர்களை அணிந்து, குறு குறுவென்று வந்து வீசும் நறுமணத் தென்றலும், நல்ல நிலவின் அழகிய ஒளியும் எதுவுமே ஜமீந்தாரின் கோபத்தை ஆற்றக் கூடியதாக இல்லை. எதுவுமே சிவப்பழத்தின் சிந்தனையை மாற்றக்கூடியதாகவும் இல்லை.

இளைய ஜமீந்தாரை யாரோ ஊர்பேர் தெரியாத கூட்டத்தினர் கவர்ந்து சென்றனர் என்றதுமே சிவப்பழத்தின் தலையில் சிந்தை வந்து புகுந்துகொண்டது. அவர் இன்னும் இளைஞர். இளமையின் குருட்டு வெறியிலே சிவனடியாரானவர். ஆசாபாசங்களின் அவல நினைவுகளை ஒழிக்க முயன்று முயன்று அதிலே அடைந்த பயங்கரத் தோல்விகளால் அவர் நைந்து போயிருந்தார். பாவம்! இளைய ஜமீந்தார் சிறைப் பட்டார் என்றவுடனே "ஐயோ அப்படியா.....நான் போய் இளவரசின் மனைவி இந்திராணியைப் பார்த்துத் தேறுதல் கூறுகிறேன்," என்று சொல்லிவிட்டுப் புறப்படத்துடித்தார். ஆனால் ஜமீந்தாரின் கோபத் தீயைக்

கிளறக்கூடிய செய்திகள் அந்த வேளையில் வந்துசேர வேண்டும்.

கமலகிரிக் கோட்டையை முதல்நாள் அந்தக் கொடியவர்கள் தாக்கினர். அன்று பட்டப் பகலில் சமதிபுரம் கிராமத்திற்குத் தீயிட்டுவிட்டனர். இதற்கிடையிலே ஜமீந்தாரிடமிருந்து அரசருக்கு ஓலை கொண்டுபோன தூதுவர்களை வேறு நன்முக உதை உதை என்று உதைத்து ஓலையையும்பறித்துக்கொண்டு துரத்தியிருக்கின்றனர்.

இந்தக் காரியங்களை யார் செய்திருக்கக்கூடும் என்பதுதான் அவருக்குப் புரியாத மர்மமாக இருந்தது இதுவரை யாருமே மகாவல்லமை நிறைந்த ராஜாதி ராஜ ரணசிங்க பூபதியை இவ்வளவு கட்டுப்பாடாக, பயங்கரமாக எதிர்த்தது கிடையாது. இந்தப் பொடிப் பயல்கள் எங்கே இருந்து முளைத்திருக்கிறார்கள் என் பதைத்தான் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பூலோகத்திலேயே அவருக்கிருந்த ஒரே எதிரி கருணாகர பூபதி, அவர்தான் எல்லாவிதங்களிலும் அவருக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே வந்தார். அரசாங்கத்தைக் கைப்பற்ற அவர்செய்து வந்த சதியைப்பற்றி அம்பலப்படுத்தக்கூட முயன்றுவிட்டார். அந்தச் சதிகாரனைத்தான் கூண்டோடு கைலாசம் அனுப்பியாயிற்று. வேறுயார்தான் இப்போது திடுதிப்பென்று இப்படி முளைத்திருக்கிறார்கள்...?

இந்த எதிர்ப்புகளைப் பற்றிச் சிறிதுக்கூட கவலைப் படுபவர் அல்ல ஜமீந்தார். இதுவரை எத்தனை எதிர்ப்பு களை அவர் முளையோடு கிள்ளி எறிந்திருக்கிறார். இதற்கு மாத்திரம் பயந்துவிடவா போகிறார். ஆனால்...

'சட்'டென்று அவர் மனசில் வேறொரு சந்தேகம் தோன்றியது. கருணாகரரின் படையைச் சேர்ந்த ஆட்கள் தான் இப்படி மறைந்து நின்று தம்மைத் தாக்குகின்றார்களோ என்று நினைத்தார். அவ்வளவுதான் கோபம் அவருடைய உச்சாந்தலைக்கு ஏறிவிட்டது... "விட்டேனா பார்...துரோகிகளா...இந்த ரணசிங்கன் எதிரிகளின் சிறு குஞ்சைக்கூட மிஞ்சவிடமாட்டான்," என்று கத்திக்கொண்டு எழுந்தார்.

"எங்கே புறப்பட்டுவிட்டீர்கள்.....?" என்று கேட்டுக்கொண்டே கூடவே எழுந்தார் சிவப்பழம்.

"ஆமாம்.....இப்போதே புறப்பட்டால் தான் என்ன.....?"

"ஜமீந்தார்...இப்போது வேண்டாம். காலையில் வைத்துக்கொள்வோம், எதையும் கவனித்து நிதானமாகச் செய்வதுதான் அறிவுடையோருக்கழகு..."

ஜமீந்தார் ஒருகணம் யோசித்தார். "உம்ம்..... நீங்கள் அரசரின் ஆலோசகர் என்பதற்காவது உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும். ஆனால் காலையில் என்னை எதிர்பார்க்கவேண்டாம், பொழுது விடிவதற்கு முன்பே நான் புறப்பட்டு விடுவேன்..."

"ஐயாவுக்கு எவ்வளவோ அலுவல்கள்...இந்த ஏழையைக் கவனித்துக்கொண்டிருக்க முடியுமா...?"

ஜமீந்தார் சிரித்துவிட்டார். "அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்...?"

இலேசான புன்னகையுடன் சிவப்பழம் கூறினார், "உண்மையைத்தான் சொன்னேன்....."

"அது என்ன...? அடியார்கள் எதைச் சொன்னாலும் உண்மையாகிவிடுமா.....?"

"உலகம் இப்படி இருக்கிறது ஐயனே...? யார் என்னத்தைச்சொல்ல. சரி...நீங்கள்போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். பாவம்...இந்திராணி என்னசெய்து கொண்டிருக்கிறாள் என்று பார்த்துவிட்டு வருகிறேன்..."

"ஆமாம் ஆமாம்.....நானும் அதைச் சொல்ல வேண்டும் என்றுதான் நினைத்தேன். பாவம்...அவள் அழுது செத்துக்கொண்டிருப்பாள்....."

ஆண்டையும் அடியாரும் விடைபெற்றுக்கொண்டனர்.

2. இந்திராணி

இந்திராணி அழுது செத்துக்கொண்டிருக்கவில்லை சுகமாக அலங்கரித்துக்கொண்டு மஞ்சத்தின் மேல் சாய்ந்தவாறு தோழிகளுடன் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தாள். அவர்கள் ஆடியும் பாடியும் தலைவியை மகிழ்வித்துக்கொண்டிருந்தனர்.

சிவப்பழம் திடுக்கிட்டவர்போல் நின்றார். "வருக வருக...அடியார் வருக....." என்று கூவிக்கொண்டு குதித்தெழுந்து வரவேற்றாள் இந்திராணி. சிவப்பழம் ஒருகணம் யோசித்தார். 'நல்லது. இவளுக்கு கணவனுக்கு வந்த கதியைப்பற்றி ஒன்றும் தெரியாதுபோலிருக்கிறது. இதை நாம் ஏன் கூறவேண்டும்' கொஞ்ச நேரம் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கவாவது வாய்ப்புக் கிடைக்கட்டும் என்று நினைத்தவாறு அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு நின்றார். ஆனால் இந்திராணியே ஆரம்பித்துவிட்டாள். "உங்களுக்குத் தெரியுமா...? அவரை யாரோ பிடித்துக் கொண்டுபோய்விட்டார்களாம்..."

ஒன்றும் தெரியாதவர்போல் கேட்டார் சிவப் பழம்..." எவரை...? "

" அவரைத்தான், இளைய ஜமீந்தாரை..."

" என்ன...? இளைய ஜமீந்தாரையா...? "

" ஆமாம்..."

'யார் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களாம்?'

" யாரோ கானகத்துக் கள்வர்கள்.....? "

சிவப்பழம் காதுகளைப் பொத்திக்கொண்டார். " என்ன விபரீதமான செய்தி...? இப்படியும் நடை பெறுமா...? "

" ஏன் நடைபெறாது...? ஏமாந்த சோணகிரியாய் ...சோனியாய்..."

" அடடா...என்ன கஷ்டகாலம். இந்திராணி கண்கலங்க அழுதிருப்பாய்...அதுதான் உன் கண்கள் சிவந்திருக்கின்றன...."

" இல்லவே இல்லை.....! நான் எதற்காக அழ வேணடும்...? "

" எதற்காக அழவேண்டுமா...? இந்திராணி என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்...? எனக்கு லௌகீகம் தெரியாது என்று நினைக்கிறாய். புகழேந்தி நளனைப் பிரிந்த தமயந்தியை எப்படி வர்ணிக்கிறார் தெரியுமா... பாடிக்காட்டட்டுமா...? "

" வேண்டாம் வேண்டாம். நீங்கள் பேசினாலே போதும்..."

" உனக்கு இன்னும் குழந்தைத்தனம் போக வில்லை. அதுதான் குதூகலமாய் இருக்கிறாய்..."

"இல்லவே இல்லை உங்களுக்கு உண்மையைக் கூறுகிறேன். அப்பா தமது கஷ்டகாலத்தில் என்னைப் பிடித்து இந்தப் பாழும் கிணற்றில் தள்ளினார். சுருக்கமாகச் சொன்னால் என்னுடைய தாயின் மேல் இருந்த ஆசையினால் ஜமீந்தார், மகனுக்கு என்னை மணமுடித்துக்கொண்டார்"

"சிவசிவா...இது என்ன வேடிக்கை...!"

"வேடிக்கை இல்லை ஸ்வாமிகளே, உண்மைதான். கேளுங்கள். எனக்கு உண்மையில் இந்த இளைய ஜமீந்தார் மதுபாலனைவிட இரண்டு மூன்று வயது அதிகமாகக்கூட இருக்கும்.....இந்த லட்சணத்தில் அவருக்கு என்னிடத்திலே துளிக்கூட ஆசை இல்லை, ஏதோ நாங்கள் இருவரும் ஒப்புக்குத்தான் கணவன் மனைவிகளாய் இருக்கிறோம். எங்களுடைய வாழ்க்கை எப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கக்கூட முடியாது. இந்த சங்கடம் எப்படியாவது ஒழிந்துபோனால் போதும் என்பதுதான் என் ஆசை..."

"இந்திராணீ.....உண்மையில் இவை எல்லாம் எனக்குத் தெரியவே தெரியாது..."

"துறவிக்கு ஆண் பெண் உறவுகளின் இரகசியம் எப்படித்தான் தெரியப்போகிறது.....?" இந்திராணி சிரித்தாள். சிவப்பழத்தின் முகத்திலும் புன்னகை அரும்பியது. "தெரிந்துக்கொள்ள ஆசைதான். ஆனால்..." என்று இளித்தார்.

இந்திராணி கைகொட்டிச் சிரித்தாள். "அப்படிச் சொல்லுங்கள் ஸ்வாமிகளே அப்படிச்சொல்லுங்கள்... கமலா அடியாருக்கு பாலும் பழமும் கொண்டுவா...

அடியார் நம்மைப்போல் சக்கைகளைத் தின்னமாட்டார் சத்துள்ள உணவைத்தான் அருந்துவார்...'' என்று கேலி செய்தாள் அடியாரின் முகத்தில் அசடு வழிந்தது. இருப்புக்கொள்ளாமல் இருந்தார் ஒரு சுகாசனத்தின்மேல். மதுபாலன் இந்திராணி இருவருக்கும் சரியான உறவுகிடையாது என்பது சிவப்பழத்திற்குத் தெரியும். அதனாலேயே அவர் மற்ற பெரிய இடத்துப் பெண்களின் மேல் வைத்திருப்பதைப்போல் அவள் மேலும் ஒருகண் போட்டுவைத்திருந்தார். ஆனால் இந்தக் கைக்கு எட்டாத கனி இவ்வளவு சீக்கிரத்தில் தானாகக் கனிந்து தரைமேலும் விழாமல் மடிமேலேயே விழும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை...

அடியார் எப்படி உருகுகிறார் என்பதை நோட்டம் பார்த்தாள் இந்திராணி. புலன்களை அடக்கி உடலை வாட்டிவந்ததால் காய்ப்பேறிப்போயிருந்த அவருடைய கனத்த சரீரத்தை அவள் பார்த்தாள். இந்த மனிதன் உடல் ஆசையில் இப்படி ஆய்விடுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் சிரித்தாள். அவரும் சிரித்தார். அவர்களுடைய சல்லாபப் பேச்சுக்கிடையே சனியன்போல் வந்து விழுந்தான் மதுபாலன்.

அவன் வருகையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. செடிகளுக்கிடையே இருந்து புதிய ஆள் ஒருவன் வருவதைக்கண்டதும் யாரோ வேலைக்காரன் என்று நினைத்தார்கள். அருகில் வந்தும் கூட அவனை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ''ஏது...? அடியார் இவ்விடத்தில்...?'' என்ற கேள்விக் குரலைக்கேட்டதும் அடியாருக்குத் தூக்கி வாரிப்போட்டது. பேச வாயே வரவில்லை. ஆனால் இந்திராணி அயர்ந்துவிடவில்லை...'' யார் நீங்களா...? ஐயோ...எனக்குப் போன

உயிர் திரும்பிவந்தது. இரண்டு நாட்களாய் நான் உயிருடன் இருக்கவே இல்லை...! நடமாடும் பிணமாக இருந்தேன்...'' என்று அவள் பாட்டிற்கு அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டாள். அவள் எவ்வளவு சாமர்த்திய மாக நடிக்கிறாள் என்பதைக் கவனித்தார் சிவப்பழம். அவளை அவளைக் கவனிக்கவே இல்லை. ''என்ன அடி யார் பேசவேமாட்டேன் என்கிறாய்...'' என்றான்.

''அப்பா...உன்னைப்பார்த்த அதிசயத்தில் எனக்கு நாவே எழவில்லை அப்பா. இந்திராணிக்குச் சற்று ஆறுதல் கூறலாம் என்று வந்தேன். சென்ற இட மெல்லாம் சொந்த இடம்தானே எனக்கு...?'' என்று பரமார்த்திகக்குரலில் பேச ஆரம்பித்தார்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்...! அப்படித் தானே...?'' என்றான் மதுபாலன்.

அவன் குரலில் ஏளனம் கலந்திருப்பதை சிவப் பழம் கவனித்தார். பாலும் பழமும் கொண்டுவந்த பணிப்பெண் வீட்டு எஜமானனைக்கண்டு திகைத்து நின்றாள்.

இந்திராணி பரபரப்புடன் சென்று அவள் கையி லிருந்த தட்டை வாங்கிக்கொண்டு, ''போடி...ஓடிப் போய் ராஜாவுக்கு உணவுகொண்டு வா.....ஐயோ இரண்டே நாட்களில் என் துரை எப்படி இளைத்துப் போய்விட்டார். சிறிது நேரம் என் கண் பார்வை இல்லாவிட்டால் இவருக்கு இப்படித்தான் எப்படி இருக்கிறார் என்று பாருங்களேன்...'' என்று அடி யாரைத் துணைக்கு அழைத்தாள்.

''இதிலென்ன அதிசயம் இந்திரா...மாதாவுக்குப் பின்னல் மனைவியே அல்லவா...?'' என்று உருகினார்

அடிகள் மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடிய வில்லை. "இந்திராணீ...உன் கணவன் உனக்கு வந்து விட்டார். அன்புக் குஞ்சுகள் ஆனந்த வெள்ளத்தில் நீந்திக்கிடக்கட்டும். நான் வருகிறேன்....." என்று கூறிக்கொண்டு மெல்ல நழுவப்பார்த்தார்.

"எங்கே ஸ்வாமிகளே ஓடுகிறீர்...? இன்றிரவு இங்கேயே சாப்பிட்டுவிட்டு இங்கேயே தங்கலாம்..." என்று கூறினான் மதுபாலன்.

3. கடமை.....!

பொழுது விடிந்ததும் விடியாததுமாகப் படுக்கையில் கிடந்தவாறே இரண்டு குதிரைகளைத் தயார் செய்யும்படிக் கட்டளையிட்டான் மதுபாலன். அத்துடன் மெய்ப்பாதுகாப்பாளர்களை எச்சரிக்கும்படியும் கட்டளையிட்டான். "அதற்குள் எங்கே ஓடிவிடப் பார்க்கிறீர்கள்...என்னை விட்டுவிட்டு..." என்று கூறிக் கொண்டு அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் இந்திராணி. அவன் எதையோ நினைத்துக்கொண்டவன்போல் துள்ளி எழுந்தான். குளிக்கும் அறையை நோக்கி ஓடினான். முணுமுணுத்துக்கொண்டே பின்னால் எழுந்துவந்தாள் இந்திராணி. அப்பொழுதுதான் கண்களைக் கசக்கிக்கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தார் சிவப்பழம். இந்திராணியைப் பார்த்ததும் அவருக்கு குறும்பாக ஏதாவது சொல்லவேண்டும் என்ற குறுகுறுப்பு உண்டாயிற்று. ஓரக்கண்களால் பார்த்தவாறு, 'ராத்திரி நல்ல இரவாக இருந்ததென்று நினைக்கிறேன்...' என்றார்.

"நல்ல இரவுதான்.....நல்ல இரவு.....! சனியன் வந்துதொலைக்காமல் இருந்தால் நல்ல இரவாக

இருந்திருக்கும்...'' என்று எரிந்து விழுந்துகொண்டே அவருக்குமாத்திரம் புன்னகையை அளித்தவளாய் நடந்துசென்றாள் இந்திராணி.

சிவப்பழம் சொக்கிவிட்டார். குளிப்பதைக்கூட மறந்து நின்ற இடத்திலேயே, நிலைமறந்து நின்று கொண்டிருந்தார். குளித்துவிட்டு வந்த மதுபாலன் அவர் தோளின்மேல் கையை வைத்து, '' நேரமாகிறது அடிகளே...ஒடிப்போய்ச் சீக்கிரம் குளித்துவிட்டு வாருங்கள்..'' என்றான். அடிகள் நடந்தார்.

* * * *

இருவரும் குளித்துச் சிற்றுண்டி அருந்தவும் குதிரைகள் தயராய் வந்து நிற்கவும் சரியாக இருந்தது '' சரி...புறப்படுங்கள் '' என்றான் மதுபாலன். '' எங்கே...'' என்று கேட்டார் அடிகள். பெரிதாகக் குரலெடுத்து கூப்பாடு போட்டுக்கொண்டு வந்தாள் இந்திராணி. '' நீங்களே சொல்லுங்கள் ஸ்வாமி. இப்போதுதான் எங்கேயோ சாவின் தலைவாசல் ஏறி மீண்டும் வந்தார். அதற்குள் மீண்டும் என்னைப் பரதவிக்கவிட்டுப் போகிறேன் என்று நிற்கிறாரே. இது இவருக்கு நியாயமா. இவரை மணந்துகொண்டு இப்படித்தினம் தினம் சாகாமல் செத்துக்கொண்டிருக்க யாரால் முடியும்..? '' என்றாள்.

'' நீயாவது என்னை மணந்துகொண்டு சாகாமல் செத்துக்கொண்டிருக்கிறாய். உன்னை மணந்துகொண்டதில் நான் செத்த வாழ்க்கையையே நடத்துகிறேனே ...அதற்கு என்ன சொல்லுவாய்.....? '' என்றான் மதுபாலன்.

இந்திராணிக்குக் கண்களில் நீர்வந்துவிட்டது... "பாருங்கள் ஸ்வாமி...பாருங்கள்...ஒரு மனைவியிடம் கணவன் பேசும் வார்த்தைகளைப் பாருங்கள்..." என்று கூறிக்கொண்டு கண்களைக் கசக்கினாள்.

மதுபாலனுக்குச் சிரிப்புவந்துவிட்டது "இந்திராணி...யாரிடம் பாசாங்கு செய்கிறாய்...? உன்னைத் தெரியாதா எனக்கு...சரிசரி தெரியாதவன்போலவே நடிக்கிறேன். அதுதான் நல்லது..." என்றான்.

"என்ன தெரிந்துவிட்டது உங்களுக்கு..?" இந்திராணி கூச்சலிட்டாள்.

மதுபாலன் சிரித்துக்கொண்டே ..."இப்போது ஏன் கூச்சலிடுகிறாய் போ உனக்குப் பிடித்தமான தோழிகளுடன் பிடித்தமான கேலிகளைப் பேசிக்கொண்டிரு போ..." என்று கூறிவிட்டு குதிரையை நோக்கி நடந்தான் வேறுவழி இல்லாமல் சிவப்பழமும் பின்னால் நடக்கவேண்டியவரானார்.

அதிகாலை நேரத்திலே இருபக்கங்களிலும் மரங்கள் அடர்ந்த சாலையின் வழியாக அவர்கள் சென்றனர். நகர்ப்புறம் கடந்ததும் அழகிய பசியநாற்றுகள் நிறைந்த வயல்கள் பொன்னொளி ஏற்றுக்கிடந்தன. தலைக்கு மேல் மரங்களிலிருந்து கிளிகள் பிழற்றின. தூரத்திலே மலைகள் இளநீலச் சிற்பங்களாய் நின்றன. மதுபாலன் குதிரையை இழுத்துப்பிடித்து மெதுவாக நடத்தினான். இருவரும் குதிரைகள்மேல் கவனமற்றுத்தம்போக்கில் விட்டவாறு பேச ஆரம்பித்தனர்.

"அடிகளுக்கு வாழ்க்கையின் ரகசியம் நன்றாகத் தெரியும். இல்லையா..?"

"எனக்குத் தெரிந்தவரை வாழ்க்கை என்பதில் எந்த ரகசியமும் இல்லை..."

மதுபாலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்...?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். மனிதன் பசித்தால் சாப்பிடுகிறான். தாகம்வரும்போது குடிக்கிறான் மோகம் வந்தால் துணை தேடுகிறான். இவற்றில் எதிலும் வெற்றியும் தோல்வியும் அவன் மனத்தைப் பொறுத்தே இருக்கிறது.

"அப்படியானால் இதைப்போல் துறவு வேஷம் போடுவானேன்...?"

சிவப்பழம் அவனைத் திரும்பிப்பார்த்தார். சிரித்துக் கொண்டே, "இந்தக் காலி நேரம் என்னை உண்மை பேசத்தூண்டுகிறது. தவிர உன்னிடம் சொல்வதால் என்ன...? இந்த வேஷம் வாழ்க்கை சௌகரியமாய்க் கழிய உதவுகிறது என்பதால் தான்...

"புண்ணியம் பாவம் என்பதெல்லாம் பொய் தானா...?"

"இந்தக் கேள்விக்கு ஏற்கனவே விடை அளித்து விட்டேன். எல்லாம் மனதைப் பொறுத்ததுதான்..."

"பின் எந்த அடிப்படையில் சமுதாய நீதியை அமைத்திருக்கிறார்கள்..."

"பெரிய மனிதர்கள் தங்களுக்குச் சவுகரியமான வழியில் சமுதாய நீதியை அமைத்தார்கள். மதம் அதற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது அவ்வளவுதான்"

"மதம் என்பதுதான் என்ன...?"

"ஒரு திரை.....!"

"அப்படி என்றால்..."

"தயவுசெய்து விளக்கம் கேட்கவேண்டாம்."

"சரிசரி...எதையோ கேட்க வந்தேன். எதையோ கேட்டுவிட்டேன். அடிகளே உண்மையாகச் சொல்லுங்கள். இன்பம் என்பதுதான் எதில் இருக்கிறது?"

"அது உனக்குத் தெரியும்..."

"எனக்கு அதில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது"

"சந்தேகம் வேண்டாம். ரசம் நிறைந்த ரோஜா இதழ்களில் பூர்த்தி பெற்று நிமிர்ந்து நிற்கும் அமுத கலசங்களில், மயல் நிறைந்த கண்களில்...மென்மையான ஒரு எழில் மடந்தைதான் ஆடவனுக்கு இன்பத்தின் பொருளாய் இருக்கிறாள்..."

"அப்படியானால்..."

"மதுபாலா...வீண் சந்தேகப்படாதே. இந்திராணி ஒரு இன்பக் களஞ்சியம்....."

"ஆனால்....."

"உன்னால் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை..."

"என்னால் அவளைக் காதலிக்கவே முடியவில்லை..."

"மனதைச் சரிப்படுத்திக்கொள் சரியாகிவிடும்..."

மதுபாலன் சிந்தனையில் ஆழ்ந்தான். பேசவில்லை. சிவப்பழம் கேட்டார். "ஆமாம் இப்போது எங்கே இந்தத் திடீர்ப் பிரயாணம்...?"

"ஒரு கடமையை நிறைவேற்ற..."

"என்ன கடமை...?"

"சொல்கிறேன்...

4. இரகசியம்...!

சூரியன் உச்சியை நெருங்கிக்கொண்டிருந்த சமயம் அவர்கள் ககனபுரியை அடைந்தனர். வெகு தூரத்திற் கப்பாலிருந்தே, அங்கே எரிந்து கிலமாகி நின்ற கருங் கரரின் மாளிகை தெரிந்தது. மாளிகையில் மூன்றாவது அடுக்கு மாடி பூராவும் விழுந்துவிட்டது. இரண்டாம் அடுக்குள் சில பகுதிகள் அப்படியே நின்றன. பளிங்குச் சுவர்கள் புகைமண்டி, ஒரு கரிய ராட்சசன் நிற்பது போன்ற தோற்றத்தை அது அளித்தது. அந்த மாளிகை கண்ணுக்குத் தெரிந்ததுமே மதுபாலன் உணர்ச்சி வசப்பட்டுவிட்டான். குதிரையை நிறுத்தி ஒருகணம் கண் கொட்டாமல் அதைப்பார்த்தான். சிவப் பழமும் குதிரையை நிறுத்தினர். பிறகு மெதுவாக அவர்கள் குதிரையை நடத்தினர். சிவப்பழத்திற்கு அந்த கதை பூராவும் தெரியும். ஆனால் அவர் பேச வில்லை. மதுபாலன் கேட்டான், "எரிந்து கிலமாகிக் கிடக்கும் அந்த மாளிகையைப் பார்க்கும்போது அடி யாருக்கு என்ன தோன்றுகிறது..?"

கர்வம் நிறைந்த குரலில் அடியார் கூறினார், "இதைப்போன்ற அவலங்கள் சன்யாசி வாழ்க்கையில் கிடையாது என்று...", என்று.

மதுபாலன் வெறுப்புடன் அவரைநோக்கித் திரும்பி னான். "ஊரை ஏமாற்றித் திரியும் உங்கள் சன்யாசி வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரியும். ஐயன்மீர்... பிரபுக்கள் அனுபவிக்கும் போகபோக்கியங்களும் எல்லா சுகங்களும் உங்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவர் களுக்குச் சில சமயங்களில் வரும் தாழ்வுமாத்திரம் உங் களுக்கு எப்போதுமே கிடையாது கிடக்கட்டும். அதை

நான் கேட்கவில்லை, இந்த அழிவுச் சின்னங்கள் எதனால் தோன்றுகின்றன என்று கேட்டேன்," என்றான்.

சிவப்பழம் அவன் கோபத்திற்கு அஞ்சினார். அவரைப் போன்றவர்கள் யாருடைய கோபத்திற்கும் ஆளாகமாட்டார்கள். அதனால் இதமான குரலில் கூறினார், " மதுபாலா...ஆக்கமும் அழிவும் இயற்கையின் நியதிகள்..."

" இது இயற்கையால் நேரவில்லையே...? "

" எதுவுமே இயற்கையை மீறி நடப்பதில்லை..."

" அப்படியானால் தங்கள் சித்தாந்தத்தின் அர்த்தம் என்ன? அழுபவன் அழுதுகொண்டே இருக்கட்டும். அடிப்பவன் அடித்துக்கொண்டே இருக்கட்டும் என்பதுதானே...? "

" சமுதாயம் அப்படித்தான் இருக்கிறது."

மதுபாலனுக்குச் சிரிப்பு வந்தது. அதை நான் கேட்கவில்லை. துறவிகளிலே நீங்கள் கொஞ்சம் விசித்திரமானவர். சில சமயங்களில் உண்மையும் பேசிவிடுகிறீர்கள் என்பதனால் கேட்கிறேன்.

சிவப்பழம் இடைமறித்தார். " அப்படியானால் துறவிகள் எல்லாம் பொய்யர்களா...? "

" இல்லாத கடவுளைக் கண்டதாய்ப் பொய்கூறுவது-அவரைப் பற்றிக் கதைகள் திரிப்பது-உணர்ச்சிகளை வெல்வதாய்ப் பாசாங்கு செய்வது, இவை எல்லாம் வேறென்னவாம்? உங்களுடைய அபிப்பிராயங்களும் இவைதானே...? "

சிவப்பழம் பேசவில்லை.

அழிந்து கிடந்த அந்த மாளிகையை அவர்கள் நெருங்கிவிட்டனர். காவலர்கள் அவர்களை வணங்கி வழிவிட்டனர். குதிரையை மெல்ல நடத்தியபடியே அதன் இடையிலே புகுந்து சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான் மதுபாலன். பாதி எரிந்து அவிந்த மரக் கட்டைகள் கரும் மலைப் பாம்புகள்போல் கிடந்தன. சுவர்கள் பல இடங்களில் பாதி இடிந்தும், உத்திரங்கள் பெயர்ந்தும் அலங்கோலமாகக் கிடந்தன. இன்னும் சில இடங்களில் அனல் வாடை வீசிக்கொண்டிருந்தது. காற்றிலே சாம்பல் பறந்தது. ஒரு இடத்திலே இங்கும் அங்குமாக எலும்புக் குவியல்கள் கிடந்தன. ஆடு, மாடு, குதிரைகளினுடையதைப்போல் மனிதர்களுடைய எலும்புக்கூடுகளும் காணப்பட்டன. "இந்த எலும்புக் கூடுகளிலே கருணாகரருடையது இது, வேலைக்காரர்களுடையது இது என்று யாராவது கண்டுபிடிக்க முடியுமா...? சாவு மனிதனைச் சரி சமமாக்கிவிடுகிறது..." என்றான் மதுபாலன். சிவப்பழம் பேசவில்லை.

அவர்கள் மாளிகையைவிட்டு வெளியே வந்தனர். நகரின் முதல் வீதிக்குள் புகுந்ததுமே கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச்செய்தது. அங்கே மரங்களில் வரிசையாக ஆண்களையும் பெண்களையும் கட்டி வைத்திருந்தனர். அவர்களுடைய உடல்களில் அடிபட்ட காயங்களிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இன்னும் வீரர்கள் அவர்களில் சிலரைச் சாட்டையால் அடித்துக்கொண்டிருந்தனர். "நிறுத்துங்கள்" என்று கூச்சலிட்டான் மதுபாலன். வீரர்கள் திடுக்கிட்டு நின்றனர். சாட்டையைச் சுழற்றியவாறு, "ஏன்

இவர்களை அடித்தீர்கள்...'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

''ஜமீந்தாரின் உத்திரவு எஜமான்...''

''மடையர்களா அடி என்ருல் இப்படித்தான் அடிப்பதா...? நீங்கள் என்ன மனிதர்களா அல்லது...''

''எத்தனை அடித்தாலும் அவர்கள் சொல்ல மாட்டேன் என்கிறார்கள் எஜமான்...''

''என்னத்தைச் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்...?''

''அந்தத்திருடர் கூட்டம் எங்கே இருக்கிறதென்பதை...''

''ஓ.....!'' மதுபாலன் ஒருகணம் யோசித்துக் கொண்டு நின்ருன். பிறகு ''அவர்களை அவிழ்த்து விடுங்கள்...''

வீரர்கள் தயங்கினர், ''எஜமான் உத்திரவு எஜமான்...''

''நான் உத்திரவிடுகிறேன். அவர்களை அவிழ்த்து விடுங்கள்...''

''யார் உத்திரவிடுவது அங்கே.....!'' என்று கேட்டுக்கொண்டே ஜமீந்தாரும் வீரர்கள் பலரும் குதிரைகளின் மேல் அங்கே வந்தனர், மதுபாலன் நிமிர்ந்து பார்த்தான். ''யார் மதுபாலனு அது...? எப்போது வந்தாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஜமீந்தார்.

''நேற்றிரவு வந்தேன்...'' என்ருன் மதுபாலன் முகத்தைத் திருப்பிக்கொண்டு.

''பின் ஏன் என்னிடம் வரவில்லை. இந்திராணியிடம் ஓடிவிட்டாயாக்கும். பயல்களுக்குக் கல்யாணம்

ஆகிவிட்டாலே பிறகு அவர்கள் பெற்றோர்களை மதிப்பதில்லை...என்ன ஸ்வாமிகளே...'' என்று சிவப்பழத்தை நோக்கிச் சிரித்துக்கொண்டு கேட்டார். சிவப்பழமும் ஹிஹிஹீ...என்று பல்லை இளித்து வைத்தார்.

''ஏன் நிற்கிறீர்கள்...? உதையுங்கள்! இன்னும் நன்றாக உதையுங்கள்! அந்தத் திருட்டுக் கூட்டம் எங்கே இருக்கிறதென்பதைக் கூறும்வரை உதையுங்கள்...'' என்று வீரர்களை நோக்கிக் கட்டளையிட்டார் ஜமீந்தார்.

''வேண்டாம். அந்தக் கூட்டம் எங்கே இருக்கிறதென்பது எனக்குத் தெரியும், அவர்களை நான் பார்த்துக்கொள்கிறேன். இவர்கள் பாவம் ஒன்றும் தெரியாதவர்கள். விட்டுவிடுங்கள்...'' என்று கூவினான் மதுபாலன்.

''உனக்குத் தெரியுமா.....அப்படியானால் சரி... விட்டுவிடுங்கள்.....'' என்று கட்டளையிட்டார் ஜமீந்தாரும். ''நாங்கள் ஊர் திரும்புகிறோம். என்னோடு வருகிறாயா...'' என்று கேட்டார். ''இல்லை நாங்கள் சிறிது தாமதித்து வருகிறோம்'' என்றான் மதுபாலன்.

ஜமீந்தார் தன் பரிவாரங்களுடன் கிளம்பிவிட்டார். மதுபாலனும் சிவப்பழமும் வேறு வழியில் திரும்பினர்.

மதுபாலன் மெல்லிய குரலில் கேட்டான் ''ஸ்வாமிகளே...வலியாரின் கரங்களில் பட்டு பாவம், இந்த ஏழை மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் பார்த்தீர்களா...?''

''என்ன செய்வது? அவர்கள் துன்பப்பட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது...'' சிவப்பழம் இரக்க

மற்ற குரலில் கூறினர். மதுபாலன் அவரைத் திரும் பிப்பார்த்தான். "கருணைமூர்த்திகள் என்று கூறப் படும் மதவாதிகள் பாடுபடும் ஏழை மக்களிடம் ஏன் இவ்வளவு கல்நெஞ்சர்களாக இருக்கிறார்கள்.....?" என்று வெறுப்புடன் கேட்டான்.

சிவப்பழம் நிதானமான குரலில் பதில் கூறினர். "மதுபாலா...அதில்தான் உன்னுடைய வர்க்கத்தின ரான செல்வர்களும் என்னுடைய வர்க்கத்தினரான மத குருக்களும் அடைந்திருக்கும் இன்ப வாழ்வின் இரகசியம் இருக்கிறது...!" என்று.

5. காதல்...!

தன் அறைக் கதவு திறக்கப்படுவதைக் கண்டு கண்ணம்மா தலை நிமிர்ந்தாள். எப்போது பார்த் தாலும் யோசித்துக்கொண்டே இருப்பது அவளுடைய பழக்கமாகிவிட்டது. சர்வாதிகாரி மெதுவாக உள்ளே வந்தான். "என்ன ஆழ்ந்த யோசனை மகாராணீ..."

அவள் தடுமாறினாள். "இந்தத் தனிமை என்னைக் கொல்கிறது. சாதாரணத் தோழியாக இருந்தால் கூட அந்தப் பெண்களுடன் கலந்துகொண்டு பேசவும் சிரிக்கவும் பாடவும் ஆடவும் இருக்கலாம். இந்த மகா ராணிப் பட்டம் என்னை அடிமைப்படுத்திச் சிறையில் தள்ளி வைத்திருக்கிறது..."

"உண்மைதான்...ஆனால் நீ அந்தப் பெண்களு டன் கலந்துகொள்ளக் கூடாதென்பதில்லை. அரச குமாரிகள் தோழிகளுடன் பொழுது போக்குவ தில்லையா...? ஆனால்... ஏன் அவர்களை ஆடவும் பாட வும் சொல்லி அனுபவித்துக்கொண்டிருக்கலாமே...?"

"நான் கிழவி அல்லவே....."

சர்வாதிகாரியின் முகம் சுருங்கியது. அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். பருவத்தின் எழில் குலுங்கத் தளிர்த்துத் துளிர்த்துத் தழுவப்படாத கொடிபோல் நின்ற அவளுடைய நிலை அவனுடைய மனதைச் சபலம்கொள்ளச்செய்தது. பளிங்கில் இழைத்து பவள வண்ணம் பூசியவற்றைப் போன்ற கன்னங்கள், ரசம் நிரம்பிய இன்பச் சுளைகள் போன்ற இதழ்கள், இளநீல மருக்கள் போன்ற கண்கள் அவனை வெறிகொள்ளச் செய்தன. அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். "கண்ணம்மா...ஆயுட் காலம் முழுவதும் கன்னியாய்க் காலம் கழிப்பதில் உள்ள பெருமை உனக்குத் தெரிந்திராது...ஆனால்.....அமர வாழ்க்கை என்று சொல்கிறார்களே அது அதுதான்..." என்றான். அவள் பேசவில்லை. தன் நகங்களின் ரோஜா நிறத்தைப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

சிறிது நேரம் மௌனமாக நின்றபின் சர்வாதிகாரி விஷயத்தைத் திருப்பினான், "கண்ணம்மா அந்த மடையன் தப்பிச் சென்றுவிட்டதில் நமக்குப் பெரிய தீங்கு நேர்ந்திருக்கிறது. ஜமீந்தார் உன்னுடைய தந்தையை உயிருடன் எரித்ததுடன் விட்டுவிடவில்லை அவருடைய குடிகளை மரங்களிலே கட்டிவைத்து உன் இருப்பிடத்தைச் சொல்லும்படி கேட்டிருக்கிறான். பாவம் அவர்கள் அறியாமையால் கூற முடியவில்லை. முதுகுத்தோல் உரிய சையப்புடைக்கும்படிக் கட்டளையிட்டிருக்கிறான் ஜமீந்தார். அப்போது இவன் அங்கே சென்று நீ தங்கியிருக்கும் இடம் தனக்குத் தெரியும் என்று கூறி அவர்களை விடுதலை செய்தானும்.

"சாதாரணமாக இந்தக் கானகத்திற்குள் நுழைபவர் யாரும் உயிருடன் தப்பிச்செல்வது கிடையாது. இவன் தப்பிச்சென்றுவிட்டான். அதுவும் ஒரே நாளில்...இது ரொம்ப அதிசயமாய் இருக்கிறது. நாம் நம் முடைய படைகளை வெகு சீக்கிரத்தில் தயார்படுத்த வேண்டும். எதிர்பார்த்ததைவிட குறுகிய காலத்தில் நாம் ஜமீந்தாரைத் தாக்கவேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். அதற்காக நாம் சிறிது சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும்...இன்னும் எவ்வளவோ வேலைகள் செய்யவேண்டும்...எனக்குச் சிறிது கூட ஓய்வே இல்லை. இடையில் நீ இப்படித் தனிமையில் அவதிப்பட்டுக்கொண்டிருப்பாயோ என்றுதான் உன்னைப் பார்க்கவந்தேன்..." என்றான்.

"அப்படிக் கூறியது அவன்தான் என்று எப்படித் தெரியும்..." அவள் ஆர்வத்துடன் கேட்டாள். அவன் தப்பிச்சென்று சேர்ந்துவிட்டானா என்பதை அறிய வேண்டும் என்பதில்தான் அவள் ஆர்வம் நின்றது.

"ஆமாம்...அதைப்பற்றி நீ சந்தேகமேபடவேண்டாம்...அவன்தான். அவனேதான். ஆனால்...நமது ஆட்கள் எச்சரிக்கப்பட்டுவிட்டனர். இனி அவன் உயிருடன் நடமாட முடியாது."

அவள் திடுக்கிட்டாள். "என்ன...?"

"ஆம்...அதில் சந்தேகமே வேண்டாம். அவன் பள்ளி அறை முதல், நடமாடும் ஒவ்வொரு இடத்திலும் நமது ஆட்கள் தயாராக இருப்பர். அவனை முதலில் காணும் எவனும், நீ விதித்த மரண தண்டனையை நிறைவேற்றி விடுவான்..."

"அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவன் எதிரில் தன் உணர்ச்சிகள் வெளிப்பட்டு விடக்கூடாதே என்பதற்காக மென்று விழுங்கிக் கொண்டு நின்றாள். என்ன முயன்றும் அவள் கண்களிலே கண்ணீர் தேங்கிவிட்டன....." சர்வாதிகாரி அவள் முகத்தைப் பார்த்துவிட்டான், "ஏன்...?" என்று கேட்டான். அவள் நிதானமாகப் பதில் கூறினாள். "நாதியற்று வந்த என் கட்டளையை நிறைவேற்ற இத்தனை ஆட்களா...? நான் உங்களுக்கு என்ன கைமாறுதான் செய்யப்போகிறேன்...?"

சர்வாதிகாரி முகத்தைத் திருப்பிக்கொண்டு நிதானமான குரலில் கூறினான். "ஆம் கண்ணம்மா நீ எனக்கு கைமாறு செய்துதான் ஆகவேண்டும். செய்தே தான் ஆகவேண்டும்...என் வைராக்கியம் குலைந்து விட்டது. நீ நன்றி உடையவளாக இருப்பாய் என்று நினைக்கிறேன்..."

அவன் எழுந்தான். "ஆனால் அதற்கு இன்னும் சமயம் வரவில்லை. இன்னும் சமயம் வரவில்லை..... என்று நீ மகாராணி ஆகிறாயோ...அன்றுதான் அன்றுதான்..." என்று கூறிக்கொண்டே வெளியே போய் விட்டான்.

சர்வாதிகாரியின் இந்தப்புதிய தடுமாற்றத்திற்குக் காரணம் அவளுக்கு விளங்கவில்லை. அவள் அதைக் கவனிக்கவும் இல்லை. சர்வாதிகாரியின் ஒற்றர்களிடமிருந்து ,அவர் தப்புவாரா...அவர் தப்புவாரா' என்ற கேள்விதான் அவள் உள்ளத்தில் அலைமோதியது. அவள்எழுந்துசென்று சாளரத்தைப்பிடித்துக்கொண்டு நின்றாள். மலைமேல் கட்டப்பட்ட அந்தக் கோட்டை

யிலிருந்து நீல வானத்தைப் பார்த்ததும் ஓ என்று கதறி அழுகவேண்டும் என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது. அவள் கண்களிலே கண்ணீர் தேங்கியது...

கதவு தாழிடப்படும் ஒலிகேட்டு அவள் திரும்பினாள் அவள் அறையிலே கன்னங்கரேலென்று குட்டம் பிடித்த விகாரமான ஒரு மனிதன் நின்றுகொண்டிருந்தான். அவள் பயத்தால் கூச்சலிட்டிருப்பாள். "உஸ்ஸ்..." என்று வாய்மேல் விரல் வைத்து ஜாடை காட்டினான் அந்த மனிதன். "கண்ணம்மா...என்னை அவனால் கொன்றுவிட முடியாது." ஆனால்...

"ஆ...நீங்களா...?"

"கண்ணம்மா...உன்னை நீ அவனிடமிருந்து காத்துக்கொள்ளவேண்டும்..."

"ஏன்...?"

"அவன் உன்னைக் காதலிக்கிறான்..."

6. முடிவற்ற வேதனை...!

சிறிது நேரம் இருவரும் மௌனமாக நின்று கொண்டிருந்தனர். அவள் அவனை மீண்டும் ஒருமுறை பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவனுடைய அழகிய உடல் அவ்வளவு அலங்கோலமாக்கப்பட்டிருந்தது. "இன்னும் சற்று நேரம் நீங்கள் இங்கே வந்திராவிட்டால் சர்வாதிகாரியின் ஆட்கள் உங்களைக் கொன்றுவிட்டதாகவே நினைத்திருப்பேன்..." என்றாள்

"ஆனால் சாவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை..."

"ஏன்...?"

"எனக்காக உண்மையாக ஒரு துளிக் கண்ணீர் விட ஒரு ஆள் இருக்கிறது என்ற நிம்மதியுடன் சாவேன்..."

"யார் அந்த ஆள்..."

அவன் அவளையே பார்த்தப்படி கூறினான் "தேவீ...நீங்கள் தான்..."

அவள் பேசவில்லை.

சிறிது நேரத்திற்கு பிறகு அவள் கூறினாள், "யாராவது அழுவார்கள் என்பதனால் சாகத்தயாராகிறவர்கள் உண்டா...?"

"சாவதால் தான் ஒருவருடைய அன்பைப்பெற முடியும் என்றால்..."

அவள் மடக்கிக் கேட்டாள், "செத்தபின் ஒருவருடைய அன்பைப்பெற்று என்ன பயன்...?"

"தேவீ அப்படியானால் உயிருடன் இருக்கும் போதே உங்களுடைய அன்பு எனக்குக் கிடைக்குமா...?"

அவள் பேசவில்லை.

அவனும் பேசவில்லை. அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் கேட்டாள், "ஆமாம் மறுபடியும் ஏன் இந்த கொலைக்களத்திற்கு வந்தீர்கள்...?"

'நான் இங்கே வந்திருக்கிறேன். போய்விடுவேன் ...ஆனால் நீங்கள் எப்போதுமே இங்கிருக்கிறீர்களே...'

"என்னைக் கொல்ல இங்கே யாரும் இல்லை..."

அவனுக்கும் ஏதாவது சொல்லவேண்டும் என்று தோன்றிற்று. ஆனால் ஒருகணம் ஆர்வத்துடன் அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு, "தேவீ.....எந்தக் கொடிய அபாயத்தையும் எதிர்த்துப் போரிட்டு விடுவேன்...உங்களை ஒருமுறை பார்க்க முடியும் என்றால்..." என்றான்.

மறுபடியும் அறையிலே மௌனம் நிலவியது. சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் கூறினாள், "உங்கள் உயிர் ஒவ்வொரு கணமும் ஆபத்தில் இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்...சர்வாதிகாரியின் ஒற்றர்கள் எங்கும் நிறைந்திருக்கிறார்கள், அவர்கள் சுவிரக்க மற்றவர்கள். ஒரு சுயை அடித்துக் கொல்வது போல் அவர்கள் ஒரு உயிரை வதைத்துவிடுவார்கள்... இதிலிருந்து எப்படித் தப்பப்போகிறீர்களோ என்பதை நினைத்தால் என் உள்ளமே நடுங்குகிறது..."

அவன் இடைமறித்துக் கேட்டான், "ஆமாம் சர்வாதிகாரியின் ஆட்களைப்பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"ஏன்...? இங்கே நடைபெறுபவைகளைப் பார்த்தாலே தெரியாதா...? இங்கே எப்போது என்ன நடைபெறும் என்பதை யாராலுமே கண்டுபிடிக்க முடியாது. எந்தச்சமயத்தில் என்னவேண்டுமானாலும் நிகழலாம். அதனால் சொல்கிறேன்..."

"சர்வாதிகாரி கொடியவன் தான் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொண்டீர்களா...?"

"இல்லை. அதைப்பற்றி என்னால் ஒன்றும் சொல்லமுடியாது..."

அவன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு, "தேவீ ...நான் விடைபெற்றுக்கொள்கிறேன். சர்வாதிகாரி யார்...எப்பேர்ப்பட்டவன் என்பதை நிரூபியாததன் மூன் நான் மீண்டும் இங்கே வந்தது என்மேல் தவறு. தாங்கள் என்னிடம் கொண்ட கருணையை நான் தவறாக உபயோகப்படுத்துகிறேன், மன்னிக்கவும், நான் மீண்டும் வருகிறேன்" என்று கூறி நடந்தான்,

கட்டிலின் கீழே சுறங்க வழியைத் திறந்து அவன் இறங்கி மறைவதை அவள் பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் உள்ளத்திலே எரிந்துகொண்டிருந்த துவேஷத்தீ அணைந்துவிட்டது. அந்த இடத்திலே அன்புக் கொடி படர ஆரம்பித்திருந்தது. அவனை அறியாமலே அவள் தன் உள்ளதைப் பறிகொடுக்க ஆரம்பித்திருந்தாள். அது அவளுக்குப் புரிந்திருந்தது அதைக்குறித்து அவள் வருத்தப்படவும் இல்லை. அவள் இதயத்தின் ஆழத்திலே 'முடிவற்ற வேதனை... அதோ ஆரம்பமாகிவிட்டது...' என்ற பழங்காலக் கவியின் வரி ஒன்று அரிக்கத் தொடங்கியது.

7. என்னைக் கைது செய்!

மதுபாலன் சாமர்த்தியமாகச் சபர்மதிக் கோட்டையைத் தாண்டி நடக்க ஆரம்பித்தான். அதிலே சாதாரணமாக எப்போதும் சர்வாதிகாரியின் ஆட்கள் காவல் இருந்தனர். ஆனால் அவர்கள் வழிப் போக்கர்களைபோலும் சாமியார்களைபோலும் தங்கினர். அவர்கள் வருகிறவர்கள் போகிறவர்களை உற்று உற்றுக் கவனிப்பதிலிருந்தும் மறைவாக ஆயுதங்களை வைத்திருப்பதிலிருந்துதான் சர்வாதிகாரியின் ஆட்கள்

என்பது அவனுக்குத் தெரிந்தது. அன்று அவன் அவளைக் காண்பதற்காகச் சர்வாதிகாரியின் குகைக் குள் செல்லும் பொருட்டு குஷ்டரோகிபோல் வேஷ மிட்டுக்கொண்டு வந்த பண்டாரம்போல் காணப்பட்ட ஒருவன் அவன் அருகே வந்து ஏதோ சைகைசெய் தான். முதலில் அதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் யோசித்துக்கொண்டு நிற்பதைக் கண்டதும் அந்தப் பண்டாரம் அப்பால் போய்விட் டான். அதிலிருந்து இந்தமாதிரிப் பலரகமான வேஷங் களில் தான் அங்கு காவலுக்கு அனுப்பப்படுகிறார் களென்றும் அவர்களைத் தவிர வேறு யாரும் அதிக மாக வருவது கிடையாது என்றும் அவன் தெரிந்து கொண்டான். இன்னும் ஒரு அதிசயம் என்னவென் றால் அந்த இரகசிய வழிக்குச் செல்லும் இருளடைந்த பாழும் அறைக்கு முன்னால் விசேஷமான காவல் ஏதும் இருக்கவில்லை. சாதாரணமாகவே அது இருளும் புகையும் மண்டி ஓட்டடை பிடித்து, வௌவால்களின் சுகவாசஸ்தலமாய், பாம்பும் தேளும் அடைந்தது போல் வெகு பயங்கரமாகக் காணப்பட்டது. அவ் வளவே தவிர மனிதர்கள் அதைப்பற்றிச் சிரத்தை காட்டவில்லை. அவன் நினைத்துக்கொண்டான் இங்கே காவலுக்காக வருகிறவர்களுக்கே தாங்கள் எதற்காக அனுப்பப்படுகிறார்கள் என்ற இரகசியம் தெரியாது. சர்வாதிகாரி அங்கே ஒரு இரகசிய வழி இருக்கிறது. என்பதை அவர்களிடம் சொல்லியிருக்கவேமாட்டான் வேறு ஏதாவது கற்பனையான காரணத்தின் கீழ் அங்கு காவல்காக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று.

அவன் திரும்பிவந்தபோது நள்ளிரவு அந்தக் காவலர்கள் கோட்டை வராந்தாவில் ஒரு கணப்பு மூட்டிக்கொண்டு அதிலே சுள்ளிகள் படபட வென்று வெடித்து எரிவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவன் அவர்களின் கவனத்தைக் கவராமலேயே சாவதானமாக, செடி களின் மறைவில பதுங்கிப் பதுங்கி நடந்து சென்றான். ரொம்பதூரம் சென்றதும் சாதாரணமாக ஒரு குஷ்ட ரோகி நடப்பதைப்போல் அல்லாமல் மிகமிக வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

பொழுது புலரும் சமயம் அவன் ஜமீன் எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தான் திடீரென்று ஆயுதபாணி களான வீரர்கள் அவன் முன்னால் தோன்றி ஈட்டி களால் வழியை மறித்துக்கொண்டு 'நில்' என்று கூச் சல்போட்டார்கள். அவன் நன்றாகப் பார்த்தான். அவர்கள் ஜமீன் ஆட்கள்தான். தனக்கு அபாயம் இல்லை என்பதை நிதானித்துக்கொண்டு சாவதானமாக 'ஏன்' என்று கேட்டான். "ஜமீன் எல்லையைக் கடந்து யாரும் உள்ளேயோ வெளியேயோ போகக்கூடாதென் பது உத்தரவு....."

அவன் மீண்டும் கேட்டான், "ஏன்?"

அவர்களில் ஒருவன் முறைத்துப்பார்த்தான். "போகக் கூடாதென்றால் உன் வேலையைப்பார்த்துக் கொண்டு போ..." என்று கத்தினான்.

"இல்லை ஐயா நான் அவசியம் போகவேண்டும். அங்கே எங்கய்யா சாகக்கெடக்கறாரு....." என்று கெஞ்சினான் குஷ்டரோகி,

"அட ஏனப்பா நீ ஒருத்தன் பிராணனை வாங்கறே உள்ளே போனாலும் நீ உங்க ஐயாவைப் பார்க்கமுடியாது. மேலதிகாரிகள் உன்னைக் கைது செய்து விசாரிப்பார்கள்..." என்று சலித்துக்கொள்பவனைப்போல் கூறினான் இன்னொருவன்.

மீண்டும் அவன் கேட்டான், "ஏன்?"

"அவன் கிட்ட என்னப்பா பேச்சு," என்று முறைத்தான் முதல்வன்.

"பேசினா என்ன நம்ம அப்பன் வீட்டுச்சொத்து போயிடுதோ...?" என்றான் மற்றவன். பிறகு சாவதானமாக அவனைப் பார்த்து "ராத்திரி யாரோ இளைய ஜமீந்தாரையும் ராணியையும் சேர்த்தி ரெண்டுபேர் நெஞ்சிலும் பாயறமாதிரி வாளைச்சொருகிட்டார்களாம் அப்பா.....தெரிஞ்சுதா விஷயம்...தெரிஞ்சுக்க....." என்றான்.

அவன் குழப்பம் அடைந்தான். "இளைய ஜமீந்தாரையும் ராணியையும் சேர்த்தி....." அவன் அங்கே கல்லுப் பிள்ளையார் மாதிரி நின்றுகொண்டிருந்தான்.

படபட வென்று குதிரைகள் பாய்ந்துவரும் சப்தம் கேட்டது. மேலும் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக அவன் பேசாமல் நின்றான். இரண்டு அதிகாரிகளும் வீரர்கள் சிலரும் அங்கே குதிரைகள் மேல் வந்து சேர்ந்தனர். அதிகாரிகளிடம் தனியாகப் பேசவேண்டும் என்று அவன் விரும்பினான். ஆனால் வீரர்களின் மத்தியிலிருந்து அவர்களை எப்படித்தனியாக அழைப்பது என்று தெரியவில்லை. பேசாமல் நின்றான். யாராவது சந்தேகப்படத்தக்கவர்கள் அந்த வழியில் வந்தார்களா என்று அதிகார தொனியில்

கேட்டுக்கொண்டிருந்தான் அதிகாரி. 'சட்' என்று அவனுக்கு ஒருயோசனை தோன்றியது. நழுவ விரும்பு பவன்போல் செடிகளுக் கிடையில் மறைந்து அவன் வெகு வேகமாக ஓட ஆரம்பித்தான். அவ்வளவுதான் ...வீரர்களும் அதிகாரிகளும் ஒரே பாய்ச்சலில் அவனைப் பின் தொடர்ந்தனர். பள்ளங்களிலும் மேடுகளிலும் அடர்ந்த புதர்களுக்கு மத்தியிலும் தாவித்தாவி ஓடிய பின் அவன் திரும்பிப்பார்த்தான். அவன் நினைத்தபடி நடந்தது. அதிகாரி ஒருவன் அவனை மிகவும் சமீபித் திருந்தான். அவன் உறுதியுடன் திரும்பி நின்று அந்த அதிகாரியை நோக்கி "நந்தலால் இறங்கு கீழே." என் றான். அவன் ஒருகணம் திகைத்தான், ஆனால் உணர்ந்து கொண்டான். குதிரையிலிருந்து கீழே குதித்து வணக் கம் செலுத்தினன்.

"அவர்களை அங்கேயே நிற்கும்படி உத்திரவிடு..."

நந்தலால் கத்தினன். கைகளை ஆட்டிச்சைகை கள் காட்டினன். அவர்கள் திகைப்புடன் சற்று தூரத் திலேயே நின்றனர்.

"இன்னொருவன் யார்...சாரங்கனா...?"

"ஆமாம் பிரபு..."

"அவரை மட்டும் இங்கே அழை..."

நந்தலால் உரக்கக் கூவி சாரங்கனை அழைத்தான். மிக அருகாமையிலிருந்த அவன் அங்கே வந்து சேர்ந் தான்.

"சரி...மற்றவர்களை திரும்பிப் போகும்படி கட் டளை இடு...எனக்கும் ஒரு குதிரைவேண்டும்..... பெற்றுக்கொள்..."

சாரங்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் நந்தலால் சொன்னபடி செய்யும்படி ஜாடை காட்டவே அவன் குதிரையைத் திருப்பிக்கொண்டுபோய் வீரன் ஒருவனிடமிருந்து ஒரு நல்ல குதிரையைப் பெற்றுக் கொண்டு அவர்களைத் திரும்பிப்போகும்படி கட்டளை யிட்டுவிட்டு வந்தான்.

மூவரும் குதிரைமேல் ஏறிக்கொண்டவுடன் மது பாலன் கேட்டான். "நந்தலால்...இன்னும் அரண் மனையில் நான்தான் கொல்லப்பட்டதாக நினைக்கிறார் களா.. ...?"

"இல்லை பிரபு! கொல்லப்பட்டவனின் அடையா ளம் கண்டுபிடிக்கப்பட்டாயிவிட்டது. ஆனால் கொன் றது நீங்களாகத்தான் இருக்கவேண்டும் என்று கருது கிறார்கள்..."

"கொல்லப்பட்டவன் யார்...?"

"சாமியார்...சிவப்பழம்..."

மதுபாலன் ஒருகணம் யோசித்தான். அப்படி நடந்திருந்தால் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிவப்பழம் ஒரு பெண் பித்தன். இந்திராணி வேட்டை யாடித்திரியும் பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவள். பிறகு மதுபாலன் கேட்டான், 'இதனால் இப்போது அரண் மனையில் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது...?"

"இந்த விஷயத்தை எப்படி மறைப்பது என்பது ஜமீந்தாருக்குப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஜமீன் குடும்பத்திற்கே அவமானம். அதிலும் சிவப் பழம் கொல்லப்பட்டிருப்பதால் அரசருக்கு என்ன பதில் சொல்வது என்பது அவருக்குப் பெரிய கவலை யாக இருக்கிறது..."

"நானே கொன்றதாக இருந்தால் இப்போது என்ன செய்யவேண்டியிருக்கும்...?"

நந்தலால் ஒருகணம் தயங்கிய பின், "உங்களைக் கண்காணிப்பில் வைத்துவிட்டு. அரசரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டி இருக்கும். ஏனென்றால் அரசரிடம் சிவப்பழத்திற்கு அவ்வளவு செல்வாக்கு இருக்கிறது." என்றான்.

"நந்தலால் நீ சந்தேகப்படவேண்டாம். ஆனால் அரண்மனையிலே இருந்திருந்தால் நான் கொல்லப்பட்டிருப்பேன். எனக்கு வைத்த குறிதான் தவறுதலாகச் சிவப்பழத்தின்மேல் பாய்ந்திருக்கிறது..."

"பிரபு...தங்கள் உயிரைக் குறிவைத்து மறைந்து திரியும் இந்தப்பேடிப் பயல்கள் யார் என்று கூறுங்கள். ஒரு நொடியில் நொறுக்கிவிடுவோம்..."

மதுபாலன் சிறிது மௌனத்திற்குப் பின் கூறினான் "நந்தலால் நீ நினைப்பதுபோல அவ்வளவு சுலபமான காரியம் அல்ல அது. சிவப்பழம் கொல்லப்பட்டதால் எப்படி நாம் அரசாங்க விரோதிகள் ஆனோமோ, அதேபோல் இந்த ஆளைக் கொல்வதாலும் நாம் அரசாங்க விரோதிகள் ஆகநேரலாம். நாம் இப்போது வேறுவிதமான தந்திரத்தை கையாளவேண்டி இருக்கிறது. முதலில் நீங்கள் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்போது என்னைப் பார்த்ததையோ; இனிமேல் நாம் செய்யப்போவதையோ பற்றிய எந்த விஷயத்தையும் யாருக்குமே தெரியப்படுத்தக் கூடாது. ஜமீந்தாருக்குக்கூட...நமது காரியம் வெற்றி பெறுகிற சமயத்திலே அது தானாகவே எல்லோருக்கும் தெரிந்துபோகும். அதற்கு முன்னால்

பிறருக்குத் தெரிவதால் நமக்குக் கெடுதலைத் தவிர நன்மை உண்டாகாது. தெரிகிறதா.....? இது முழுவதையுமே நீங்கள் ரகசியமாகக் காப்பாற்ற வேண்டும்.....''

அதிகாரிகள் அவனுடைய உத்தரவுப்படி நடப்பதாய்க் கூறினர்கள். '' நாம் இப்போது மிகவும் கடினமான வேலையில் ஈடுபடப்போகிறோம். சிங்கத்தின் குகைக்குள்ளே அதற்குச் சிறிதும் தெரியாவண்ணம் புகுந்து வெளிவருவதைப்போன்ற வேலை. சிறிது தவறினாலும் நாம் உயிரை இழப்போம். உங்களுக்கு இதில் தலையிடத் துணிவு இருக்கிறதா...? ''

அவனுக்காக அவர்கள் எதையும் செய்யத் தயாரென்றார்கள். அவன் அவர்களுக்குக் கட்டளையிட்டான் '' இப்போது நீங்கள் என்னைக்கைதுசெய்து கல்லாய்க் கோட்டைக்குக்கொண்டு செல்லவேண்டும். அதன் பிறகு மற்றவற்றை நான் கூறுவேன்,'' என்று.

8. கல்லாய்க் கோட்டையில்!

கல்லாய்க் கோட்டைக்குச் சாதாரணமாக அடிக்கடி ஜமீன் கைதிகள் கொண்டுவரப்படுவது வழக்கம். அதனால் அதைப்பற்றியாரும் அக்கறைக்காட்டவில்லை. கைதி நேராகக்கோட்டைத் தலைவன் கனக பூபதியிடம் கொண்டுபோகப்பட்டான். பூபதியின் விசாலமான அறைக்குள் நுழைந்ததும், நந்தலால் அவர் காதருகே சென்று ஏதோ ரகசியமாகக் கூறினன். உடனே பூபதி அங்கே இருந்த மற்ற காவலர்களையும் சிப்பந்திகளையும் வெளியே போகும்படி கட்டளையிட்டார். நந்தலாலும் சாரங்கனும் வாயில்கள் அருகே காவல் நின்றனர்.

மதுபாலன் பூபதியின் காதருகில் சென்று கூறினான். "மாமா.....நீங்கள் என்னை மறைத்துவிட வேண்டும், காரணங்கள் சாவகாசமாகக் கூறுகிறேன். இரண்டாவதாக, ஓவியர் உலகநாதன், ஒற்றர் தலைவன் பூபாலன், நடிக மன்றத்தைச் சேர்ந்த வேலப்பன். மருத்துவன் சாத்தான் இவர்களுடன் எதற்கும் அஞ்சாத உறுதியுள்ள இருபது வீரர்களும் தேவை. இவர்கள் இரண்டு நாட்களுக்குள் இங்கே வந்து சேர வேண்டும். இவர்களின் வருகை பூராவும் ரகசியமாக இருக்கவேண்டும் மூன்றுவதாக நான் இங்கே கொண்டுவரப்பட்டிருப்பது, இங்கிருந்து என்னுடைய நடமாட்டங்கள் இவற்றை யாரிடமும் எக்காரணத்தை கொண்டும் தெரிவிக்கக்கூடாது. தயவுசெய்து செய்வீர்களா...?"

"உனக்காக நான் என்னதான் செய்யமாட்டேன் மதூ...ஆனால் எதற்காக இந்த அவசர ஏற்பாடுகள்..?"

"பிறகு சொல்கிறேன் மாமா...எதிரியின் ஒற்றர்கள் எங்கும் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. இப்போது நீங்கள் என்னைக்கொண்டு போகும்படிக் கட்டளையிடலாம்..." என்றான்

கனக பூபதி அவனைப் பாதாளச் சிறைக்குக் கொண்டுபோகும்படிக் கட்டளையிட்டார். அதிகாரிகள் இருவரையும் விருந்தினர் மாளிகையில் தங்கும்படிக் கூறிவிட்டு யோசனையில் ஆழ்ந்தார். அவர் நல்ல அனுபவம் உடையவர். நிர்வாக காரியங்களிலும், சிக்கல்களை விடுவிப்பதிலும், ஒற்றர் சம்பந்தமான விவகாரங்களிலும் கைதேர்ந்தவர். தவிர அவருக்கு மதுபால

னிடம் அளவு கடந்த வாஞ்சை உண்டு. அவன் அவ
ருடைய தங்கையின் மகன்தான்

பிறகு அவர் மதுபாலன் கூறிய ஆட்களை எப்படி ஒன்று சேர்ப்பது என்பது பற்றி ஆலோசித்தார் ஒற்
றர் தலைவனுக்கு உடனே வந்து சேரும்படி கட்டளை பிறப்பித்தார். ஓவியனையும் மருத்துவனையும் அருகி
லுள்ள இயற்கை எழில் பிரதேசமான அருகூர் வந்து சேரும்படி உத்தரவு அனுப்பினார். நடிகனை வர
வழைப்பதற்காக உள்ளூர் நாட்டியக்காரியிடம் உற
வுக்கு வரும்படி அவனுக்கு அழைப்பு அனுப்பக்கூறி
னார். இப்படியாக ஒவ்வொன்றுக ஏற்பாடுகள்செய்து முடிந்தபின் அன்றிரவு தாமே ஒரு காவல்காரனைப் போல் உருமாற்றிக்கொண்டு பாதாளச் சிறைக்குக் காவலுக்குப் போனார்.

மற்றக் காவலர்கள் தூங்கி விழுந்துகொண்டிருக்
கும் சமயத்தில் மெதுவாக மதுபாலனைக் கூப்பிட்டார். அவனே அவருடைய புதிய உருவத்தில் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. "என்ன மது...உன்னை யாரோ தூக்கிச்சென்றுவிட்டதாக தகவல் கேள்விப் பட்டேன். பிறகு நீயும் உன் மனைவியும் கொல்லப் பட்டுக்கிடப்பதாக வதந்திகள் வந்தன. கூடவே கொல்லப்பட்டது நீ அல்ல என்று யாரோ சாமியார் என்றும் செய்தி வந்தது. நடுவில் குஷ்டரோகிபோல் நீயே வந்து நிற்கிறாய். இவை எல்லாம் என்ன.....? எங்கும் ஒற்றர்கள் நிறைந்து கிடப்பதாய்க் கூறினையே யாருடைய ஒற்றர்கள்... எல்லாம் விளக்கமாக என்
னிடம் கூறு...? என்னால் முடிந்தவரை உதவிகள் செய்கிறேன்..." என்றார்.

"மாமா அதெல்லாம் பெரிய கதை.....மகாராஜாவை நீங்கள் நன்முகப் பார்த்திருக்கிறீர்களா...?"

"பார்த்திருக்கிறேன்..."

"அவருக்கு யாராவது அண்ணன் தம்பி இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா...?"

"இல்லை...!"

"அப்படியானால், அதே அச்சு அடையாளத்துடன், அவரையே போன்ற ஒரு ஆளைப்பார்த்தீர்களானால் என்ன நினைப்பீர்கள்...?"

கனகபூபதி சிறிது யோசித்தார். பிறகு "மகாராஜாக்களுக்கு எத்தனையோ தாசிகள் இருக்கிறார்கள். அவர்களில் யாருக்காவது ஒரு மகன் பிறந்திருக்கலாம் ஆனால் அப்படிப்பட்ட ஒருவனைப்பற்றி இப்போது என்ன விஷயம்...?"

"அதுதான் பெரிய விஷயமாக இருக்கிறது. அவன் யார்...? இப்போது அவனுக்கும் அரண்மனைக்கும் இருக்கும் தொடர்பு என்ன...? அவன் எதற்காகக் கானகத்தின் நடுவே ஒரு கன்னிப் பெண்ணை ராணி என்று வைத்துக்கொண்டு ஊர் முழுவதிலும் ஒற்றர்களை வைத்துக்கொண்டும் படைசேர்த்துக்கொண்டும் திரிகிறான் என்கின்ற விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்..."

கனகபூபதி நிதானமாகக் கூறினார். "இதிலென்ன ரகசியம் இருக்கிறது. அவன் அரசாங்கத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருக்கலாம்..."

"விஷயம் அதுதான். ஆனால் நாடு முழுவதிலும் வலை பரப்பி நடுவில் சிலந்திபோல் காத்திருக்கும் அவனைப் பிடிப்பதென்றால் அது சாதாரண காரியம்

அல்ல. அதிலும் அவன் ஏற்கெனவே ஒரு தடவை அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்காகச் சதிசெய்து கண்டுபிடிக்கப்பட்டு மரண தண்டனையிலிருந்து தப்பிச் சென்றவனும்...அவனைப் பற்றிய பூரா விபரங்களையும், சரியாக, அவன் எங்கே எந்த இடத்தில் இருக்கிறான், அவனுடைய மறைவிடங்கள் யாவை, பலம் என்ன என்பவற்றையும் அறிவதற்காகத்தான் இந்த யாத்திரை...அதில் வெற்றி தோல்விவைப் பொறுத்து இருக்கிறது என்னுடைய வாழ்வும் சாவும் ....." என்றான்.

9. பால குருநாதர்

ஏழு வயதிலேயே துறவறம் பூண்டு காசி, இமயம் வரை யாத்திரை செய்துவிட்டுத திரும்பிவரும் அபூர்வ ஞானி பால குருநாதரைப்பற்றி நடெங்கும் ஓரே பரபரப்பு ஏற்பட்டிருந்தது. அவருடைய மகத்துவத்தினுல் தென்னாட்டில் காலடி எடுத்து வைத்ததுமே பல அறிஞர்கள் அகமகிழ்ந்து அவருடைய சிஷ்யர்களாகியிருக்கிறார்கள். எந்த நோயாளிக்கும் அவர் கையினுல்கொடுக்கும் ஒரு துளி திருநீறு பரிபூரண குணமளிக்கிறது, என்பவற்றைப்போன்ற செய்திகளுடன், அவர் யாரை, எதைப் பார்த்தாலும் அதன் இறந்த நிகழ், எதிர்காலங்களைப் பற்றிய எல்லா விபரங்களையும் கண்ணில் கண்டதுபோல் சொல்லிவிடுகிறார், அவர் கைபட்டால் செத்தவர்கள் கூடப் பிழைத்துக்கொள்கிறார்கள் என்பன போன்ற எவ்வளவோ வதந்திகளும் ஊரெல்லாம் பரவி விட்டது கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் நகரங்களின் சந்து பொந்துகளிலும் எங்கு பார்த்தாலும் அதே பேச்சாகிவிட்டது. அந்தக் காலத்திலே சாதாரண

மாகவே சந்நியாசிகள் என்முல் அவர்களிடத்தில் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். தெய்வத்தைப் போல் கருதி நடந்துகொண்டார்கள். எனவே இந்தப் புதிய சாமியாரின் செல்வாக்கும் பெயரும் எங்கும் அடி பட்டதில் புதுமை ஒன்றும் இல்லை.

பால குருநாதர் ஒரு இடத்தில் ஒரு இரவுக்குமேல் தங்குவதில்லை அவர் தெற்கு நோக்கி யாத்திரைசெய்து கொண்டு வந்தார். வழியில் உள்ள ஒவ்வொரு ஊர் வாசிகளும் அவரைப் பூர்ண கும்பங்களுடன் எதிர் கொண்டழைத்துப் போற்றிப் பணிந்து அவர் திருவாய் மலர்ந்தருளுபவைகளைக் கேட்டார்கள். தொண்டு செய்தார்கள். பணப்பெட்டி மன்னர்களெல்லாம் தாசானுதாசர்களாகப் பணிவிடை செய்தார்கள். ஒவ் வொரு நாளும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சி அளித்தபடி அவர் யாத்திரை செய்துகொண் டிருந்தார்.

ஒரு நாள் 'ப்ரார்த்தனை'க்கு வந்திருந்த நூற்றுக் கணக்கான மனிதர்களுக்கிடையே ஒருவனுடைய முகத்தைப்பார்த்தப் பார்த்துப் பால குருநாதர் திடுக்கிட் டார் அவருடைய நெஞ்சு திக்குதிக்கு என்று அடித்துத் கொண்டது. தான் மாறு வேஷத்திலிருந்த அவனைத் தெரிந்துகொண்டதுபோல் தன்னையும் அவன் தெரிந்து கொண்டிருப்பானு என்ற சந்தேகம் படபடத்தது. அவருக்குக கைகால்களே ஆடவில்லை. ஆனால் தன்னைச் சூழ்ந்திருக்கும் பலவான்களான தொண்டர்களைப் பார்த்ததும் அவருக்கு கொஞ்சம் உயிர்வந்தது. தவிர இந்த யாத்திரையின்போது அவரைச் சந்தித்த அவருடைய தாய் தந்தையரே அடையாளம் கண்டு கொள்ளமுடியாதபோது.....இவனுல் கண்டுபிடிக்க

முடியுமா என்ற சந்தேகம் தோன்றியது. அவருடைய தைரியம் வலுப்பட்டது.

ஒவ்வொருவராக வந்து அவர் பாதத்தைத் தொட்டு வணங்கி 'பிரசாதம்' பெற்றுக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள் அந்தக் குறிப்பிட்ட மனிதன் வந்ததும், 'அப்பனே ஒரு நாள் நீ விரும்பும் சிங்காசனத்துக்குப் பக்கத்தில் எக்கிடம் அருளுவாயாக ...' என்றார். அவன் திகைத்துப்போய் அவர் முகத்தைப் பார்த்தான். இருவர் கண்களும் ஒருகணம் சந்தித்தன. அத்தனை தாபுக்கும் முடிக்கும் நடுவிலிருந்த தன் முகத்தை அவன் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. அவன் நிதானமாக "ஸ்வாமிகளிடம் நமக்குக்கொஞ்சம் காரியம் உண்டு," என்றான். "மாலையில் 25 நாழிகைக்கு வந்தால் தனிமை கிடைக்கும்..." என்றார் குருநாதர்.

"பாக்கியம்..." என்று கூறிவிட்டுச் சென்றான் அந்த மனிதன். அவனுடன் சென்ற வேறு சில மனிதர்களும் குருநாதரின் கவனத்தைக் கவர்ந்தார்கள். யாரும் தன்னை சந்தேகிக்கவில்லை. குருநாதருக்கு உயிர் வந்தது.

எல்லோரும் போனபின் குருநாதர் ஓடிப்போய் கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துக்கொண்டார். கூடவந்த சிஷ்யர்களில் ஒருவன், "ஸ்வாமிகள் அப்படி எல்லாம் ஒன்றும் பயப்படவேண்டாம். நடிக மன்னரின் தயாரிப்பு. ஒற்றர் தலைவரின் ஆமோதிப்பு..... ஓவிய நிபுணருக்கே அதிசயம்..." என்றான். ஸ்வாமிகள் புன்னகை பூத்தார்.

10. சிங்கத்தின் குகைக்கு!

அன்று மாலை சொல்லிவைத்தாற்போல அந்த மனிதன் வேறொருவனுடன் வந்துசேர்ந்தான். குரு நாதரை வணங்கிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்தக் குறிப்பறிந்து தன் ஆட்களைச் சற்று அப்பால் இருக்கும்படி கூறினார் குருநாதர். சர்வாதிகாரியும் அந்த மனிதனும் அமர்ந்தனர். சர்வாதிகாரி மெல்லிய குரலில் "ஸ்வாமிகள் இன்று ஆசீர்வாதத்தின்போது கூறியதன் அர்த்தம் என்ன...?" என்று கேட்டான்.

குருநாதருக்கு அடிக்கடி தைரியம் தவறிக்கொண் டிருந்தது. ஆனால் இப்போது அவன் நன்றாகத் தெரிந்துகொண்டான். உருக்கு மனம் படைத்த இந்த மனிதனுக்கு உண்மையான பலஹீனங்கள் இருக்கின் றன. அவன் தன் முயற்சிகளில் உள்ளூறச் சந்தேகப் பட்டுக்கொண்டுதான் இருக்கிறான். அவனிடம் உண்மை இல்லை என்பதற்கு இது ஒரு பெரிய உதார ணம். அவன் தன்னைத்தெரிந்துகொள்ளவில்லை என் பதுமாத்திரம் அல்ல உண்மையாக மதிக்கவும் செய் கிறான்...!—அதனால் அவர் நிதானமாகப் பேசினார், "நீங்கள் என்னைச் சோதிக்க விரும்புகிறார்போல் தெரி கிறது. ஆனால் கூறுகிறேன்...இது இரைதேடும் புலி அல்ல. அரசு தேடும் சிங்கம்.....இதன் கையிலே ஆண்மை இருக்கிறது. அறிவு இருக்கிறது அரசியல் தந்திரம் இருக்கிறது. சந்தர்ப்பம் மாத்திரம் இன்னும் வாய்க்கவில்லை...அதனால்...இப்பொழுது சிங்கம் புதுக் கனவுகள் காண ஆரம்பித்திருக்கிறது."

"சிவப்பு உடை, சிவப்புக் கொடி, சிவப்புக் குதிரை, சிவப்புப்படைக்கலம் இவைகொண்டு புரட்சிப்

படை சமைக்கலாம். புதுமைகளும் காணலாம்..... இப்போது அவ்வளவுதான் கூற முடியும். நாம் அடிக்கடி சந்திப்போம் என்றார்"

குருநாதர் சர்வாதிகாரியுடன் அந்தப் புது மனிதனுடன் அதிகம் பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. குரலை மாற்றிப்பேசவேண்டிய தொல்லை வேறு. எனவே சீக்கிரம் முடித்துவிட்டார். அந்த மனிதன் சிறிது நேரம் யோசித்துக்கொண்டிருந்தான். பிறகு "குருநாதர் என் விருந்தாளியாகச் சிலகாலம் தங்கவேண்டும் தங்கள் விருப்பம் என்ன?" என்று கேட்டான். குருநாதர் 'பளிச்' என்று கூறினார். "காடு காண எமக்கும் ஆவலுண்டு. ஆனால் நாடு முடியட்டும். இன்னும் ஏழு நாட்கள் கழியட்டும்," என்று. அந்த மனிதன் ஸ்தம்பித்துவிட்டான். குருநாதரிடம் அவனுக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டாகிவிட்டது.

* * * *

அடுத்த வாரம் மதுபாலன் சர்வாதிகாரியின் கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். கையில் விலங்குகளுடன் கண்கள் கட்டப்பட்டு அல்ல பல்லக்கு பரிவாரங்களுடன், தலைசிறந்த ஒற்றர்களுடன் வீரர்களுடன்.....

சிங்கத்தின் குகைக்குள்ளே அவன் நுழைந்து விட்டான், குகையை குப்பை மேடாக்குவதற்காக...

11. அங்கே...!

சர்வாதிகாரி அவர்களை ராஜோபசாரத்தோடு வரவேற்றான். நகராக்கள் முழங்கின. விதம் விதமான வாத்தியங்கள் பலவும் கோஷித்தன. மலைப் பாதை

யின் இரு புறங்களிலும் ஆயுதபாணிகளான வீரர்கள் நின்றனர். இடையிடையே நின்ற பெண்கள் வழி நெடுகப் பூக்களை வாரி இறைத்தனர். தர்பாருக்குச் செல்லும் ஒரு அரசனுக்குரிய விமரிசையுடன் பால குருநாதர் சர்வாதிகாரியின் மஹல் கோட்டையில் நுழைந்தார்.

மண்டபத்திலே நுழைந்ததும் நடமாடும் பதுமை யைப்போல் சிவப்புடைதரித்த ஒரு பெண் முன்னால் வந்து தன் வலதுகையை நீட்டியவாறு கிளிப்பிள்ளை கூறுவதைப்போல் உணர்ச்சியற்ற குரலில் "குரு நாதரை இந்த அரசாங்கத்தின் சார்பாக வரவேற் கிறேன். மிகமிக மகிழ்ச்சி கருணை கூர்ந்து எமது சிறுகாணிக்கைகளை ஏற்றுக்கொண்டு சிறிதுகாலம் எம் முடன் தங்கியிருந்து எம்மைச் சுறப்பிக்கவேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அடியார் தயவு செய்து இந்த ஆசனத்தை ஏற்றுக்கொள்க..." என் றாள். அவள் பேச்சின் இடையிலே திக்கினாள். அவனுக்குச் சிரிப்புவந்தது. பாவம் அவளுக்குப் பாடம் போதித்திருக்கிறார்கள். அதே இடத்தில் அதேமாதிரி நின்று "இழுதுச் செல்லுங்கள் நான் இவனுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறேன்" என்று கூறிய அதே ஆள்தான் இவன் என்பது அவளுக்குத் தெரிந்தால்...

ஆனால் அவன் கூறினான், மிகவும் விநயமாக ..... "மகாராணியாரின் வரவேற்பு எமக்குப் பேரானந் தத்தை அளிக்கிறது. அவருடன் தங்கி அளவளாவி இருக்கும் காலம் தான் எமது வாழ்நாளிலேயே சிறந்த காலமாகும். அவருக்குச் சகலமங்களங்களும் உண்டா வதாக....." என்று.....

அவள் காட்டிய ஆசனத்தில் அவன் அமர்ந்தான். அதன் பிறகு அவள் அமர்ந்தாள். சர்வாதிகாரி முன்னுல் வந்து "குருநாதரிடம் நாம் நமது ராணியைப் பற்றிக் கூறவில்லை. அவர் தாமாகவே உணர்ந்து கொள்ளும் வல்லமை பெற்றவர்...என்பதனுல். இப்போது நமது ராணியின் எதிர்காலத்தைப் பற்றி அவர் சில வார்த்தைகள் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றுன்.

குருநாதர் சிரித்தார். ஆராய்பவர்போல் மனதார அவளைப் பார்த்துக்கொண்டு, "மகாராணி ஒரு ஒப்பற்ற மாணிக்கம். வெகு விரைவிலேயே ஒரு மகத்தான சாம்ராஜ்யம் அவர் ஆட்சியின் கீழ்வரும். ஆனுல் இன்று, மகாராணி வாய்விட்டுச் சொல்லமுடியாத வேதனைகளிலே வதைபட்டுக்கொண்டிருக்கிறர். அவையாவும் விரைவில் மறையும். உள்ளம் நிறைந்த உவகையுடன், மிக ஆனந்தமாக, அமைதியாக வாழும் நற்காலம் மகாராணிக்கு விரைவிலேயே வரும்....." என்றுர். அவள் சந்தேகத்துடன் தலையை நிமிர்ந்து பார்த்தாள். இருவருடைய கண்களும் கணநேரம் ஒன்றுபட்டு நின்றன. ஆனுல் அந்த முகத்தில் கண்கள் மாத்திரம்தான் அவளுக்குத் தெரிந்தவையாக இருந்தன அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

சர்வாதிகாரி மெதுவாகக்கேட்டான், "இப்போது மகாராணியை வதைக்கும் துன்பங்கள் எவையாக இருக்கலாம்...?" என்று.

குருநாதர் கூறினர், "மகாராணியின் உள்ளத்திலே சொல்லவொண்ணுத தனிமையின் தாபம் தகித்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் தான் பட்ட பேரிடி

யின் புண் ஒன்று அவள் உள்ளத்திலிருந்து இன்னும் ஆறவில்லை. இவைமாத்திரம் அல்ல நண்பர் யார், பகைவர் யார் என்று பிரித்துணரமுடியாத சூழலிலே அவர் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிறார்.

ஆச்சரியத்துடன் கூவிவிட்டாள் ராணி. உண்மையாக உள்ளதையே கூறிவிட்டார் குருநாதர். அவளால் நம்பவே முடியவில்லை. "ஸ்வாமி...இவற்றிலிருந்து என்னைத் தாங்கள் தான் காப்பாற்றவேண்டும்....." என்று உரக்கக் கூவினாள், அவள் கண்களின் மருட்சியையும் உதடுகளின் நடுக்கத்தையும் அவன் கவனித்தான். அவள் பாவம் குழந்தை போன்றவள். மென்மையானவள். உலகை அறியாதவள். திடீரென்று மகாராணி சிலைபோலானாள். அவன் கவனித்தான். சர்வாதிகாரி அவளை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப் பார்வை...!

குருநாதர் இனிமையான குரலில் கூறினார் "தேவீ ...உம்மைக்காப்பாற்றுவது எம்பொறுப்பு. சீக்கிரமே உமது கவலைகள் மாறும்...சிறிதும் மனதில் துயரம் வேண்டாம்..." என்று.

"தேவீ....."

அந்த அழைப்பு அவளை மீண்டும் உணர்ச்சி வசப்படுத்தியது. அவன்தான் அவளை அப்படி அழைத்தான். அவள் குருநாதரின் முகத்திலே அவனைத் தேடினாள், நகையாடும் கண்களைப் பார்த்தாள் ஆனாலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அன்றைய பேட்டி அத்துடன் முடிந்தது.

குருநாதருக்கும் அவருடைய சீடர்களுக்குமாக ஒரு தனி மாளிகை ஒழித்துக்கொடுக்கப்பட்டது. மலை

யின் மேல் முகில்கள் தவழும் அழகிய சிகரங்களையும் தேன் கூடுகள் நிறைந்த பெரிய மரங்களையும், வெறி மணம் கமழும் பூஞ்செடி கொடிகளையும் சூழலாகக் கொண்ட அந்த மாளிகையிலே குருநாதர் தன்னைத் தானும், தன் உள்ளத்தில் நிறைந்திருந்த அந்தக் கன்னியும் தவிர வேறொன்றும் காணாதவராகச் சிந்தையில் மூழ்கிக்கிடந்தார். நெடுநேரத்திற்குப்பின் தாம் வந்த காரியம் அதுவல்ல என்பதை நினைத்துக்கொண்டு தனது 'சிஷ்யகோடிகளை' நோக்கித் திருக்கண் திருப்பினர்.

"நந்தலால்...!"

நந்தலால் ஓடிவந்து ஒரு கும்பிடுபோட்டு வெகு பணிவுடன் நின்றான். இருவரும் குருநாதரின் தனி அறைக்கு நடந்தனர்.

"நந்தலால் முதலில் இந்த அறையிலிருந்து பேசுவது எதையும் வெளியிலிருந்து கேட்க முடியுமா என்பதை நன்றாக கவனி. பிறகு ஒற்றர் தலைவன் பூபாலனை இங்கே வரச்சொல்..." என்றார். குருநாதர் கட்டளையைச் சிரமேல் தாங்கி வெளியே சென்றான் நந்தலால். குருநாதர் அறைக்குள் ஏதாவது சுரங்க வழிகள் மறைவிடங்கள் இருக்கின்றனவா என்று கவனித்தார். ஒன்றும் இல்லை என்பதைக்கண்டு திருப்தி அடைந்தார். சிறிது நேரத்திற்குள் பூபாலன் அங்குவந்து சேர்ந்தான்

"சரியாக இந்த இடம் எங்கே இருக்கிறதென்பதை உங்களால் யூகிக்க முடிகிறதா..." என்று கேட்டான் மதுபாலன்.

"நன்றாகத் தெரிகிறது. நாம் உண்மையில் நினைப்பதைவிட இது நமக்கு மிகவும் சமீபத்தில் இருக்கிறது

வேண்டுமென்றே வழியைச் சுற்றிச்சுற்றி அமைத்திருப்பதனால் தான் நமக்கு அதிக தூரம்போலும் திசை தெரியாமலும் இருக்கிறது, தவளகிரி சாலையிலிருந்து ஒரு படையும் கல்லாய்க் கோட்டையிலிருந்து ஒரு படையும் கனகபுரியிலிருந்து ஒரு படையும் புறப்பட்டால் இந்தக் கானகத்திலிருப்பவர்கள் தப்பிச் செல்ல முடியாது.

"ஆனால் அந்த மலைகள்..."

"ஆமாம் மலைகள் மாத்திரம் அல்ல, கானகவழிகளில் படை நடத்தி வருவதே மிகவும் கடினம். இந்த இடம் மிகவும் கவனமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் வந்து எதிரியை வெல்வது என்பது மிகவும் அசாத்தியம்..."

"சர்வாதிகாரியை நன்முகக் கவனித்தீர்களா...?"

"சந்தேகமே இல்லை. இவன் காலஞ்சென்ற அரசருக்கு நாட்டியக்காரி ரஞ்சனியிடம் பிறந்த மகன் ரத்னவேலு தான். அரசாங்கத்தில் உதவி சேனாதிபதியாக இருந்தான். அரசருக்கு எதிராகச் சதிசெய்து மரண தண்டனை பெற்றான். தப்பி ஓடிவிட்டான் எத்தனையோ காலம் ஆகிவிட்டது. இவனை உலகமே மறந்திருக்கும்."

"ஆனால் இவன் உலகை மறந்துவிடவில்லை. இன்னும் யாராவது தெரிந்த முகங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தீர்களா...?"

"அதைத்தான் சொல்ல நினைத்தேன். நான் இங்கே பார்த்த சில முகங்கள் அரண்மனையில் பார்த்த முகங்களாகத் தெரிகின்றன. அதுவும் இப்போது சமீபத்தில் பார்த்த முகங்கள்தான். இவனுடைய

ஒற்றர்களில் அரசாங்கத்தில் பெரிய பதவி வகிப்பவர் கள் கூட இருக்கிறார்கள்போல் தெரிகிறது.''

மதுபாலன் யோசித்தான். ''மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம். இவர்களில் ஒருவனை நாம் சிறைப்பிடித்துச் செல்லவேண்டும்...''

''அப்படிச் செய்யமுடிந்தால் எவ்வளவோ நன் றாக இருக்கும்...''

சிறிது நேரம் யோசித்த பின் ''சரி மருத்துவரை அழையுங்கள்...'' என்றான் மதுபாலன்.

மருத்துவன் சாத்தான் ஓடோடி வந்தான்.

''சாத்தனரே இதுவரைத் தங்களுடைய மூலிகை கள் விபூதியில் கலந்து எத்தனையோ பேருடைய நோய் களைக் குணப்படுத்தின, இப்போது புதிய விபூதி ஒன்று தேவைப்படுகிறது. அதைச் சாப்பிட்டுவிட் டால் சிறிது காலம் மனிதனுக்கு புத்தி மாறிவிட வேண்டும். அப்படி என்றால் அடியோடு அல்ல. அவன் நமக்குத் தேவையான விஷயங்களைக் கூறுகிற நிலையில் இருக்கவேண்டும்...முடியுமா...?''

''அதுக்கென்ன ஒரே நொடியில் தயார் செஞ்சுதர்றேன். ஆனால் அதைச் சாப்பிட்டுட்டா அவனுக்கு நினைப்பு மறந்துபோகும். நாம் சொன் னதைச் செய்வானே தவிர அவன் கிட்ட இருந்து, நாம் ஒண்ணுமே தெரிச்சுக்க முடியாதுங்க...வேறே மருந்து கொடுத்தாத்தான் பிறகு நினைவு வரும்.....'' என்றான் சாத்தான்.

பூபாலன் கூறினான், ''அதனால் என்ன நினைவு மாறிய நிலையில் நாம்கொண்டு சென்றுவிட்டால் பிறகு

தெளிந்தவுடன் நமக்கு வேண்டியவற்றை தெரிந்து கொள்ளலாமல்லவா.....?''

''ரொம்ப சரி அப்படித்தான் செய்யவேண்டும். பூபாலரே...இன்னும் நீங்கள் இங்கிருந்து என்னென்ன தெரிந்துகொள்ள முடியும் என்பதைக் கவனியுங்கள் இப்போது நீங்கள் போகலாம். ஓவியர் உலகநாதனை அனுப்புங்கள்...''

சிறிது நேரத்திற்குப்பின் உலகநாதன் வந்து சேர்ந்தான்.

''சர்வாதிகாரியை நன்முகக் கவனித்தீரா...''

''ஓரளவு கவனிக்க முடிந்தது.''

''அதிலிருந்து அவனை மாதிரி உருவப்படம் தயாரிக்க முடியுமா...?''

''இப்போதே வேலையை ஆரம்பித்துவிடுகிறேன். இனியும் அவரைக் கவனிக்கும்படியான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் அல்லவா...?''

''தாராளமாகக் கிடைக்கும். சரி நீர் போகலாம்''

அன்றிரவு வேலப்பன் குருநாதருடைய வேஷத்தைக் கலைக்க வந்தபோது ''வேண்டாம். எப்போதும் போல் நாளைக் காலையில் வந்து சரிசெய்து விட்டுவிடு போதும்...'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

12. பக்கத்துணை!

இரவு நெடுநேரமாகிவிட்டது. வானம் நிலவொளியில் இளநீலப்பளிங்குபோல் விளங்கியது. கானகமும் அந்தச் சிறிய மலைகளும் நிலவில் அழகும் அமைதியும் பெற்றுவிளங்கின. அந்த அழகிய இரவிலே குருநாதர் மெதுவாக ஆலோசித்தபடி வெளியே கிளம்பினர்.

அவ்வளவு அருகில் இருந்தும் கன்னி ராணியைப் பார்க்காமல்...அவளோடு இரண்டு வார்த்தைகளாவது பேசாமல் அவரால் இருக்க முடியவில்லை. அவர் உள்ளத்திலே காதலின் தவிதவிப்பு கனலாய் எரித்துக் கொண்டிருந்தது இனிமை நிறைந்த நிலவிலே, குளிர் மணம் கலந்த தென்றலிலே அந்த உள்ளத் தீ குறைய வில்லை. பற்றி எரியத் தொடங்கிவிட்டது எங்காவது ...எப்படியாவது அவளைக்காண முடியுமா என்று அவர் ஏங்கினர். தன்னைமாத்திரம் தகிக்கும் அந்தத் தாபம் அவளை மாத்திரம் சும்மா விட்டுவிடுமா...? அவளும் இதைப்போல் உறக்கம் கொள்ளாமல் எங்காவது வெளியே வந்து உலவிக்கொண்டிருந்தால்...? அப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அவளை ஒரு முறை காண்பதற்காக...அவளுடன் ஒரு வார்த்தை பேசுவதற்காக...அவன் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பான்...ஆனால்...?

அவளுடைய அறைக்கே போகலாமா என்ற ஒரு குருட்டுத்துணிச்சல் கூட அவனுக்கு வந்தது. ஆனால் அவன் வந்த காரியம் இன்னும் முடியவில்லை. தவறிப் போய் அகப்பட்டுக்கொண்டால்...? ஏற்கனவே துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் அவள் இன்னும் அதிகத் துன்பமடைய நேர்ந்துவிடும். அவன் தன்னைத்தான் கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றான். சற்று தூரத்தில் இலைகள் சலசலத்தன. அவன் பரபரப்புடன் திரும்பினான். அங்கே அவனைப்போலவே உறக்கம் கொள்ளாது சிந்தனைகளில் ஆழ்ந்து உலவிவந்து கொண்டிருந்த ஒரு ஆளைக் கண்டான். ஆனால் அது ராணி அல்ல சர்வாதிகாரி! அவன் திடுக்கிட்டான், திரும்பிப்போய்விடலாமா என்று கூட நினைத்தான்.

ஆனால் சர்வாதிகாரி அவரைப் பார்த்துவிட்டான். நேராக அவனை நோக்கி வந்தான்.

ஒருகணம் குருநாதர் தமது உருவத்திற்குத்தகுந்த உள்ள நிலையை அடைவதற்காகப் போராடினர். சர்வாதிகாரி வணக்கம் தெரிவித்துவிட்டு "ஸ்வாமி... இந்தச் சமயத்தில் உங்களைக்கண்டது எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது .." என்றான்.

நிதானித்துக்கொண்டு, "அப்பனே எண்ணம் பலகொண்டு உள்ளம் மிக வாடி வருகிறாய்...ஆனால் உன் அச்சத்திற்குக் காரணமே இல்லை..." என்றார் குருநாதர்.

"கண்டமாத்திரத்தில் தாங்கள் பிறர் உள்ளத்தைத் தெரிந்துகொள்கிறீர்கள்.....அந்த வல்லமை எனக்கும் கிடைத்திருந்தால்..."

"நிலைமை வேறு விதமாகப் போயிருக்கும்....." அவன் பதில் அவனுக்கே திகைப்பாக இருந்தது

"ஆமாம்...அப்படித்தான் ஆயிருக்கும்..." சர்வாதிகாரி எதையோ நினைத்துக்கொண்டு அதை ஆமோதித்துவிட்டான். சிறிது சிந்தித்துவிட்டு, "என் மனம் உறுதிபட மாட்டேன் என்கிறது. எதைப்பார்த்தாலும் சந்தேகமாகவே இருக்கிறது..."

"ஏன்..? என்னைப் பார்த்தால் கூடவா...?"

"இல்லவே இல்லை...!"

"அப்படியானால் என்னிடம் சொல்லத் தயங்குவானேன்...?"

"சொல்லத்தான் போகிறேன்...ஆனால் அதன் முன் சில கேள்விகள்...?"

"கேளுங்கள்..."

"என் லட்சியம் வெற்றிபெறுமா...?"

"சுத்த வீரனுக்குத் தோல்வி உண்டா...!

"தோல்வி இல்லை...ஆனால் நான் நினைத்ததை அடைவேனா...?"

"சஞ்சலம் பெண்களின் குணம்...!"

"ஆம்...! நான் எவ்வளவோ உறுதியுடன் நடந்து கொள்கிறேன். ஆயினும்..."

"கவலைப்படாதீர்கள்...இந்த உடைகளைக் களைந்துவிட்டு அரசனின் உடைகளை அணிந்துகொண்டால் அரசி கூட வித்தியாசம் தெரிந்துகொள்ளமாட்டாள்..."

சர்வாதிகாரி திடுக்கிட்டான். அவன் குரல் கரகரத்தது. "ஸ்வாமிஜீ..." என்று கூறிவிட்டான்...

குருநாதர் உள்ளம் அசாதாரண துணிவடைந்து விட்டிருந்தது. சாவதானமாகச் சிரித்துக்கொண்டு... "அதுமாத்திரமல்ல...இத்தனை காலத்திற்குப்பின் ஒரு பெண்ணின் மேல் உங்களுக்கு மோகம் உண்டாகியிருக்கிறதல்லவா...?"

சர்வாதிகாரியால் பேசவேமுடியவில்லை. ஒருகணம் மௌனமாக இருந்தான். பிறகு திடீரென்று தலையை உயர்த்திக் குருநாதா...தாங்கள் என்னைவிட்டுப் போக வேண்டாம்...எப்பொழுதும் என்னுடனேயே இருந்து என்னுடைய லட்சியங்களை வெற்றிக்குக்கொண்டு சேர்ப்பது தங்கள் பொறுப்பு...

"அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்...நான் எங்கே இருந்தாலும் என் துணை உங்களுக்கு இருக்கும்..."

"தாங்கள் என்னுடன் இருந்தால்..."

"நான் போவதன் முன் பலவற்றைச் சரிப்படுத்திக்கொண்டுதான் போவேன். இன்னும் இரண்டு நாட்கள்தான் இங்கு தங்குவேன். இடையில் ராணியை ஒருமுறை தனிமையில் சந்திக்கவேண்டும்..."

"இப்போதே..."

"வேண்டாம்...நீங்கள் ஒன்றுமே செய்யவேண்டாம். உங்கள் ஒற்றர்கள் என்னையும் என் சீடர்களையும் தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும்..."

"இப்போதே கட்டளையிட்டுவிடுகிறேன். இதுவரை எனக்குத் தங்களைப்போல் ஒரு துணை கிடையாமல் இருந்தது. இனி நான் எடுத்த காரியங்கள் யாவும் வெற்றிபெறும்..."

சர்வாதிகாரி நம்பிக்கையுடன் விடைபெற்றுச் சென்றான். குருநாதரும் தம் அறையை நோக்கி மகிழ்ச்சியுடன் நடந்தார். சர்வாதிகாரி இவ்வளவு சுலபமாக வந்து அகப்பட்டுக்கொள்வான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவருடைய சந்தேகங்கள் தெளிந்துவிட்டன. இனி விரைவில் காரியத்தை முடிக்கவேண்டியதுதான். குருநாதருக்கு வெற்றியை நோக்கி வெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது.

13. சந்திப்பு...!

மறுநாள் காலையில் மிக உற்சாகத்துடன் குருநாதரை வரவேற்றான் சர்வாதிகாரி. அன்று குருநாதரைக் கவுரவிப்பதற்காகப் படை அணிவகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நகராக்கள் முழங்கின.

கன்னி ராணி தனது பரிவாரங்கள் சூழப்பவனி வந்தாள். அவள் குருநாதரை வணங்கினாள். ஆர்வத்துடன் அவளைப் பார்த்தவாறு கையை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தான் மதுபாலன். வீரர்கள் கட்டியம் கூற அவர்கள் நடந்தனர். சர்வாதிகாரி முதலில் நடந்தான். குருநாதரும் கன்னி ராணியும் அருகருகில் இணையாக நடந்து சென்றனர்.

தன்னுடைய வீரர்களுக்கும் ஏளபதிகளுக்கும் குருநாதரை அறிமுகப்படுத்திவைத்தான் சர்வாதிகாரி தங்களுடைய லட்சிய வெற்றிக்காகக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதர் என்று புகழ்ந்தான். குருநாதர் மௌனமாகச் சிரித்துக்கொண்டிருந்தார். அவருடைய கண்கள் கன்னி ராணியின்மேல் மொய்த்துக்கொண்டிருந்தன. அவளோ அளவுகடந்த சந்தேகத்துடன் அவரைப் பார்ப்பதும் தலையைத் திருப்பிக்கொள்வதுமாக இருந்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. உண்மையில் அவள் உள்ளம் மிகவும் தவித்துக்கொண்டிருந்தது.

அன்றிரவு அதே தவிதவிப்பில் அவள் இப்படியும் அப்படியுமாக நடந்துகொண்டிருந்தாள். அவள் உள்ளம் அலைந்துகொண்டிருந்தது. அந்தச் சொல்லமுடியாத ஏக்கத்திற்குக் காரணம் என்னவென்றே புரியவில்லை. அவள் நினைத்தாள்...அந்தச் சமயத்தில் எப்படியாவது அவன் அருகே இருக்கமுடிந்தால்...அவனை அவள் காணமுடிந்தால்...அவன் கண்களிலே குழையும் காதல் அமுதை ஒருகண நேரம் கண்டுகொண்டே இருக்கமுடிந்தால்.....அவன் சொல்லிலே தெறிக்கும் இன்ப மொழிகளைக் கேட்டுக்கொண்டே இருந்தால்... கடவுளே அப்படியும் நடைபெறுமா...? அவள் உள்

ளம் விம்மியது ஆழ்ந்த பெருமூச்சுடன் அவள் மீண்டும் நடந்துகொண்டிருந்தாள்.

குருநாதர் எப்படி உள்ளே வந்தார் என்பது அவளுக்குப் புரியவில்லை. அவள் எதேச்சையாகத் திரும்பியவள் திடுக்கிட்டாள். கதவுகள் அடைத்தபடி இருந்தன. அவர் அவளையே பார்த்தபடி தன்னை மறந்து நின்றுகொண்டிருந்தார். அவள் உள்ளம் நடுங்கியது. என்ன சொல்வதென்று தெரியவில்லை. தலையைக் குனிந்துகொண்டு தடுமாறினாள்.

"தேவீ...கன்னியாக வாழ்வதற்கென்று படைக்கப்பட்ட நீ காதல்கொண்டு தடுமாறலாமா...?"

குருநாதர் குறும்புக் குரலில் கேட்டார். அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு கோபம் வந்தது அவன் கண்களில் அந்தக் காமப்பார்வையைப் பார்த்த பின் குருநாதர் என்ற மதிப்பு அவள் உள்ளத்திலிருந்து அகன்றுவிட்டது. அதுவும் அவன் தன் உணர்ச்சிகளைத் தெரிந்துகொண்டு குத்தலாகப் பேசியதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

"உங்களுக்கு இப்போது என்னவேண்டும்....." அவள் ஆத்திரத்துடன் கேட்டாள்.

"உன் காதல்...!"

"காதல்...! ஒருகணம் அவள் தடுமாறினாள். வெறியும் ஆத்திரமும் அவள் உளளத்தில் வந்து மோதின..." காதல்...எத்தனையோ கபடசந்யாசிகளில் ஒருவர்தானா நீரும்..?

'ஆம்...ஆனால் காரியமாக வந்த கபட சந்யாசி...'

"என்ன காரியம்..."

"ஒரு கன்னியை விடுவிப்பது..."

"உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க நான் தயாராயில்லை. தயவுசெய்து வெளியேறிவிடுங்கள்...."

"கொஞ்சிப் பேசத்தகுதியான இதழ்களால் கோப மொழிகளை உதிர்க்காதே கண்மணீ..."

"ஆ...என்ன துணிச்சல் உனக்கு.?"

"என்னை நீ உணர்ந்துகொள்ளவில்லை, அதனால் தான்..."

"உணர்ந்துகொண்டவரை போதும், இனியும் இங்கே நின்றுகொண்டிருந்தால்..."

குருநாதர் நிதானித்தார். அமைதியாகத் தனது பழய குரலில், "தேவீ.....நான் போகத்தான் வேண்டுமா...?" என்று கேட்டார்.

அவள் திடுக்கிட்டாள். திரும்பத்திரும்ப அந்த முகத்தைப் பார்த்தாள். ஆனால் அவளால் புரிந்து கொள்ளமுடியவில்லை. பேசாமல் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

அவன் அவளை நெருங்கி மிக மெதுவான குரலில் கூறினான்: "தேவீ இந்த வேஷத்தில் உன்னாலேயே என்னைப் புரிந்துக்கொள்ள முடியாதபோது சர்வாதிகாரிக்குத் தெரியாமல் போனதில் அதிசயம் இல்லை. நான் வந்த நோக்கம் வெற்றிகரமாக முடிகிறது. நாளை நான் புறப்படுகிறேன். இடையில் ஒருமுறையாவது உன்னைப் பார்க்கவேண்டும் என்கின்ற ஆவல்...

அவளால் நம்பவே முடியவில்லை. "நீங்கள்... நீங்கள்...என்று தடுமாறினாள். ஆனந்தத்தில் அவள் அப்படியே மூர்ச்சித்து விழுந்திருப்பாள். அவன் அவளைத் தன் மார்பில் தாங்கிக்கொண்டான்.

தன்னை மறந்துபோய் அப்படியே அவள் அவன் தோளில் சாய்ந்துகொண்டிருந்தாள். அவளுக்கு சுய உணர்வே இருக்கவில்லை. அவள் எவ்வளவோ பேச வேண்டும் என்று விரும்பினாள். எதுவும் பேச அவளால் முடியவில்லை. எவ்வளவோ கேட்கவேண்டும் என்று நினைத்தாள். எதுவும் கேட்கவும் முடியவில்லை உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவன் மார்பை வருடியவளாய் அப்படியே சாய்துகொண்டிருந்தாள் அவன் ஆனந்த கண்ணீர் உகுத்தான். "தேவி..... சர்வாதிகாரியைக் கூண்டுடன் சிறைப் பிடிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். என்னுடைய முயற்சி வெற்றிபெறும் என்பதில் சந்தேகம் இல்லை. கூடிய விரைவில் நான் மீண்டும் உன்னிடம் வருவேன். அன்று நீ என்னுடன் வந்து விடத்தயாராக இருக்கவேண்டும்..." என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் பொங்கிவிட்டது. 'ஐயோ...எனக்காக...ஏன் இங்கே வந்தீர்கள்.. ஏன் வந்தீர்கள்.. நீங்கள் அகப்பட்டுக்கொண்டிருந்தால்...?' என்று தேம்பினாள். அவள் முகத்தைத் திருப்பி, அதையே பார்த்தவனாய்.. 'தேவி...உன்னைவிட..... உன்னைவிட...எனக்கு இந்த உயிர் என்ன பெரிதா...?' என்றான்.

14. தப்பிவிட்டார்கள்!

இரண்டு நாட்களுக்குப்பிறகு சர்வாதிகாரி குருநாதருக்கு ராஜோபசாரத்துடன் விடை அளித்தான். கானக எல்லைவரை கள்வர் படைகள் தொடர்ந்து வந்தன. அதன் பிறகு குருநாதர் ஆனந்தத்துடன் தன் சிப்பந்திகளிடம் பேசிக்கொண்டே வழிநடந்தார் அவர்களுடன் அரசாங்கத்தில் நிதி நிர்வாகத்தைக் கவ

னித்துக்கொண்டிருந்த நீலவர்மனும் இருந்தான். அவனுக்குப் பாவம் சுய உணர்ச்சி இருக்கவில்லை. தலை முடியை உயரக்கட்டி உடலெல்லாம் விபூதிப் பட்டை தீட்டி அவனையும் ஒரு சாமியாக்கிவிட்டிருந்தார்கள். அவன் நெடுநாட்களாக ஒரு பெண்ணைக் காதலித்தான். அவள் அவனுக்கு இணங்கவில்லை. குருநாதரின் அருளைத் தேடினான். மூலிகை சேர்க்கப்பட்ட விபூதி அவன் மதியை மயக்கியது. அடிமையாகி விட்டான். இப்போது அவன் சிஷ்யகோடிகளுடன் உணர்ச்சியற்ற நிலையில் பிரேதம்போல் நடந்துகொண்டிருந்தான்.

கானக வழிகளிலே அவர்கள் மிகவேகமாக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். 'தப்பிவிட்டோம்' என்ற மகிழ்ச்சி எல்லோருடைய உள்ளத்திலுமே குதித்துக் கொண்டிருந்தது. இனி மிக விரைவில் சர்வாதிகாரியை நிர்மூலமாக்கிவிடவேண்டும் என்று மதுபாலன் திட்டமிட்டுக்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு இடத்திலிருந்து ஆயுதபாணிகளான கள்வர்கள் வந்து வழியை மறித்தார்கள். அவர்களுக்குத் தலைவன்போல் தோன்றிய ஒருவன் "வணக்கம் தயவுசெய்து நில்லுங்கள்..." என்றான்.

ஒற்றர் தலைவன் கேட்டான், "ஏன்...?"

"நாங்கள் சோதனை செய்யவேண்டும்...?"

"யாரை...?"

"உங்களைத்தான்..."

"நாங்கள் அடியார்கள்"

"யாராயிருந்தாலும் சரி.."

"சர்வாதிகாரியின் நண்பர்கள்..."

"அதைப்பற்றிக் கவலை இல்லை. எங்கள் கடமையைச் செய்தாகவேண்டும்..."

"எதற்காகச் சோதனை செய்யவேண்டும் என்கிறீர்கள்...?"

"நீங்கள் வரும்பொழுது முப்பத்தேழு பேர் இருந்தீர்கள். செல்லும்போது ஒருவர் அதிகரித்திருப்பதன் காரணம் அறியவேண்டும்.

"புதிதாக ஒருவர் எம்முடன் சேர்ந்தார்..."

"சாம்ராஜ்யத்தில் யாருக்கும் அடியாராக அனுமதி கிடையாது..."

"என்ன விசித்திரமான சாம்ராஜ்யம்..!"

அந்த அதிகாரி தொண்டர்களை ஒவ்வொருவராக உறுத்துப்பார்த்துக்கொண்டு நடந்தான். "இல்லை அடியார்கள் இல்லை..." என்று கூவினான்,

"ஏன்...?"

"உங்கள் உடம்புகளில் வாள்பட்ட தழும்புகள் இருக்கின்றன நீங்கள் வீரர்களாக இருந்திருக்க வேண்டும்."

"எங்கள் சாம்ராஜ்யத்தில் வீரர்கள் அடியார்களாகக் கூடாது என்று சட்டமில்லை.."

"ரொம்ப சரி..." அதிகாரி கூவிவிட்டு மேலும் நடந்தான், நீலவர்மன் அருகே வந்ததும் நிலைத்து நின்றுவிட்டான் "என்ன.....நீலவர்மரே.....எங்கே செல்கின்றீர்..."

"ஆ...என் ராசாத்தி.....கண்ணே...இன்னும் நீ என்னை ஏமாற்ற முடியாது குருநாதரிடம் வசிய மருந்து சாப்பிட்டிருக்கிறேன்..." நீலவர்மன் மதிமயங்கிய நிலையில் பிதற்ற ஆரம்பித்துவிட்டான்.

ஒற்றர் தலைவன் கூறினான், "இவருக்கு மதி மயக்கம் ஏற்பட்டிருக்கிறது சர்வாதிகாரியின் அனுமதியின் பேரில் குணப்படுத்த எடுத்துச் செல்லுறோம்..."

"எங்கே அனுமதி?..."

ஒற்றர் தலைவன் ஏமாந்துவிட்டான். ஆயினும் சமாளித்துக்கொண்டு, "அடியார்களுக்குப் பத்திரம் ஒன்றும் தேவை இல்லை..."

"பூபாலா...உன்னை யாருக்கும் இங்கே தெரியாதென்று நினைத்துவிட்டாய்.....ஆனால் நீ பேச ஆரம்பித்த உடனேயே நான் கண்டு பிடித்துவிட்டேன். தப்பிவிட்டோம் என்கின்ற மமதையில் நீ உன் வேஷத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளவில்லை. நல்ல காலம்...நான் சமயத்தில் வந்து சேர்ந்தேன். இவர்களை கைது செய்யுங்கள்..."

அவர்கள் திகைத்து நின்றபோது கள்வர்கள் அவர்களை நோக்கி வந்தனர். ஆனால் சமயத்தில் மதுபாலன் வாளுடன் துள்ளிப்பாய்ந்தான். அடியார்கள் ஆயுதபாணிகளானார்கள். கள்வர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. என்னதான் சாமர்த்தியமாகப் போரிட்டும் அவர்களால் நிற்கமுடியவில்லை. அவர்கள் அடிபட்டு ஓடுகிற சமயம் நந்தலால் அவர்கள் சவாரிசெய்து கொண்டுவந்திருந்த குதிரைகளை அடக்கிக்கொண்டான் இனி அரைக்கணமும் தாமதிப்பது ஆபத்து என்று அறிந்ததும் மதுபாலன் முக்கியமானவர்களுடன் கல்லாய்க்கோட்டையை நோக்கிக் குதிரையில் பறக்க ஆரம்பித்தான்.

* * * *

சர்வாதிகாரி செய்தி கேள்விப்பட்டதும் துடிதுடித்தான் தானே வலியச்சென்று வலையில் மாட்டிக்

கொண்டது அவனுக்கு வெட்கமாக இருந்தது. உடனே தன் வீரர்களுக்கு உத்திரவிட்டான், மாறு வேஷத்தில் பின் தொடரும்படி..... "பூபாலன்" என்றதுமே அவன் உடல் நடுங்கிற்று. உடனே மதுபாலனுடைய நினைவுதான் வந்தது. அவனுடைய ஒற்றர்களுக்குச் செய்திகள் பறந்தன.

என்ன ஏற்பாடுகள் செய்த போதிலும் இனித்தாமதிப்பதில் பயன் இல்லை என்பதை அவன் நன்றாக உணர்ந்துகொண்டான் இனித்தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் எதிரி பலமடையும் நாள். அவன் வலிவிழக்கும் நாள். உடனே அவன் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கத்தயாராகியாகவேண்டும். அதை அவன் என்றாவது ஒருநாள் எதிர்பார்க்கத்தான் செய்தான். ஆனால் அது இவ்வளவு சீக்கிரமாக வந்துவிடும் என்று எதிர்பார்க்கவில்லை. தனது படையை எப்போதும் தயாராக இருக்கும்படி உத்திரவிட்டான். அங்கங்கே மூலைக்கு மூலை நகர்களில் இருக்கும் தன்னுடைய ஆதரவாளர்களைத் திரட்டுவதற்காக யாத்திரை கிளம்பினான் கன்னி ராணியுடன்தான்.....!

15. அடாத பழி!

கல்லாய்க் கோட்டையை அடைந்ததும் மதுபாலன் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பது பற்றி யோசித்தான் எப்படியிருந்தாலும் இதற்குள் சர்வாதிகாரிக்குச் செய்திபோயிருக்கும். ஏற்கெனவே அவனை ஒழிப்பதற்காகத் தீவிரமாக முயன்று கொண்டிருக்கும் சர்வாதிகாரி இந்தச் செய்தியும் அறிந்தால் தன்னால் முடிந்த எல்லா வழிகளிலும் அவனை ஒழித்துவிடுவதற்காக முயற்சிப்பான் என்பதை அவன்

உணர்ந்தான். அதற்காக பிரங்கமான ஒரு யுத்தத் திற்குக்கூட அவன் தயாராகிவிடக் கூடும். இதற் குள்ளாகவே வழிகளில் அவனுடைய வீரர்கள் மாற் றுடைகளில் நிறைந்துவிட்டிருக்கவும் கூடும். இந்த நிலையில் அவன் எங்கிருப்பதும், எந்த மாறுவேடத்தில் இருந்தபோதிலும் ஆபத்துதான் என்பதை நன்றாக உணர்ந்தான். இந்த நிலையில் அவன் செய்யக்கூடிய ஒரே காரியம் தலை நகருக்குச் சென்று அரசரிடம் நிலைமைகளை விளக்கிப்படைகளைத் தயார்செய்வது தான். எவ்வளவு விரைவில் தலைநகரை அடைந்து விடுகிறோமே அவ்வளவுக்கு அவன் உயிருக்குப் பாது காவல் இருந்தது. நீலவர்மனையும் எப்படித் தலை நகருக்குக்கொண்டு சேர்ப்பது என்பதுதான் அவனுக் குப் பெரிய பிரச்னையாக இருந்தது.

அவன் யோசித்தான். அவர்கள் கல்லாய்க் கோட்டையை நோக்கி வந்தது சர்வாதிகாரிக்குத் தெரிந்திருக்கும். கல்லாய்க் கோட்டை எந்த நிமிஷத் திலும் தாக்கப்படலாம். ஐந்து கோட்டைகளும் ஏக காலத்தில் தாக்கப்படலாம், மாறு வேஷத்தில் வெளியே இருக்க நினைப்பதிலும் பயன் இல்லை சர் வாதிகாரி இனியும் ஏமாறமாட்டான். தவிர அவனிடம் நல்ல திறமைசாலிகளான ஆட்கள் இருந்தார்கள்.

நீண்ட நேர ஆலோசனைகளுக்குப்பின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான், அந்தக் கூட்டத்தை இரண்டாகப் பிரித்து பூபாலனையும் உலகநாதன் சாத்தான் முதலிய வர்களை நாடோடி வியாபாரிகளாகச் சென்று தலை நகரை அடைய ஏற்பாடு செய்தான் இந்தக் கூட்டம் நீலவர்மனையும் ஒரு வேலைக்காரன்போல் கொண்டு செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டது. வேலப்பனும் சில

வீரர்களும் மதுபாலனும் இரண்டு மூன்று அரண்மனைத் தோழிகளுடன் ஒரு நாடகக் கம்பெனியாகத் திரண்டது. இவர்களும் வேறு வழியாகத் தலைநகருக்கு வந்துசேர்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. முதலில் பூபாலனின் கூட்டம் புறப்பட்டது.

* * * *

நடிகர்களின் கூட்டம் எங்கெங்கோ சுற்றி வளைத்துக்கொண்டு மெதுவாகத் தலைநகரை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. எல்லாவிடங்களிலும் சர்வாதிகாரியின் ஒற்றர்கள் நிறைந்திருந்தார்கள். அவர்கள் சாதாரணமாக எல்லா முக்கியமான சாலைகளிலும் போகிறவர்கள் வருகிறவர்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். மதுபாலனுக்கு ஒவ்வொருகணமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது. சிறிது ஏமாந்தாலும் அவன் உயிர் அவனிடம் இருக்காது. ஒவ்வொருகணமும் அவன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பது போல் உணரவேண்டி இருந்தது. கூடுமானவரை அவர்கள் ஜனங்கள் அதிகமாக நடமாடுகின்ற மாலை நேரங்களிலும் முன் இரவுகளிலுமே வழி நடந்தார்கள் இரவுகள் சர்வாதிகாரியின் ஆட்களுக்கே சொந்தமாக இருந்தன.

அவர்களுடைய யாத்திரையிலே எதிர்பாராவிதமாக ஒருசந்தர்ப்பம் நிகழ்ந்தது. ஒருநகரிலிருந்து அவர்கள் வெளியேறிக்கொண்டிருந்த பொழுது இரவு வெகு நேரமாகியும் ஜனநடமாட்டம் இருந்துகொண்டே இருந்ததைக்கண்டு அவன் அதிசயமடைந்தான். ஒரு சிறிய கூட்டத்துடனேயே அவர்கள் நடந்தார்கள். மதுபாலன் அவர்கள் எங்கோ வேறு ஊருக்குச் செல்

வதாகவும் அவர்களுடனேயே நடந்தால் கொஞ்சம் பாதுகாவலாக இருக்கும் என்றும் எதிர்பார்த்தான். நகரைக் கடந்து வெகுதூரம் வந்ததும் அவர்கள் ஒரு ஆற்றுப் படுகையில் இறங்கி நடந்தனர். அந்த வழி யாக வேறு ஆட்களும் நடந்துகொண்டிருந்தார்கள். ஏதாவது குறுக்கு வழியாக இருக்கும் என்று நினைத்து அவனும் நடந்தான். வெகு தூரத்திற்கப்பால் ஒரு இடத்தில் அந்தக் கூட்டம் ஆற்று வழியைவிட்டு மேட் டில் ஏறித் தோப்புகளின் வழியாக நடந்தது. அவர் களுக்கு முன்னால் சென்றவர்களும் அதே வழியாகச் சென்றார்கள். பின்னாலும் அதே இடத்தை நோக்கி ஆட்கள் வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இதைப் போல் வழி நடைப்பயணம் போகிறவர்களின் இயற்கைக்கு மாறாக அத்தனை பேரும் மௌனமாக... வாய் அடைபட்ட ஊமைகளைப்போல் விடுவிடுவென்று நடந்துகொண்டிருந்தார்களே தவிர ஒருவராவது வாய் திறந்து ஒருவார்த்தை கூடப் பேசவில்லை.

அவனும் தன் கூட்டாளிகளுடன் ஒன்றும் பேசா மல் அவர்களைப் பின் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தான். சுடைசியாகத் தோப்புகளுக்கு மத்தியில் ஒரு இடத்தில் ஒரு பெரிய மைதானத்தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் குழுமியிருப்பதை அவன் கண் டான். அந்தக் கூட்டத்திற்கு வேலி கட்டியதுபோல் சர்வாதிகாரியின் ஆட்கள் ஆயுதபாணிகளாக நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவன் உயிர் அவ னிடம் இருக்கவில்லை.....யாருக்கு அஞ்சி அஞ்சி..... யாருடைய ஆட்களின் கண்முன் கூடச்செல்லாமல் தலை நகருக்கு ஓடி ஒளியவேண்டும் என்று கருதினானே ...அதே ஆளிடத்தில், அவனுடைய ஆட்களுக்கு மத்தி

யில் அவன் தன்னை அறியாமல் வந்துமாட்டிக்கொண்டான். அவன் நெஞ்சு படப்பட வென்று அடித்துக் கொண்டது. வேலப்பன் முதலியவர்கள் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தார்கள். அவன் ஜாடையாக மௌனமாக இருக்கவேண்டும் என்று எச்சரித்து விட்டு, இனிமேல் செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்கிற நிலையில் பேசாமல் சென்று அந்தக் கூட்டத்திற்கு மத்தியில் அமர்ந்துகொண்டான். நந்தலால் அவனுடன் இருந்தான். அவன் ஓரளவு நிலைமையை உணர்ந்து கொண்டான். இப்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் ஓரளவு அவன் யூகித்துக் கொண்டான். கூட்டத்தோடு கூட்டமாக அவர்கள் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிரே பிரமாண்டமான ஒரு மேடை இருந்தது. அதைச் சுற்றிலும் பொறுக்கி எடுத்த வீரர்கள் வரிசையாக நின்றனர். முதல் வரிசையில் இருந்தவர்கள் வாட்களும், அடுத்த வரிசைகளில் வட்டிகள் தாங்கியவர்களும், அடுத்த வரிசைகளில் வேறு வேறு விதமான ஆயுதங்கள் தரித்தவர்கள் இருந்தார்கள், கடைசியாக மேடையை ஒட்டி நாணேற்றிய விற்களுடன் வீரர்கள் தயாராக நின்றனர். இந்தப் பயங்கரமான அணிவகுப்பை மதுபாலன் கவனித்தான். எவ்வளவு சாமர்த்தியத்துடன் அந்த வியூகம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் மேடையையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தீப்பந்தங்களைத் தாங்கிய வீரர்கள் வரிசையாக வந்து மேடையின் இரண்டு பக்கங்களிலும் நின்றார்கள். இன்னொரு வரிசை நேராக

வந்து இரண்டாகப்பிரிந்து எறும்புபோல் ஊர்ந்து சென்று கூட்டத்தைச்சுற்றிச் சூழ்ந்து நின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருபெரிய ஆரவாரம் கிளம்பியது அந்த மேடையின் மேல் வெள்ளை உடைதரித்த கிழவி ஒருத்தியும் ராணுவ வீரனைப்போல் உடைதரித்த சுறு சுறுப்பான இளைஞன் ஒருவனும் மெதுவாக ஏறிவந்தனர். முதல் பார்வையிலேயே மதுபாலன் தெரிந்து கொண்டான், அந்த இளைஞன் கன்னி ராணியே தான்...அவன் மூச்சு முட்டியது. அந்தக் கூட்டத்தில் என்ன நடக்கிறது என்பதை ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டிருந்தான்.

அந்தக் கிழவி நிமிர்ந்து நின்றாள். மேடையின் மேல் நின்ற வீரன் ஒருவன் வந்து வணங்கிக் கூட்டத்தைப் பார்த்துச் சர்வாதிகாரி வந்துவிட்டார் என்றான் கூட்டத்தில் பரபரப்பும் குழப்பமும் உண்டாயிற்று. அங்கே அத்தனை பேருடைய குரலிலும் 'சர்வாதிகாரி, சர்வாதிகாரி, சர்வாதிகாரி' என்ற ஒரு வார்த்தைத் தான் அடிபட்டது. ஜனங்கள் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். கழுத்தை உயர்த்திக்கொண்டு கால் விரல்களில் நின்று எட்டிப்பார்த்தார்கள். அவர்கள் கண்களுக்குச் சர்வாதிகாரி தோன்றவில்லை ஒரு கிழவிதான் நின்றுகொண்டிருந்தாள். அந்தக் கிழவி இரண்டு கைகளையும் உயர்த்திக் கூட்டத்தை அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டு தன் வெள்ளை அங்கியை இழுத்து அப்பால் போட்டாள். ஜனங்கள் ஆச்சரியத்தில் விதம் விதமான ஒலியைக் கிளப்பினர். சர்வாதிகாரி, சர்வாதிகாரி என்ற குரல்கள் மீண்டும் எதிரொலித்தன. அவன் மீண்டும் தன் கைகளை உயர்த்தி அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்

டான். அலைகுமுறி ஓய்ந்ததைப்போல் அத்தனை கூச்சலும் ஆரவாரமும் நிசப்தத்தில் மறைந்தன. அவன் ஆழ்ந்த நிதானமான குரலில் பேசினான்,

"துன்பத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து அழுந்திக் கொண்டிருக்கும் என்னுடைய ஏழைச் சகோதரர்களே .....அடிமைத்தனத்திலும் அல்லலிலும் அவதியுற்ற காலம் நமக்கு இனி முடிவடையப்போகிறது. அதோ விடுதலை தேவதை உதயமாகிறாள். அவள் வருகையை இன்னிசைக் குரலில் பாடி அறிவிக்கின்றன பறவைகள்....."

உண்மையாகவே அப்போது இசைக் கருவிகள் மீட்டப்படுவது போன்ற நாதம் இலேசாக வந்து கொண்டிருந்தது. மதுபாலன் ஆச்சரியத்துடன் திரும்பித்திரும்பிப் பார்த்தான். அங்கே மேடைமேல் நின்ற இளைஞன் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக அந்த இசைதான் எங்கோ தூரத்திலிருந்து அருகில் வருவதைப்போல் கேட்டுக்கொண்டு வந்தது. சர்வாதிகாரி மீண்டும் பேசினான்.

"தோழர்களே...அவள் வருகை நமக்குத் தெளிவாய்க் கேட்கிறது. ஆனால்...நமது அடிமைத்தனத்தின் மேல் தமது சுகவாழ்வைக் கட்டிக்கொண்டே ஆள்வோர் கூட்டம் அவள் உதயமாவதைத் தடுக்கக் கச்சைகட்டிக்கொண்டு நிற்கின்றனர். பணமும் பதவியும் படையும் காட்டிப்பயமுறுத்தி நிற்கின்றனர். ஆனால்..., ஆதவன் எழுச்சியை மேகங்கள் தடுத்துவிட முடியுமா...? முடியவே முடியாது...சூரியன் கிழக்கே உதிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் தான் நமது வெற்றியும்...! எத்தனை தடைகள் எதிர்த்

திடினும் .எத்தனை துன்பங்கள்மோதிடினும்..எத்தனை தோல்விகள் ஆரம்பத்தில் வந்து நம்மைத் தாக்கினும் ...நாம் உறுதிகொள்வோம்...போரிடுவோம் என்று. வெற்றி நமதுதான்...நிச்சயமாக.....! கண்டிப்பாகச் சுதந்திர தேவி உதயமாகியே தீருவாள்...இதோ உதயமாகிவிட்டாள்...!"

இந்தச் சமயத்தில் அந்தப் பின்னணிகளின் முழக்கம் அதிகமாகி ஆயிரம்பறவைகள் ஆரவாரிப்பதுபோல் முழங்கி நின்றது. மேடைமேல் கன்னி ராணி தோன்றி நின்றாள். பிரத்யேகமாக அவளுடைய முகத்திற்கு மாத்திரம் அதிகமான ஒளிதரும் படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தக் கூட்டம் ஆச்சரியத்தில் மூழ்கி எந்த உலகத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து நின்றது. ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் எதிர் பார அதிசயத்தினால் விதம் விதமான ஒலிகள் கிளம்பின...அலை அலையாகப் பாயும் கூந்தல், அதன்மேல் நட்சத்திரங்களைப்போல் மின்னிய தூய மலர்கள்..... செக்கச் சிவந்த உடைகள்...அதன்மேல் பொன்மலர் மாலை...அவள் முகமும் கைகளும பவளத்தில் கடைந் தெடுக்கப்பட்டவைபோல் மின்னின...அந்த உருவம் பார்ப்பவர்கள் மனதில் எவ்வளவு ஆழ்ந்த உணர்ச் சியை உண்டுபண்ணிய தென்பதை மதுபாலன் உணர்ந் தான். அவனே ஒருகணம் நினைவு மறந்துவிட்டான்.

அதன் பின் நெடு நேரத்திற்குப் பிறகு யோசனை செய்து பார்த்தபின்தான் சர்வாதிகாரியின் கூர்மை யான மதிவன்மை அவன் அறிவுக்குப் புலப்பட்டது. கன்னி ராணி தோன்றிய பின் சர்வாதிகாரி பேசிய வார்த்தைகள் அவன் மனதில் பதியவில்லை. அவன் அவளைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான்.

ஆலல் கூட்டத்திலிருந்தவர்கள் வெறிபிடித்தவர்கள் போல் குத்துக்கொண்டும் கூவிக்கொண்டும் இருந்தார்கள். அவன் பேசப் பேச ஆரவாரித்துக்கொண்டிருந்தார்கள். நடைபெறப் போகும் போராட்டத்தில் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துவிடுவதாகச் சபதம் செய்தார்கள்...கடைசியில் கரகோஷத்துடன் அளவுகடந்த உற்சாகத்துடன் பிரிந்தார்கள்...எல்லாவற்றையும் அவன் கவனித்தும் கவனியாதவனுக இருந்தான்.

கூட்டத்துடன் கூட்டமாக அவனும் கலந்து சென்றான். அப்போது அவன் திரும்பத்திரும்ப யோசித்தான். ஜனங்களை ஒரு வெறிகொண்ட நிலைக்குத்தூண்டிவிடக் கூடிய மகத்தான சக்தி அவளுடைய அந்தத் தோற்றத்திற்கு இருந்தது. அதை நன்றாக உணர்ந்து உபயோகித்துக்கொள்கிறான் சர்வாதிகாரி. அதுமாத்திரமல்ல...நடைமுறையிலிருக்கும் அரசாங்க யந்திரத்தின் கீழ் ஜனங்கள் உண்மையிலேயே அவதிப்படுகிறார்கள். அவர்களுடைய துன்பத்தைச் சுட்டிக் காட்டி அவற்றிற்கு விமோசனம் கொண்டு வருவதாய்க் கூறும் யாரையும் எளிதில் நம்பிவிடுகிறார்கள். சர்வாதிகாரி மிகமிகச் சாமர்த்தியத்துடன் தான் தன் திட்டங்களை வகுத்திருக்கிறான். அவனை வெல்வது அவ்வளவு சுலபமல்ல...!

மதுபாலன் இந்த நிகழ்ச்சிக்குப் பின் இன்னும் வேகமாகத் தலைநகரை நோக்கி யாத்திரை செய்யத் தொடங்கினான். எவ்வளவுக்கெவ்வளவு காலம் தாமதமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்வாதிகாரியின் பலம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கம் பலஹீனமடைகிறது. சர்வாதி

காரியின் வெற்றி அவனுடைய சர்வநாசம்தான்.. ... எனவே அதற்கெதிரான சக்திகளை அவன் சீக்கிரம் திரட்டியாகவேண்டும். அதற்காக அவன்பறந்தோடினான்.

ஆனால்...?

தலைநகரை அடைந்தபோது அவன் கேள்விப்பட்ட செய்தி அவனைத் திடுக்கிட வைத்தது. பூபாலன் முதலியோர் அப்போதுதான் அங்கு வந்து சேர்ந்திருந்தனர். பூபாலன் அரசனைப் பேட்டி காண விரும்பினான். ஆனால் அவன் முன்னே மந்திரி அவன் கையில் உத்தரவொன்றைத் திணித்தார். உடனே எங்கிருந்தாலும் மதுபாலனைக் கைதுசெய்யவேண்டும் என்பதுதான் அது.

சர்வாதிகாரியின் சூழ்ச்சியில் அரசரும் சிக்கிக் கொண்டாரோ என்று பூபாலன் சந்தேகித்தான். அமைச்சர் கூறினார், அரசரின் விசேஷ ஆலோசகராகவும் தூதுவராகவும் இருந்த அடியார் சிவப்பழத்தைக் கொன்றுவிட்டதாக மதுபாலன் மேல் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. சிவப்பழம் மதுபாலனின் அறையில் கொல்லப்பட்டுக் கிடந்தார். அத்துடன் அவனுடைய மனைவியும் கொல்லப்பட்டிருந்தாள். மனைவியின் நடத்தையில் சந்தேகம்கொண்டு இருவரையும் மதுபாலன் கொன்றுவிட்டதாக அரசர் கருதினார். அதற்கேற்றாற்போல் மதுபாலன் உடனுக்குடன் மறைந்துவிட்டான். குற்றவாளி மறைந்துவிட்டதாகக் குற்ற இலாகா குற்றம் சாட்டியது. எனவே குற்றம் ஒரு தலைப்பட்சமாகத் தீர்ப்பளிக்கப்பட்டு மதுபாலனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பூபாலன் அமைச்சரிடம் உண்மைகளை விளக்க விரும்பினான். ஆனால்

அதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. மறுபடியும் இரவு சந்திக்கலாம் என்று கூறிவிட்டு அமைச்சர் அரசரைக் காணச் சென்றுவிட்டார்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் மதுபாலனுக்குச் சிரிப்பு வந்தது. அரசருக்கு வேண்டிய ஒருவர் கொல்லப்பட்டார் என்றவுடன் காரணகாரியம் அறியாமல் உத்திரவு பறக்கிறது. இன்னொருவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அவன் ஒருகணம் சிரித்தான். இந்த அரசாங்க யந்திரம் கண்மூடித்தனமாக மனிதர்களுக்கு எத்தனையோ துன்பங்களைச் சிருஷ்டித்து வைத்துவிட்டது. அவர்களைத் தன் யதேச்சாதிகாரத்திலுள் எத்தனையோ அல்லல்களுக்கு ஆளாக்கிவிட்டது. துன்பத்திலும் வறுமையிலும் பிணித்து அவர்களை அடிமைகளாக்கி வைத்திருக்கிறது. அந்தக் கொதிப்புதான் மிக எளிதாக அவர்களைச் சர்வாதிகாரியின் ஆட்களாக மாற்றிவிட்டன. அரசாங்கத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் அனுபவத்தில் அவன் கண்டறிந்திருந்த இயற்கை அறிவு அவனுக்கு மிகச் சாதகமான, எளிய வழியை அமைத்துக்கொடுத்துவிட்டது.

மதுபாலனுக்கு இப்போது என்னசெய்வதென்று தெரியவில்லை. ஒருபுறம் சர்வாதிகாரியின் ஒற்றர்கள். மறுபக்கம் அரசாங்கத்தின் ஒற்றர்கள். இரு பக்கங்களிலும் அவன் தப்பவேண்டும். இதுவரை எப்படியோ காலம் கடத்திவிட்டான். இனி என்ன செய்வது...? மற்ற இடங்களில் ஓரளவு அவன் சமாளித்துக் கொள்ளமுடிந்தது. ஆனால் தலைநகரிலேயே எத்தனை நாட்களுக்கு மாறுவேஷத்தில் உலவ முடியும். பூபாலன் எப்படியும் சில நாட்களுக்காவது அவன் மறைந்

திருந்தாகவேண்டும் என்று கூறினான். எங்கே மறைவ தென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. பூபாலன் அதற்கு ஒரு ஏற்பாடுசெய்தான். நகரின் ஒதுக்குப் புறமாக இருந்த சத்திரம் ஒன்றிலே தற்காலிகமாக மதுபாலனும் சில வீரர்களும் தங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. சத்திர நிர்வாகி பூபாலனின் கட்டுப் பாட்டில் இருந்தான். அதனால் அங்கு அவனுக்கு எந்த வித ஆபத்தும் நேரிடாது என்று பூபாலன் உறுதி கூறினான்.

ஆனால்.....அங்கும் அவனால் தங்க முடியவில்லை. அதே இரவு சர்வாதிகாரியின் ஆட்கள் அந்தச் சத்தி ரத்தைத் தாக்கினர். அவர்களுக்கு எப்படியோ விஷ யம் தெரிந்துவிட்டது. சத்திரத்தில் இருந்த அத்தனை பேரும் கொலைசெய்யப்பட்டார்கள்...அந்த அல்லோல கல்லோலத்தில் யார் இறந்தார்கள் யார் பிழைத்தார் கள்...ஒன்றுமே தெரியவில்லை...

16. கால் நடையாக...!

சர்வாதிகாரியின் பிரச்சாரத் திட்டத்திலே அவள் ஒரு நாடகமேடை நடிகையாக இருந்தாள். அவ ளுடைய நடிப்பு ஆயிரக்கணக்கான எளிய உள்ளங் களிலே அனல் மூட்டிவிடப் போதுமானதாக இருந் தது. அந்த நடிப்பு ஏதோ ஒரு ஆவேசம்கொண்ட முழக்கத்தின்கீழ் மக்களை ஒன்று திரட்டப் போதுமான தாக இருந்தது. அவள் நடுங்கினாள். அந்த நடிப்பு... அவளுடைய உயிர்க் காதலனையும் அவனைச் சேர்ந்தவர் களையும் ஒரே அடியாக நிர்மூலம் செய்துவிட ஒரு மாபெரும் சக்தியை உருவாக்குவதில் முனைந்திருந்தது.

ஒவ்வொருகணமும் அவள் உள்ளம் போராடியது அவள் அதைச்செய்யத் தயாராக இருக்கவில்லை. ஒவ்வொரு விநாடியும் 'இல்லை.....நான் சர்வாதிகாரியின் கைப்பொம்மையாக இருக்கமாட்டேன்...' என்று சபதம் செய்துகொள்வாள். ஆனால்...அவனுடைய கட்டளையிடும் கண்களைக் கண்டவுடன் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடுவாள். அவனை எதிர்த்து நிற்கமுடியும் என்பதில் அவளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அவள் பெண் யாதொரு பாதுகாவலுமின்றி அந்தக் கொடியவனின் பிடியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அவளால் என்ன செய்யமுடியும்...?

ஆனால்..., மனச்சாட்சிக்கு மாறாக, உள்ள உணர்விற்கு விரோதமாக.....இந்த உலகில் எல்லாம் தனக்குரிய ஒரே துணையாக யாரைக் கருதுகிறாளோ, அவனுடைய அழிவுக்கு உதவும் இந்த வேலையை அவள் எத்தனை நாள் செய்துகொண்டிருப்பாள். அவள் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது. வழக்கம்போல் அன்றிரவும் அவள் தனிமையிலே தன் உள்ளத்தில் நிறைந்திருந்த துயரவெள்ளத்தைக் கண்ணீராய்க் கரைத்துக் கொண்டிருந்தாள், அழுது அழுது ஓய்கின்ற நிலையிலே அவள் உள்ளத்தில் ஒருபுது உணர்ச்சி தோன்றியது, ஆமாம் . அழுதுகொண்டிருப்பதால் என்ன பயன்..? அவளும்தான் மனிதப் பிராணியாகப் பிறந்திருக்கிறாள். அவளைப்போல் மனிதர்களாகப் பிறந்தவர்கள்...மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டங்களிலே எத்தனையோ பேர் உயிரைக்கூடத் தியாகம் செய்கிறார்கள் அந்தத் தியாகத்திலே இன்பம் காண்கிறார்கள். அவள் மாத்திரம் ஏன் சோற்றைத்தின்று ஊசலாடிக்கொண்

டிருக்கும் வெறும்பொம்மையாக இருக்கவேண்டும்...? அவள் மாத்திரம் ஏன் மனச்சாட்சிக்கு விரோதமாக ஒரு கொடியவனுக்கு அடங்கிக்கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டும்.

அவள் சிந்தித்துக்கொண்டே இருந்தாள். அன்றையப் பிரச்சாரக் கூட்டத்திற்குப் பிறகு அவர்கள் இருவர்மாத்திரம் அதே மாறுவேஷத்தில் நெடு நேரம் குதிரைகளின்மேல்சவாரிசெய்துகொண்டுபோனர்கள். பிறகு, பாலைவனம்போல் தோன்றிய ஏதோ ஒரு வெட்ட வெளியின் நடுவிலே இடிந்து கிலமாகிக் கிடந்த பாழும் மனை ஒன்றிலே தங்கினர்கள். அங்கே இவர்களைத்தவிர வேறு யாரும் இருக்கவில்லை. குதிரைகளை உள்ளேகொண்டுபோய் மறைவாக ஒரு இடத்தில் கட்டியவுடன் சர்வாதிகாரி அவளை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். வெளியிலேயே அவளைநிறுத்திவிட்டு அந்த இடத்தைத் தன் கையால் சுத்தம் செய்தான். பிறகு அவர்கள் கொண்டுவந்திருந்தவற்றில் இரண்டு சால்வைகளை விரித்துக் 'கண்ணம்மா...இந்த இரவைக் கொஞ்சம் கஷ்டத்துடன்தான் கழிக்கவேண்டும். எனக்கு இதைப்போல் துன்பங்களை அனுபவித்துப் பழக்கம். ஆனால் நீ...' என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தான்.

'நானும் இவற்றை எல்லாம் பழகிக்கொள்ளத்தான் வேண்டும்....' என்று சொல்லிவிட்டு அவள் பேசாமல் படுத்துக்கொண்டாள். படுத்தவுடன் கண்களை மூடிக்கொண்டாள். வழிநடந்த களைப்பிலேயே அவள் உறங்கவிரும்புகிறாள் என்று கருதிச் சர்வாதிகாரியும் படுத்துக்கொண்டான். உண்மையில் அவன்தான் மிகவிரைவில் களைப்பினால் அயர்ந்துவிட்டான்.

யோசனைசெய்துகொண்டே, படுத்துக்கொண்டிருந்தவள் நெடுநேரத்திற்குப்பிறகு திடுக்கிட்டவள் போல் எழுந்திருந்தாள். சர்வாதிகாரி அயர்ந்து தூங்குவதைக் கவனித்தாள். கீழே விரித்திருந்த சால்வையை எடுத்துப் போர்த்துக்கொண்டு கால்போன வழியில் நடக்க ஆரம்பித்தாள். அவள் உள்ளத்தில் ஒரே ஒரு எண்ணம்தான் இருந்தது. எப்படியும் தன் காதலனைக் கண்டுபிடிக்கவேண்டும் என்பதுதான் அது.

பொழுது புலரும் சமயத்திலே அந்த வழியிலே பாரம் ஏற்றிக்கொண்டு போய்கொண்டிருந்த வண்டி ஒன்றிலே இரண்டாம் முறையாக அவளுக்கு இடம் கிடைத்தது. அது ககனபுரிக்குப் போய்க்கொண்டிருந்தது.

17. மஞ்சு

ஜமீந்தார் மாளிகையின் முன்னால் ஏழைப் பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் தனக்கு ஏதாவது வேலை தரும்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஒன்றும் அறியாத பட்டிக்காட்டுப் பெண் போலக் காணப்பட்டாள். திக்கித் திக்கிப் பேசினாள். கந்தல் உடைகள்தான் அணிந்துகொண்டிருந்தாள். ஆனாலும் என்ன...? அவளைப் பார்த்தவர்கள் இரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவளுடைய குரல் பரிதாபகரமாக இருந்தது. கண்களில் கவலையும் ஏக்கமும் குடிகொண்டிருந்தன. உறக்கமின்மையாலும் அலைச்சலாலும் களைத்துப் போய்விட்டவள்போல் காணப்பட்டாள். தலைஎல்லாம் கலைந்து காற்றில் பறந்துகொண்டிருந்தது. வருகிறவர்

கள் போகிறவர்களிடம் எல்லாம் 'ஐயா எஜமானைப் பார்க்கணுங்க ஐயா... ஏழைக்கி ஒரு வேலை கொடுக்கச்சொல்லுங்க ஐயா...' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

மாடிமேல் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் ஜமீந்தார். அந்த எளிய சிறுமியின் கவர்ச்சி மிகுந்த தோற்றம் அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவர் உள்ளத்தில் குதுகுதுப்புத் தோன்றியது. அந்தப் பெண்ணை அழைத்து வரும்படிக் கட்டளையிட்டார். கண்களில் சாகஸம் மின்ன 'ஏ பெண்ணே... வீதியில் போகிறவர்களிடம் வேலை கேட்டால் கிடைக்குமா...?' என்றார்.

அவள் நடுங்குவதுபோல் நடித்துக்கொண்டு, 'ஏழைங்க எஜமான்... தெரியலையுங்க எஜமான்... திக்கில்லை எஜமான்... காப்பாற்றுங்க எஜமான்...'' என்றாள். ஜமீந்தார் சிரித்தார். 'சரிசரி .. போ... அந்தப் புறத்தில் ஏதாவது வேலை செய்யப்போ... அழகாய் இருக்கிறாய்... வேறு உடைகள் அளிக்கச் சொன்னேன் என்று சொல்லி வாங்கி உடுத்திக்கொள்...' என்று கூறினார். 'எஜமான் சலாமுங்க எஜமான்... சலாமுங்க எஜமான்...' என்று கும்பிடு போட்டுக் குதித்துக் கொண்டு ஓடினாள் பெண்.

இரண்டு நாட்களில் அவள் ஜமீன் மாளிகையின் ரகசியம் முழுவதும் தெரிந்துகொண்டாள். அங்கே எத்தனையோ பணிப்பெண்கள் இருந்தனர். யாருக்கு என்ன வேலை என்பது கிடையாது. பலவிதமான காரணங்களுக்குப் பலவிதமாக அங்கே சேர்க்கப்பட்டு எல்லோரும் ஆட்டுமந்தை போல் திரிந்துகொண்டிருந்

தனர். அவர்களில் பலரும் ஜமீந்தாருக்கு ஆசை நாயகிகளாகவும் இருந்தனர். வேறு வேலையே இல்லாததால் அவர்கள் உண்பதும் உறங்குவதுமான நேரம் போக மற்ற நேரங்களில் யாராவது கண்ணுக்குக்கிடைத்தவர்களுடன் காதல் புரிய வாய்ப்புக்கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்...

இந்தப் புதிய பணிப்பெண் இளைய ஜமீந்தார் மாளிகையைச் சுற்றிச் சுற்றி வலம் வருவதில் ஈடுபட்டிருந்தாள். நெடுநாட்களாக அதில் யாருமே வசிக்காததால் பாழடைந்து இருள் மண்டிப்போய்க் கிடந்தது. வேலைக்காரர்கள்கூட அந்தப்பக்கம் போவதை மறந்து விட்டனர். குப்பையும் கூழமுமாகக் கிடந்த அறைகள் சிலவற்றை அவள் நன்முகச் சுத்தம் செய்து வைத்தாள். இரவுகளில் யாரும் கவனியாத வண்ணம் அங்கே சென்று சிறிய மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றி வைத்துக்கொண்டு மணிக் கணக்காக உட்கார்ந்த வண்ணம் காத்துக்கொண்டிருந்தாள். சீக்கிரத்தில் ஒருநாள் அவன் அங்கு வருவான் என்று அவள் எதிர்பார்த்தாள். சர்வாதிகாரியின் ஒற்றர்கள் அங்கும் இருப்பார்கள் என்பதில் அவளுக்குச் சந்தேகமே இருக்கவில்லை. அவள் கூடுமானவரை மறைந்து மறைந்தே வசித்தாள். இந்தப்பெரிய ஆபத்திலிருந்து எப்படித் தப்ப முடியும் என்பது அவளுக்கு விளங்கவே இல்லை.

நாளாக நாளாக அவளுடைய நம்பிக்கைமறைந்து கொண்டிருந்தது. உயிரோடு கடைசியாக ஒருமுறை அவனைப் பார்க்கமுடியுமா என்பதுகூட அவளுக்குச் சந்தேகமாகப்பட்டது. ஆனலும் அவள் இரவுகள்

பூராவும் விடிய விடிய அங்கே அந்த அரண்மனையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருப்பதில் தவறவில்லை

அவளுடைய ஆசை வீண்போகவில்லை. எதிர் பார்த்ததைப்போலவே ஒரு நாள் நள்ளிரவில் அங்கே ஒரு மனிதன் வந்தான் பைத்தியக்காரன் போல் தலையை விரித்துப்போட்டுக்கொண்டு கிழிந்த உடை கள் அணிந்துகொண்டிருந்தான். அவன்தான் வந்து விட்டான் என்று அவள் நினைத்தாள். ஆனால் அந்த மனிதன் அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்ததும் 'ஆ...கன்னி ராணீ...நீங்களா...? வணக்கம்...' என்று சர்வாதிகாரியின் ஆட்கள் செய்வதைப்போல் வணக் கம் செய்தான். அவள் உயிர் அவளிடம் இருக்கவில்லை கைகால் ஆடாமல் பேச நா எழாத நிலையில் நின்றுள். அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பின்னலிருந்து பாய்ந்துவந்த வேறொருவன் கட்டாரியால் ஒரே குத் தில் அந்தப் பைத்தியக்காரனைப் பிணமாக்கினான். அவள் மூர்ச்சைபோட்டு விழப்போனாள். அவன் அவளைத் தன் மார்மேல் தாங்கிய வண்ணம்... "தேவீ ...நான் தங்களை இங்கு எதிர்பார்க்கவில்லை..." என்று அவன் தழுதழுத்த குரலில் கூறினான் அவள் அவன் முகத்தைப் பார்த்தாள் அடுத்தகணம் அவன் மார் பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுக ஆரம்பித்துவிட்டாள்.

அவன் அவளை மெதுவாக அழைத்துச்சென்று ஒரு ஆசனத்தின்மேல் அமர்த்தினான் மெதுவாக அவளைத் தன் மடியில் சாய்த்தவனாய், "கண்ணம்மா ...அழுதுகொண்டிருக்க நேரமில்லை. நான் உன்னை இங்கு எதிர்பார்க்கவில்லை. இங்கிருந்து நாம் தப்பிப் போயாகவேண்டும்...வெளியே சர்வாதிகாரியின் படை

கள் நாலாபக்கங்களிலும் போரிட்டிக்கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஒற்றர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதோ இவன் இன்று காலை முதல் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். எனக்கு வேறு புகலிடம் கிடைக்கவில்லை. அதனாலேயே சாகஸமாக இங்கேயே அழைத்து வந்தேன்...! கண்ணம்மா ...இப்போது எனக்கு ரொம்பவும் பசியாக இருக்கிறது. எப்படியாவது ஏதாவது கொஞ்சம் சாப்பிட வேண்டும்..." என்றான்.

"கொண்டுவருகிறேன்," என்று சொல்லிவிட்டு எழுந்திருந்தாள் பிறகு மீண்டும் அவன் அருகே அமர்ந்து அவன்மேல் சாய்ந்தவாறு அவன் நெற்றியில் முத்தமிட்டாள். மறுபடியும் ஒரு கணம் அவனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பிறகு அவள் புறப்பட்டாள்.

அவள் சமையல்கட்டை அடைந்திருக்கமாட்டாள் நாலா புறங்களிலும் இடி முழக்கம்போல் படைகளின் ஆரவாரம் கிளம்பியது. அவன் ஒரே பாய்ச்சலில் வாளை உருவிக்கொண்டு கிளம்பினான்.

அவள் அவசரம் அவசரமாக கைக்குக்கிடைத்த உணவுப் பொருள்களை எடுத்து ஒரு தட்டில் வைத்துக் கொண்டிருந்தாள். அரைத் தூக்கத்தில் எழுந்திருந்த சமையல்காரர்களும் பரிசாரகர்களும் செய்வதறியாமல் மூலைக்கு மூலை ஓடிக்கொண்டிருந்தனர். எங்கும் ஒரே குழப்பமும் கலவரமுமாக இருந்தது. அவன் அங்கே உருவிய வாளுடன் ஓடிவந்தான். நிதானமாக அவள் அருகே சென்று ஒரு கையால் அவளை அணைத்துக்கொண்டவளாக வாளை ஒருபுறமாக வைத்துவிட்டு

அவள் தட்டில் எடுத்துவைத்திருந்த பலகாரங்களையும் பழங்களையும் சாவகாசமாகச் சாப்பிட ஆரம்பித்தான். வீரர்கள் உருவிய வாட்களுடனும், ஈட்டிகளுடனும் ஓடிக்கொண்டிருந்தனர். குதிவைத்த செறுப்புகள் தரையில் மோதும் ஓசையாலும் பாய்ந்து செல்லும் குதிரைகளின் குளம்படி ஓசையாலும் கலவரத்திலும் செய்வதறியாமல் பிதற்றுகிறவர்களின் குரலாலும், போர்க் களத்தில் அடிபட்டு விழுகிறவர்களின் அவலக் கூச்சலாலும் மாளிகை முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அவன் நடுங்கிக்கொண்டிருக்கும் தன் உயிர்க் காதலியை மார்புறத்தழுவியவனாய் மிக மெதுவாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் வயிறுரச் சாப்பிட்டு எவ்வளவோ நாட்களாய்விட்டன. அதைப்போன்ற உணவை ருசித்து எத்தனையோ காலமாகிவிட்டது.

குழப்பமும் கூச்சலும் மிகுதியாயிற்று. களத்தை நோக்கி ஓடிய வீரர்கள் திரும்பி ஓடிவந்தனர். அரண்மனைக்குள்ளேயே கொள்ளைக்காரர்கள் புகுந்து விட்டனர். கண்ட இடங்களில் கைக்குக்கிடைத்த பொருள்கள் சூறையாடப்பட்டன. வேலைக்காரர்கள் அலறிக் கொண்டு கூவி அழுதனர். கொள்ளைக் கூட்டம் கண்ணிற்பட்டவர்களைக் கொன்று தீர்த்தது. கைக்குக் கிடைத்த பெண்களைக் கற்பழித்தது. அவன் திரும்பிப் பார்த்தான். கொள்ளைக்காரன் ஒருவன் உருவிய வாளுடன் அவனை நோக்கிப்பாய்ந்து வந்தான். அவன் லாவகமாகத் தலையை வளைந்துகொடுத்தான். அவன் தலை குப்புறத் தரையில் மோதி விழுந்தான், தன் அருகில் இருந்த தண்ணீர்க் கூஜாவினால் ஓங்கி அவன் தலையில் அடித்தான். அவன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்

தான். மிக விரைவில் அவனுடைய உடைகளைக் களைந்து தான் அணிந்துகொண்டு அவளையும் ஒரு கையில்பிடித்து இழுத்துக்கொண்டு இருளில் மறைந்து ஓட முயன்றான்.

"கன்னி ராணி..." என்ற குரல் விண்ணைப் பிளந்தது.

"கன்னி ராணிக்கு..."

"ஜே...ஜே...ஜே..."

"கன்னி ராணிக்கு ஜே..." அந்த முழக்கம் அந்த காரத்தைப் பிளந்துகொண்டு வானத்தில் சென்று முட்டியது, ஆயிரக்கணக்கான குரல்கள் அந்த முழக்கத்தை எதிரொலித்தன. ஆயிரக்கணக்கான வீரர்கள் வெறிகொண்டவர்கள் போல் கூச்சலிட்டுக் குதித்தனர் படைத்தலைவன் வந்து அவளை வணங்கினான். அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனுல் தன் கண்களையே நம்பமுடியவில்லை. "தேவீ ...தாங்கள் தானை...?" என்று ஆர்வத்தால் கூவிவிட்டான்.

அவன் தன் தலையிலிருந்த கவசத்தைக் கழற்றினான். அவன்தான் 'மஞ்சு'.....!

"தேவீ.." என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். ஜமீந்தாரின் உடலை என் கையால் சுக்கு நூறுகக் கிழித்தெறிந்துவிட்டேன். இந்த ஜமீந்தார் மாளிகையைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் அத்தனை பேரையும்...ஒரு குஞ்சு குழந்தையைக்கூட விடாமல் கொன்று தீர்த்துவிட்டேன். இங்கே இருந்த அத்தனை வஸ்துக்களையும் ஒன்றைக்கூட விடாமல் நாசம்செய்துவிட்டேன். அன்று நம்முடைய அரண்மனை இந்தப் படுபாவியின் கரத்தால் தீ மூட்டப்பட்டு எந்தக்கதியை

அடைந்ததோ... அந்தக் கதிக்கு இந்த ஒரே இரவில் கொண்டுவந்துவிட்டேன். தேவீ.....என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். நான் தங்கள் அடிமை.

'சபாஷ்...மஞ்சு...இன்னும் ஒரே ஒரு ஆளைபாக்கி யாகவிட்டுவிட்டாய்...' என்ற ஒரு உரத்த குரல் கிளம் பியது. சர்வாதிகாரி நிதானமாகக் குதிரைமேல் அமர்ந்தபடியே வந்துகொண்டிருந்தான். தன் கையி லிருந்த உருவிய வாளால் மதுபாலன் தலையில் அணிந் திருந்த கவசத்தைத் தட்டிவிட்டு, " இதோ இளைய ஜமீந்தார் " என்றான் சர்வாதிகாரி.

" இளைய ஜமீந்தார்..."

அந்தக் குரல் நாலாபக்கங்களிலும் எதிரொலித் தது,

அவள் கதிகலங்கிவிட்டாள்.

" நமது ராணியை உரிய மரியாதையுடன் கோட்டைக்குக் கொண்டுவந்துசேர். ராணியின் கட் டளைப்படி இளைய ஜமீந்தாரை நடத்து. எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன..." என்று சொல்லிவிட்டுச் சர்வாதிகாரி வந்த வழியே திரும்பினான்.

18 முடிவு

ஆயுதபாணிகளான கள்வர்களுக்கு நடுவிலே மது பாலன் கைகளைக்கட்டிக்கொண்டு பெருமிதத்துடன் நின்றான். வாழ்வா, சாவா என்ற சந்தேகம் அவன் மனதிலே இருக்கவில்லை. அவன் எதற்கும் தயாராக இருந்தான். வாழ்வானாலும் சாவானாலும் அதிலே பங்கு கொள்ள அவளும் தயாராக இருந்தாள். அவன் மனம் பூரணமாக நிரம்பியிருந்தது. அவனுடைய உள்ளம்

விரிவான தத்துவ ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருந்தது. கண்கள் குழிவிழும்வரை வாழ்ந்தவர்கள் கண்டது தான் என்ன...? கைகால் நடுங்கி உடல் வலுவிழந்து கூனிக்குறுகி, புலன்கள் செயல் மறக்கக் காணவும், கேட்கவும், பேசவும்கூடத் தடுமாறும் நிலைவரும் வரை வாழ்ந்தவர்கள்தான் உலகத்தில் கண்டதுதான் என்ன? அனுபவித்ததுதான் என்ன...!

வாழ்க்கை ஒரு சுமை...! சுமைதான் இந்த வாழ்க்கை..!

அது ஒழிந்துபோவதானால் நிச்சயமாக ஒழிந்து போகட்டும். அவனுக்கு கவலை இருக்கவில்லை. அவனுடன் வாழ அல்லது மடிய உண்மையான காதலுள்ள ஒரு களங்கமற்ற ஜீவன் தயாராக இருந்தது அவன் அவளை உயிரினும் அதிகமாக நேசித்தான். அவளோடு அடையும் எந்தக் கொடிய தண்டனையும், நரகவேதனையும் இன்ப மயமானதாகவே இருக்கும் என்று கருதினான்.

ஆனால் அப்போது அவள் அவனைப்போல் அங்கே கைதியாக நின்றுகொண்டிருக்கவில்லை. உள்ளே அழைத்துச்செல்லப்பட்டிருந்தாள். அவன் சுற்றுப் புறத்தை மீண்டும் ஒருமுறை கவனித்தான் சர்வாதிகாரியின் கோட்டைகளை எல்லாம் தாண்டி மலைகளுக்கு மத்தியிலே ஒரு குகையின் அருகே அவன் நிறுத்தப் பட்டிருந்தான். அந்தக் குகை ஏதோ ஒரு சாதாரணமான குகையைப்போல்தான் அவனுக்குக் காட்சியளித்தது. அருகில் இருந்த காவலர்கள் ஏதோ கண்ணைச் சிமிட்டிப் பேசிக்கொண்டதை அவன் கவனிக்கவில்லை.

நகராக்களின் முழக்கம் கேட்டது மெல்ல மெல்ல நெருங்கி அதிகமாக அருகில் வந்தது. தேர்ந்தெடுத்த

வீரர்கள் நூற்றுக் கணக்கான பேர் வரிசையாகவந்து நின்றனர். அவர்களுக்குப்பின்னால் குதிரைகளின்மேல் சர்வாதிகாரியும், ராணியும், மஞ்சுவும் வந்தனர்.

சர்வாதிகாரி கண்ணம்மாளின் முகத்தையே பார்க்கவில்லை. அதிலிருந்து அவன் அவளிடம் ஒன்றுமே பேசவில்லை என்பது தெரிந்தது.

அவர்கள் குதிரைகளிலிருந்து கீழே இறங்கினர். சர்வாதிகாரி முதல் தடவையாகக் கண்ணம்மாளைப் பார்த்தான். அந்தப் பார்வை அவளை அருகிலிருந்த மேடை ஒன்றின்மேல் ஏறி நிற்கும்படிக் கட்டளையிட்டது. அவள் மெதுவாக நடந்து சென்று அந்தப்பீடத்தின்மேல் ஏறி நின்றாள். சர்வாதிகாரி பேசினான்.

"என்னுடைய அன்புக்குப் பாத்திரமான வீரர்களே...! இன்று ஒரு புனிதமான நாள். நமது அரசி நமக்கு மீண்டும் கிடைத்துவிட்டாள். நாம் ஒளிந்து திரிந்த சிறு கூட்டமாக இருந்த நிலிருந்து அரசாங்கத்தை நேரடியாக எதிர்த்துத் தாக்கும் ஒரு மகத்தான சக்தியாக வளர்ச்சி அடைந்திருக்கும் இந்த நேரத்திலே நமது ராணி மீண்டும் நம்மை அடைந்த இந்த நிகழ்ச்சி நமது வெற்றியை மேலும் நிச்சயப் படுத்துகிறது...

"அதே சமயத்தில் இன்று...நம்முடைய ஜென்ம வைரியும் நம்மால் ஏற்கெனவே மரண தண்டனை விதிக்கப்பட்டு நமது வீரர்களை ஏமாற்றிக் கொலை செய்து தப்பிச்சென்று ஒளிந்து திரிந்துகொண்டிருந்த வனுமான இளைய ஜமீந்தாரும் நம்மிடம் அகப்பட்டிருக்கிறான். இது நமக்கு வெற்றிமேல்வெற்றியாகும்...

இந்த இளைய ஜமீந்தார் யார்...?

நமது அரசி தனது மனையிலே தந்தையுடனும், ஆள் அம்புடனும் நிர்ச்சிந்தையாக உறங்கிக்கொணடிருந்த சமத்திலே அவர்கள் வசித்த மாளிகைக்குத் தீ மூட்டி... அவருடைய தந்தையும், வேலையாட்களும், கன்றுகாலிகளும்கூட உயிருடன் வெந்து சாம்பலாகும்படிச் செய்த மகா பாபியான ஜமீந்தாரின் மகன். அந்த ஜமீந்தார் நாம் ஒழிக்க விரும்பும் இந்த அரசாங்கத்தின் தூண். அரசனின் கையாள். ஏழை எளியவர்களை ஈவிரக்கமின்றி வெட்டி வதைத்துக் கசக்கிப் பிழிவதே தொழிலாய்க்கொண்ட துரோகி...

அவனை நமது புதிய பிரதம சேனாதிபதி ஒழித்து விட்டார்... இது நமக்குக் கிடைத்திருக்கும் மற்றும் ஒரு வெற்றி...!

எனது அன்புக்குரிய வீரர்களே...!

இன்று நாம் தொடுத்திருக்கும் விடுதலைப் போர் உச்சநிலையில் நடந்துகொண்டிருக்கிறது. பிறர் அறிய முடியாத நிலையில் எவ்வளவோ சாமர்த்தியத்துடன் அமைக்கப்பட்டிருந்த மறைவிடம் இதோ... இந்தத் துரோகியினால் அரசனுக்குக் காட்டிக்கொடுக்கப் பட்டு விட்டது. நமது வீரர்கள் அரசனைத் தலை நகரிலேயே மடக்குவதற்காகப் போரிட்டுக் கொண்டிருக்கையில் அரசன் தானே ஒரு படையைத் திரட்டிக்கொண்டு வந்து இப்போது இந்தக் கானகத்தை முற்றுகையிட்டுக்கொண்டிருக்கிறான். பாவம் அவனுக்கு நமது வலிமை தெரியாது. பொறியில் அகப்பட்ட எலியைப் போல் இன்னும் சிறிது நேரத்தில் அவன் இங்கு கைதியாக வந்து நிற்பான். அதற்கு முன்னால் அந்த அரசனுக்கா ஆண்டியாக வந்து நம்மை வேவு பார்த்துச்

சென்ற இந்த மரண தண்டனைக் கைதிக்கு.....அவன் செய்த மகத்தான குற்றத்திற்குத் தகுந்த பாடம் கற்பித்தாகவேண்டும். இவனுக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அதைச் சித்ரவதைசெய்து சிறுகச்சிறுகக் கொல்லும் தண்டனையாக மாற்றி நமது ராணியின் சார்பாக நான் உத்திரவிடுகிறேன்.

சர்வாதிகாரி மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தான்...அதன் முன் பயங்கரமான குரலில் கீச்சென்று கத்திக்கொண்டு அவள் அவனை நோக்கி ஓடினாள். மதுபாலனை இறுகக்கட்டிக்கொண்டு தெம்பித் தெம்பி அழுதவளாய் " இல்லை . அவரை மன்னித்துவிடுங்கள் ...எனக்காக மன்னித்துவிடுங்கள்..." என்று அரற்ற ஆரம்பித்துவிட்டாள்.

அவள் அங்கே ராணியாகவும் கட்டளையிடுபவளாகவும் இருக்கவில்லை. தன் கண்ணீரால், கதறலால், அழுகையால், ஆர்ப்பாட்டத்தால் சர்வாதிகாரியின் மனதை மாற்றவிரும்பும் ஒரு பேதைப் பெண்ணுகமாத்திரமே இருந்தாள். சர்வாதிகாரியைத் திரும்பிப் பார்க்கக்கூட அவளுக்குப் பயமாக இருந்திருக்க வேண்டும். அவள் அவனைப் பார்க்கவே இல்லை அத்தனை வீரர்களுக்கு மத்தியில் அவள் மதுபாலனைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்தாள் தன் ஒரே குழந்தையின் உயிருக்காக வாதாடும் தாயைப்போல் அவள் கூவி அழுதுகொண்டிருந்தாள்.

சர்வாதிகாரி இதை எதிர்பார்க்கவில்லை. அவளுடைய தவறை உணராதவன்போல் மீண்டும் அவளை ராணியாக்கித் தன்னுடைய கைப்பாவையாக ஆட்டி

வைக்க முடியும் என்று அவன் நம்பியிருந்தான். அவளுக்கு தன்னிடம் எவ்வளவு பயம் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. தவிர அரசனுடைய படைகள் அவனுடைய வீரர்களின் முன்னால் திக்கு முக்காடிக் கொண்டிருந்தனர், வெற்றி அவனுடையதுதான் என்பது நிச்சயமாகத்தெரிந்தது. அந்த அளவுகடந்த உற்சாகத்திலே, தைரியத்திலே.....அவன் தான் செய்வதென்ன என்பதைப்பற்றித் துளிகூட யோசிப்பவனாக இருக்கவில்லை. அவள் தன் எதிரி., தன் படைவீரர்களின் எதிரில் இப்படிக் குழந்தையைப்போல் நடந்து கொண்டதைக் கண்டதும் அவனுக்கு ஆத்திரம் வந்தது...

"கண்ணம்மா.. இது என்ன வேடிக்கை இந்தப் பக்கம் வா..." என்று கூவினான்.

"இல்லை...அவரை மன்னித்துவிட்டதாய்க் கூறுங்கள்....." என்று குழந்தையைப்போல் கெஞ்சினாள் அவள்.

"கண்ணம்மா...! மன்னிப்பா...? அவனுக்கா...?"

"ஆம் .! எனக்காக...! நான் உயிர் வாழவேண்டுமானால் அவரும் வாழ்ந்தாகவேண்டும்..."

"இல்லை.. முடியாது! முடியவே முடியாது..."

"அப்படியானால் அவருக்களிக்கும் மரண தண்டனையை எனக்கும் அளியுங்கள்..."

"உறங்கும்போது உன் தந்தையின் மாளிகைக்குத் தீ வைத்து அவரை உயிருடன் எரித்துக்கொன்றவள் நீயும்தானே...?"

"இல்லை. அதைப்போல் அவரும் இல்லை..."

"ஆனால் அவன் தந்தை..."

" தந்தையைத் துரோகியாக மதிக்கும் மக்களும் இருக்கின்றனர்..."

" அதனால்...? "

" செய்யாத குற்றத்திற்காக ஒருவரைத் தண்டிப்பதா..."

" நான் விதித்த தண்டனை விதித்ததுதான்...! "

" அப்படியானால் அந்த தண்டனையை எனக்கும் விதியுங்கள்."

சர்வாதிகாரியின் கோபம் அளவுகடந்துவிட்டது. "இவர்கள் இருவரையும் இழுத்துக் குகையில் தள்ளுங்கள்..." என்று கூச்சலிட்டான். வீரர்கள் தயங்கினர்கள். " உம் சீக்கிரம்..." சர்வாதிகாரி கர்ஜித்தான்.

இரண்டு வீரர்கள் முன்னால் வந்தனர். அதுவரை சிலைபோல் நின்றுகொண்டிருந்த மஞ்சு வாளை உருவிக் கொண்டு துள்ளி அவர்கள் முன்னால் வந்து நின்றான். ' நில்லுங்கள்..." என்று கூவினான். " நில்லுங்கள் " என்றான் மீண்டும். அவர்கள் நின்றனர். " நீங்கள் ராணிக்கு விஸ்வாசமாய் இருப்பதாய்ச் சபதம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்களே தவிர சர்வாதிகாரிக்கு அல்ல..." என்று உரத்த குரலில் கூறினான். வீரர்கள் ஈட்டிகளைப் பின்னால் இழுத்துக்கொண்டு மௌனமாய் நின்றனர்.

சர்வாதிகாரியின் ஆத்திரம் அளவுகடந்து விட்டது. " இவனையும் சிறையில் தள்ளுங்கள்..." என்று கர்ஜித்தான்.

" என்னையுமா...? "

மஞ்சு கம்பீரமாக நின்று அந்த வீரர்களைப் பார்த்தான். அவனுடைய ஆட்கள்தான அங்கே நின்றனர். சர்வாதிகாரி படைதிரட்டினபோது தானுகத் தனியாக வந்து சேர்ந்தவன் அல்ல மஞ்சு. அவன் தனக்கென்று பொறுக்கி எடுத்த வீரர்களுடன் ஒரு கூட்டம் அமைத்துக்கொண்டிருந்தான். அந்தக் கூட்டம் அவனுக்கு மிகவும் கட்டுப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தினருடன்தான் அவன் சர்வாதிகாரியுடன் சேர்ந்தான். சர்வாதிகாரியின் படைகளிலே அது ஒரு தனிப்பிரிவாக இருந்தது. அந்தப்படைதான் ஜமீந்தாரை ஒழிப்பதற்காக அனுப்பப்பட்டது. அது அளவிலும் ஆற்றலிலும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகரித்திருந்தது ஆனல் மிதமிஞ்சிய வெறியிலே இருந்த சர்வாதிகாரி எதையும் கவனிக்கத் தயாராக இருக்கவில்லை. ஆத்திரத்துடன் வாளை உருவிக்கொண்டு, "உம்...இவர்களைச் சிறையில் தள்ளுங்கள் என்று முழங்கிக்கொண்டு முன்னுல் வந்தான்.

மஞ்சு தன்னுடைய வலிமையை நன்முகக் கணக்கிட்டுக்கொண்டான். சர்வாதிகாரியின் வாளை அலட்சியமாகத் தட்டி எறிந்துவிட்டு "இவனை இழுத்துச் சிறையில் தள்ளுங்கள்..." என்று கூவினுன். அவனுடைய வீரர்கள் பாய்ந்து வந்தனர். சிறிது நேரம் அங்கே பெரும் குழப்பமாக இருந்தது. ஆனல் சர்வாதிகாரி குகையில் தள்ளி அடைக்கப்பட்டுவிட்டான்.

மஞ்சு ஒருகணம் யோசித்தான், இனி நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி..." அம்மா..... இனி நீங்கள் சற்று நேரம் உண்மையான ராணியாக இருக்கவேண்டும். சர்வாதிகாரியின் படை வீரர்களை

நாம் ஏமாற்றியாகவேண்டும்.....இனி நாம் எப்படித் தப்புவது என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை...'' என்றான். தூரத்திலிருந்து வீரன் ஒருவன் குதித்துக்கொண்டு ஓடிவந்தான்.

''மகாராணி.....மன்னர் கைதியாக்கப்பட்டார் அரசாங்கப் படைகள் சிதறி ஓடுகின்றன...'' என்று கூவினான்.

''சரி...நீ போ.....நாங்கள் வருகிறோம்,'' என்று உரத்த குரலில் உத்திரவிட்டான் மஞ்சு. அவன் சென்றவுடன் ''இனி நாம் இங்கே நிற்கக்கூடாது கோட்டைக்குச் செல்வோம்...'' என்றான்.

மதுபாலன் ஓடிப்போய் அருகே இருந்த வீரன் ஒருவனின் உடைகளை வாங்கி உடுத்துக்கொண்டான். மஞ்சுவின் அருகே வந்து, ''நாம் கோட்டையிலிருந்து நம்முடைய வீரர்களைக்கொண்டு அரசனையும் இதே சிறையில் தள்ளிவிட ஏற்பாடுசெய்வோம். நமது மகாராணி நாடு முழுவதையும் நாட்டின் மக்களுக்காக்கி விட்டதாக பிரகடனப்படுத்திப் படைகளைக் கலைத்து விடுவோம்...'' என்று கூறினான்.

மஞ்சு ஆனந்தத்தில் துள்ளிவிட்டான். ''ஆம்... அதுதான் சரி...'' என்று கூவினான்.

அந்தக் கூச்சலிலே இருள் சூழ்ந்துகிடந்த நாட்டிலே, இனபமயமான ஜோதி சுடர்விட்டதுபோலிருந்தது அந்தச் சுடரின் ஒளியிலே, மஞ்சுவின் சபதம் 'பளிச்' சென்று தெரிந்தது ராணிக்கு.

சாதாரண ஒரு வேலைக்காரன், தன் சபதத்தை முடித்துக்கொண்டதால், தன்னை விட உயர்ந்த வீரனைக்

கிக்கொண்டான். எஜமானின் உண்மை ஊழியனாக இருக்கும் பண்பு தனக்குண்டு என்பதை காட்டிவிட்டான். தன் தந்தையின் துர்மரணத்தால் ஏற்பட்ட வேதனைப் புண்ணை ஆற்றிய வைத்தியனாகவும் ஆகிவிட்டான், என்ற எண்ணங்கள் ராணியின் மனதிலே சுழன்றன. மஞ்சுவைப் பார்த்தாள் ராணி. அந்தப் பார்வையிலே, நன்றி உணர்ச்சி நடமாடிக்கொண்டிருந்தது.

* * * *

சர்வாதிகாரியும் மன்னனும் இருட் குகைக்குள்ளே சந்தித்தனர் மண்ணைச மன்னர்களான இருவரும் முதன் முதலில் தங்கள் பிரதிபிம்பத்தைப் பார்ப்பதாகவே நினைத்தனர். ஆனால்...அதுவேறு ஆள்...அவன் யார் என்பதை உணர்ந்துகொண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டனர். சாகும்வரை ஒருவருடன் ஒருவர் அவர்கள் பேசிக்கொள்ளவே இல்லை

* * * *

இருட்குகை வேறொன்றில் முதன் முதலாக மதுபாலனும் ராணியும் சந்தித்தனர், ஆனந்த வெள்ளத்திலே அவர்கள் இருவரும் ஒருவராகிவிட்டனர். இதயம் நிறைந்த அன்புக் காதலிலே அவர்கள் என்றுமே பிரியவில்லை.

முற்றிற்று.

